III. 21

36.3

உ

கணபதி துணை

தாண்டவராய கவிராயர் இயற்றிய

திருமயிலை யமக அந்தாதி

மூலமும் பழைய உரையும்

பதிப்பாசிரியர்:

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

பலவான்குடி

சிவநேசன் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

1936

Copyright Registered] [விலை அணா 6

III. 21

உ

கணபதி துணை

தாண்டவராய கவிராயர் இயற்றிய

திருமயிலை யமக அந்தாதி

மூலமும் பழைய உரையும்

MAHAMAHOPADHYAYA DR. V. SWAMINATHA AIYAR LIBRARY

பதிப்பாசிரியர்:

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

பலவான்குடி

சிவநேசன் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

1936

Copyright Registered] [விலை அணா 6

இப்புத்தகத்தில் அடங்கியவை

				பக்கம்.
1.	முகவுரை	...	...	1
2.	தாண்டவராய கவிராயர்	...	...	8
3.	திருமயிலை யமக அந்தாதி மூலமும் உரையும்		...	1–66
4.	வாழ்த்து	...	...	67
5.	அரங்கேற்றியவர்	...	...	67
6.	இயற்றியவர்	...	...	67

பிழையும் திருத்தமும்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
7 (முகவுரை)	5	என்னை	எண்ணை
7	21	ஆர	ஆர-
௸	24	ஏண் இல்	ஏண் இல்-
8	19	செவ்	செல்
13	36	பௌத்தின்	பௌவத்தின்
55	34	சிலைத்தன்று	சிலைத்தகன்று
67	9	மறங்கேறச்	மரங்கேறச்
௸	15	தமிச்சிங்கமே	தமிழ்ச்சிங்கமே

உ

கணபதி துணை

முகவுரை

திருச்சிற்றம்பலம்

மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட் டிடங்கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பி னுருத்திரப் பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.

கானமர் சோலைக் கபாலீச் சரமமர்ந்தான்
தேனமர் பூம்பாவைப் பாட்டாகச் செந்தமிழான்
ஞானசம் பந்த னலம்புகழ்ந்த பத்தும்வல்லார்
வானசம் பந்தத் தவரொடும் வாழ்வாரே.

திருச்சிற்றம்பலம்

சிலகாலத்துக்கு முன்வரையில் இத்தமிழ்நாட்டில் இருந்து வந்த தமிழ்ப்பள்ளிக்கூடங்களில் தமிழ் கற்கும் மாணவர்களுக்கு முதன்முதலில் நீதிநூல்களும் பிரபந்தங்களும் கற்பிக்கப்பட்டு வந்தன. அவற்றுள் அந்தாதிநூல்கள் அம்மாணாக்கர்களுடைய ஞாபகசக்தியை விருத்தி செய்து, பல புதிய சொற்களையும், பதங்களைப் பிரித்துப் பொருள்கொள்ளும் முறையையும், பிறவற்றையும் கற்பிப்பதற்கு உரிய கருவிகளாக இருந்தன. ஆதலின் சென்ற சில நூற்றாண்டுகளில் பல அந்தாதிகள் இயற்றப்பட்டன. தமிழ்ச் செய்யுள் இயற்றும் பழக்கத்தை மேற்கொண்டவர்கள் ஆரம்பத்தில் இத்தகைய பிரபந்தங்களையே இயற்றுவது வழக்கம். தமிழ்பயிலும் மாணாக்கர்களுடைய ஆற்றலை அளப்பதற்கு இப்பயிற்சி ஒருசாதனமாக இருந்தது; தம்முடைய மாணாக்கர்களைக் குறித்துப் பேசுகையில், இவன் இத்தனை எழுத்துக்களைத் திரித்துப்பாடுவானென்று என் இளமைக்காலத்தில் சில முதிய கவிஞர்கள் சொல்லக்கேட்டிருக்கிறேன்.

தமிழ் நூல்வகைகளில் இவ்வந்தாதிகள் தொடர்நிலைச்செய்யுட்களில் ஒன்றாகிய சொற்றொடர் நிலையின்பாற்படும்; "செய்யுளந்தாதி சொற்றொடர் நிலையே" (தண்டியலங்காரம்.) அந்தாதியென்பது இரண்டு அடிகளுக்கும், இரண்டு செய்யுட்களுக்கும் இடையே காணப்படும்; இவற்றுள் இரண்டு அடிகளுக்கிடையில் அமைவதை அந்தாதித்தொடையென்றும், இரண்டு செய்யுட்களின்

இடையில் அமைவதைச் செய்யுளந்தாதியென்றும் கூறுவர். ஒன்றன் அந்தம் அடுத்ததன் ஆதியாக வருதலின் இப்பெயர் பெற்றது; இது வடசொற் புணர்ச்சி.

செய்யுளந்தாதி ஒரு செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்தேனும் அசையேனும் சீரேனும் சொல்லேனும் அடியேனும் அடுத்த செய்யுளின் முதலில் வருவது; நூலினது ஈற்றுச் செய்யுளின் இறுதி முதற் செய்யுளின் முதலோடு ஒன்றிவரும். இதனை மண்டலித்த லென்பர். இவ்வந்தாதியமைப்பு இரட்டைமணிமாலை, இணைமணி மாலை, மும்மணிமாலை, மும்மணிக்கோவை, நான்மணிமாலை, பல் சந்தமாலை, கலம்பகம் முதலிய வேறு பல பிரபந்தவகைகளிலும் காணப்படுமேனும், இதனைச் சிறப்பியல்பாகப் பெற்றமை பற்றி இவை அந்தாதியென்றே வழங்கப்படும். இவை விருந்தென்னும் வனப்பையுடையன வென்பது பேராசிரியர் கோள்கை; தோல். செய். 239.

அந்தாதி யமைப்பு, பதிற்றுப்பத்து நான்காம்பத்திலும் பழம் பெருங் காப்பியங்களில் ஒன்றாகிய பெருங்கதையிலும் காணப்படும். திருவாசகத்திலுள்ள திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம் முதலிய வற்றிலும், திருவிசைப்பாவிலுள்ள சில பதிகங்களிலும் இம்முறை அமைந்திருக்கின்றது. பதினோராந்திருமுறையில், (1) காரைக்கா லம்மையார் அற்புதத்திருவந்தாதி, (2) சேரமான் பெருமாணாயனார் அருளிச் செய்த பொன்வண்ணத்தந்தாதி, (3) நக்கீரதேவநாயனார் அருளிச் செய்த கைலைபாதி காளத்திபாதியந்தாதி, (4) கபிலதேவ நாயனார் அருளிச் செய்த சிவபெருமான் திருவந்தாதி, (5) பரண தேவநாயனார் அருளிச்செய்த சிவபெருமான் திருவந்தாதி, (6) பட்டினத்துப்பிள்ளையார் அருளிச் செய்த திருவேகம்பமுடையார் திருவந்தாதி, (7) நம்பியாண்டார்நம்பி அருளிச்செய்த திருத்தொண் டர் திருவந்தாதி, (8) ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி என்னும் எட்டுஅந்தாதிகளும் உள்ளன. திவ்யப்பிரபந்தத்தில் முதலாழ்வாரால் இயற்றப்பட்ட மூன்று அந்தாதிகளும், திருமழிசையாழ்வார் அரு ளிய நான்முகன்திருவந்தாதி, நம்மாழ்வார் அருளிய பெரிய திருவந் தாதி என்பனவும் உள்ளன. அன்றியும், திருவாய்மொழியின் ஆயி ரத்து நூற்றிரண்டு செய்யுட்களும் அந்தாதியாகவே அமைந்திருக் கின்றன, திருநூற்றந்தாதியென்னும்பழைய சைன நூலொன்றுண்டு. கல்வியிற் பெரிய கம்பரும் சரசுவதியந்தாதி, சடகோபரந்தாதியென இரண்டு அந்தாதிகளை இயற்றியுள்ளார். இவற்றை யன்றி அகப் பொருளிலக்கணத்தைக் கூறும் * ஒரு நூல் அந்தாதி முறை

* இது 'களவியற் காரிகை' என்னும் பெயருடன் ஸ்ரீமான் எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. ஏ. பி. எல். அவர்களால் பதிப்பிக்கப்பெற்றிருக் கின்றது.

யமைந்ததாகக் காணப்படுகிறது. இங்ஙனம் சிறந்த பல பெரியோர்கள் அந்தாதி நூல்களைப் பாடியிருத்தலும், அந்தாதி முறையை மேற்கொண்டிருத்தலும் இவ்வகைப் பிரபந்தங்களின் சிறப்பைப் புலப்படுத்தும்.

வெண்பாவாலேனும், விருத்தத்தாலேனும், கட்டளைக் கலித்துறையாலேனும் இவ்வந்தாதிகள் இயற்றப்படும். பத்துப்பத்துப் பாட்டுக்கு ஓர்யாப்பாகப்பத்துவகைச்செய்யுட்களால் இயற்றப்படுவதாகிய ஒருவகைஅந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதியென்று வழங்கும். அந்தாதி நூல்களிற் பெரும்பாலானவை நூறுசெய்யுட்களை உடையன; அத்தொகையிற் குறைந்த செய்யுட்களையுடைய நூல்களும் சில உண்டு.

செய்யுட்களில் அமைந்த எதுகை பற்றிய இரண்டு வகை அந்தாதிகள் உண்டு. அவை திரிபந்தாதி, யமக வந்தாதி யென்பன. இவற்றுள் நான்கடிகளிலும் முதலில் முதலெழுத்தை யொழிந்த ஏனையஎழுத்துக்கள் பல ஒன்றிவரின் அது திரிபந்தாதியாகும்; அம் முதலெழுத்தும் ஒன்றிவரின் யமக அந்தாதியாகும். இங்ஙனம் வரும் யமகம், சொல்லணிகளுள் இடையிட்டு வந்த ஆதிமடக்கின் பாற்படும்.

திருமயிலை யமக அந்தாதியாகிய இது தொண்டை நாட்டிலுள்ள தேவாரம்பெற்ற சிவஸ்தலங்களுள் ஒன்றாகிய மயிலாப்பூரில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள ஸ்ரீகபாலீசுவரர் மீது தாண்டவராய கவிராயரென்ற புலவரால் இற்றைக்குச் சற்றேறக்குறைய 200-வருஷங்களுக்கு முன் இயற்றப்பெற்றது. இது காப்புச்செய்யுளொன்றும் வாழ்த்தொன்றும் உட்பட நூற்றிரண்டு செய்யுட்களையுடையது.

மயிலாப்பூரென்பது மயிலாப்பு என்று முற்காலத்தில் வழங்கப் பெற்றது; 'மயிலாப்பிற்கொற்றன்' (தொல். குற்றியலுகரப். 12, ந. மேற்.) இத்தலம் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச் செய்த ஒரு பதிகத்தை உடையது. திருநாவுக்கரசு நாயனார் வேறு தலங்களைப் பற்றி அருளிச் செய்த திருப்பதிகங்களில் மூன்று இடங்களில் இத்தலத்தைப் பற்றிக் கூறியுள்ளார்; அப்பகுதிகள் வருமாறு:—

> "மங்குன் மதிதவழு மாட வீதி
> மயிலாப்பி லுள்ளார்" (புக்கதிருத்தாண்டகம், 1),
>
> "மயிலாப்பின் மன்னினார்" (காப்புத்திருத்தாண்டகம், 12)
>
> "மயிலாப்புள்ளே, செடிபடு வெண்டலையொன்
> றேந்திவந்து" (திருவொற்றியூர்த்திருத்தாண்டகம், 6.)

இத்தலத்தின் வரலாற்றை விளக்கும் புராணங்கள் வடமொழியிலும் தென்மொழியிலும் உண்டு. * திரிசிரபுரம் மகா வித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களைச் சில அன்பர்கள் காப்பிய இலக்கணம் அமைய ஒரு புராணம் இத்தலத்துக்குப் பாடவேண்டுமென்று விரும்பியபடி அவர்கள் ஒரு புராணம் இயற்றத்தொடங்கிச் சில பகுதிகளை இயற்றினார்கள்; நூல் முற்றும் நிறைவேறவில்லை; இயற்றிய பகுதிகளும் இப்பொழுது கிடைக்கவில்லை. இத்தலசம்பந்தமாக இவ்வந்தாதியையன்றி வேறுள்ள பழைய தமிழ்ப்பிரபந்தங்களுள் இப்பொழுதுதெரிந்தவை, (1) திருமயிலையுலா, (2) திருமயிலைக்கலம்பகம் (3) தொட்டிக்கலை நாராயணசாமி முதலியார் இயற்றிய திருமயிலை வெண்பாமாலை, (4) கபாலீசர் பஞ்சரத்தினம், (5) கற்பகவல்லிமாலை, (6) அம்பலவாண கவிராயர் இயற்றிய சிங்கார வேலர் கோவை, (7) தாண்டவராய கவிராயர் இயற்றிய சிங்கார வேலர் பிள்ளைத் தமிழ், (8) ஷடியார் இயற்றிய சிங்கார வேலர் வெண்பா என்பன. கருவம்பாக்கம் ஆறுமுக முதலியாரென்பவர் இயற்றிய பூம்பாவையார் விலாசம் என்ற ஒரு நாடகமும் இத்தல சம்பந்தமாக உள்ளது.

உமாதேவியார் மயிலுருவத்தைப் பெற்றுப் பூசித்தமையின் இத்தலம் மயிலாப்பு, மயிலாப்பூரென்னும் பெயர்களைப் பெற்றது; அவற்றின் மரூஉவே மயிலையென்பது. அம்பிகை பூசித்த இச் செய்தியைத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், "மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக், கட்டிட் டிடங்கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்" என்று புலப்படுத்தியருளினார்.

இத்தலத்து விநாயகர் திருநாமம் ஸ்ரீ நடனவிநாயகரென்பது; அது கூத்தாடும் பிள்ளையாரெனத் தமிழில் வழங்கும். சிவபெருமான் திருநாமம் கபாலீசுவரரென்பது. உமாதேவியாருக்குப் பரமசிவன் கபாலியாகக் காட்சி கொடுத்தருளினமையின் இத்திருநாமம் வழங்கலாயிற்று; இத்திருக்கோலத்தைத் திருநாவுக்கரசு நாயனார், "மயிலாப்புள்ளே, செடிபடு வெண்டலையொன் றேந்திவந்த" என்று பாராட்டுகின்றார். கபாலீசுவரர் வீற்றிருத்தலின் இத்தலத்திலுள்ள திருக்கோயில் கபாலீச்சரமென்னும் திருநாமம் பெற்றது. இங்கே உள்ள அம்பிகையின் திருநாமம் கற்பகவல்லியென்பது. முருகக் கடவுள் திருநாமம் சிங்காரவேலர் என்பது.

சிவநேசச்செட்டியாரென்னும் வணிகச்செல்வர் தம்மகளாகிய பூம்பாவையென்பவள் இறந்தபின்பு சேமித்துவைத்திருந்த அவளுடை

* இங்கேயுள்ள செய்தியின்விரிவை ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம், முதற்பாகம், 162-ஆம் பக்கம் முதலியவற்றிற் காணலாம்.

வின் என்பை அம் மகளாகுமாறு திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பாடியருளிய பெருமையையுடையது இத்தலம்; இவ்வரலாறு பற்றி இறைவர் பூம்பாவையீசுவரரென்னும் ஒரு திருநாமத்தை இத் தலத்தில் உடையரானார்.

இந்தத் தலத்திற்குரிய விருட்சம் புன்னை; ஆதலின் இதற்குப் புன்னைவனமென்ற திருப்பெயரும் உண்டு; வேதங்கள் பூசித்த மையால் வேதபுரி யென்றும், சுக்கிரன் பூசித்தமையால் சுக்கிரபுரி யென்றும் பெயர்பெறும். இங்கே இறைவனைப் பூசித்துப் பேறு பெற்றோர் உமாதேவியார், முருகக் கடவுள், இராமர், வாலி, சுக்கி ரன், வேதங்கள், முனிவர்கள், வாயிலார் நாயனார், ஏலேல சிங்கன் முதலியோர். இங்குள்ள தீர்த்தங்கள் சத்திகங்கை யென்னும் கபாலி தீர்த்தம், வேத தீர்த்தம், சுக்கிர தீர்த்தம், இராம தீர்த்தம், வாலி தீர்த்தம், கந்த தீர்த்தம் முதலியன.

இந்த நூலில் இத்தலத்தைப் பற்றிய செய்திகளிற் பல அங் கங்கே அமைக்கப்பட்டுள்ளன: கூத்தாடும்பிள்ளையார் காப்புச் செய்யுளில் துதிக்கப்படுகிறார். கபாலீசுவரர் திருநாமம் 30, 34, 46-ஆம் செய்யுட்களில் வந்துள்ளது. அவர் கபாலத்தை யேந்திய செய்தி 10, 35, 43, 56, 77, 86, 96-ஆம் செய்யுட்களிற் காணப் படுகின்றது. ஓரிடத்தில் அவர் 'மயிலேசன்' (23) என்றும் வழங் கப்பெறுகிறார். கற்பகவல்லியின் திருநாமம் 4-ஆம் செய்யுளில் யமகத்திலும், 95-ஆம் செய்யுளிலும் வந்துள்ளது. இத்தலத்தின் பெயர் மயிலையென்றே பெரும்பாலும் ஆளப்படுகின்றது; இரண் டிடங்களில் மயிலைப்புரி (27, 28) என்றும், ஓரிடத்தில் கேகை (97) என்றும் இந்நூலாசிரியர் வழங்குகின்றார். மயிலாப்பூரென்பதன் வடமொழியுருவாகிய கேகயபுரியென்பதன் சிதைவே கேகை யாகும். இத்தலத்தில் அம்பிகை தவம் செய்தது (10), மயிலாயது (34, 95), பூசித்தது (37, 57, 64, 86,) முருகக் கடவுள் பூசித்தது (3, 4, 86, 97), அவர் வேலாயுதம் பெற்றது (2), திரு ஞானசம்பந்தர் துதித்தது (5, 37, 78, 98), அவர் என்பைப் பெண்ணாக்கியது (8, 38), இராமர் பூசித்தது (39, 71), வேதம் பூசித்தது (95), வாயிலார் நாயனார் வழிபட்டது (80), ஏலேல சிங்கர் வழிபட்டது (98), இத்தலம் யுகமுடிவிலும் அழிவில்லாத தென்பது (31), பாலியாற்றுக்கு வடக்கே யுள்ளதென்பது (30), கடற்கரையி லுள்ளதென்பது (42, 60) முதலிய செய்திகள் அங் கங்கே காணப்படும். சத்திகங்கை (73), கபாலிதீர்த்தம் (81), வாலி தீர்த்தம் (93) என்னும் தீர்த்தப் பெயர்களும் வந்துள்ளன. இத் தல விருட்சம் புன்னை யென்பது 53-ஆம் செய்யுளிற் குறிப்பிக்கப் பட்டிருக்கின்றது.

இத்தல வரலாறுகளையன்றி, வேறு தலவரலாறுகள், மதுரைப் பெருமான் திருவிளையாடல்கள், நாயன்மார் வரலாறுக ளென்பவற்றைப்பற்றிய குறிப்புக்களையும் இந்நூலிற் காணலாம். இந்நூலாசிரியர், கயிலையையும் (47, 70, 93), தில்லைமன்றையும் (62) ஞானகாசமாகிய அம்மன்றிற் சிவபிரான் நடனஞ்செய்தலையும் (67) பாராட்டுகின்றார். திருவானைக்காவிலுள்ள ஸ்ரீ சம்புகேசுவரரைச் சம்பத்தர் (சம்பு அத்தர், 65) என்று கூறுகின்றார். திருக்கழுக் குன்றைக் கக்குக்கோ (கங்கு கோ: கங்கு - கழுகு, கோ - மலை; 97) என்றும், அங்கே கோயில் கொண்டெழுந்தருளிய கள்ளம் வல்லானென்னும் திருநாமமுடைய சிவபெருமானைக் கரவா (66) என்றும் வழங்குகின்றார். வேயீன்ற முத்தாகிய திருநெல்வேலிப் பெருமானைக் கிளைச் சேய் (கிளை - மூங்கில், 86) என்று புகழ்கின்றார். திருவாலங் காட்டிற் சிவபிரான் ஊர்த்துவதாண்டவம் புரிந்ததையும் (41), மதுரைப் பெருமான் திருநாமம் சொக்கரென்பதையும் (71) உணர்த்துகின்றார். அம்மதுரையின்கண் சிவபெருமான் சங்கத்தில் வீற்றிருந்தது (62, 65), தருமிக்குப்பொற்கிழியளித்தது (53), நக்கீரரோடு வாது செய்தது (66, 71), மாணிக்கவாசகருக்கு அருள் செய்தது (64), நரிபரியாக்கியது (82), வலைஞானது (90) முதலிய திருவிளையாடல்களைப் பற்றிய செய்திகள் இதன்பால் உள்ளன.

பின்னும், மூவர், சோமாசிமாறர், சிறுத்தொண்டர், அரிவாட்டாயர், நமிநந்தி, இயற்பகையார், கண்ணப்பர், மூர்க்கர், காரைக்காலம்மையாரென்னும் நாயன்மார்களைப்பற்றிய செய்திகளும் இடையிடையே வருகின்றன.

இதிலுள்ள செய்யுட்களில், கபாலீசுவரரைக் கிளவித் தலைவராகக்கொண்டுகடவுண்மாட்டு மானிடப்பெண்டிர் நயந்த பக்கமாகிய புறத்துறையிலக்கணம் அமைந்த செய்யுட்கள் பதினொன்று (5, 9, 18, 22, 26, 37, 62, 63, 69, 76, 92); அகப் பொருட் கிளவிகளாக அமைந்த செய்யுட்கள் பதினேழு (6, 10, 17, 31, 38, 42, 45, 46, 59, 60, 76, 79, 82, 84, 85, 88, 89)

யமக அந்தாதியாதலின் இந்நூலின் நடை கடினமாகவே அமைந்துள்ளது; 'செறிவுந் தெளிவும் இன்பமும் இலாதவாறு ஓர்ந்துணர்க' (1, உரை) என்று இதன் உரையிற் கூறப்படுதல் காண்க. புறநடைகளாகிய இலக்கண விதிகள் பலவற்றிற்கு இலக்கியமாகிய பகுதிகளை இதிற் காணலாம். யமகம் நோக்கிப் பலவகையான வேறுபாடுகள் இதில் அமைக்கப்பட்டுள்ளன; அவற்றுள் இதன் உரையிலே காட்டப்பட்டன வருமாறு:— ஒற்றுமிக்கது (3), ஒற்று உள் வழிக்குறைந்தது (7), தந்நகரம் சிறப்புனகரமானது (20), மிக வேண்டிய இடத்து இயல்பானது (35)

97-ஆம் செய்யுள் ககரவரிப்பாட்டு; அப்பாட்டில் ககரவொற்றும், ககரவர்க்கத்து உயிர் மெய்களுள், கெ, கௌ என்னும் இரண்டு மொழிந்த பத்துமே வந்துள்ளன. காப்பென்னும் பொருளையுடைய திதியென்பதை இருதி என்றும் (24), மகரமீனைத் தை என்றும் (41), ஒன்றென்னும் என்னைக் கவெண் என்றும் (72) இந்நூலாசிரியர் கூறுவர்; இவை குறிப்புமொழி யென்று உரை கூறும்.

இந்நூலுக்கு உள்ள உரை இந்நூலாசிரியராலேயே இயற்றப்பட்டதென்று தோற்றுகின்றது. இவ்வுரை இல்லையேல் நூற்பொருள் விளங்குவது அருமையிலும் அருமை யென்பதில் ஐயமில்லை. முதற் செய்யுளுக்கு மாத்திரம் கட்டுரைச் சுவைபட விரிவான உரை எழுதப்பட்டுள்ளது. மற்றவற்றிற்கு அன்னுவயம் செய்து, வேண்டிய சொற்களைப் பெய்து எழுதிய பதவுரையும் சில சில இடங்களில் இலக்கணக் குறிப்புக்களும் உள்ளன. சில பாடல்களைத் தவிர மற்ற எல்லாப்பாடல்களுக்கும் எழுவாய் பயனிலை எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இவ்வுரையில் வந்துள்ள மேற்கோள் நூல்கள்:—தொல்காப்பியம், குறுந்தொகை, தேவாரம், சீவகசிந்தாமணி, யாப்பருங்கலக்காரிகை, கந்தபுராணம், நன்னூல் என்பன; "செக்கினிடைத்திரித்துந் தீவாயி லிட்டெரித்தும், தக்கநெருப் புத்தூண் டழுவித்தும் - மிக்கோங்கு, நாராசங் காய்ச்சிச் செவிமடுத்தும்" (67, மேற்), "தூவை யென்பது.........இயல்பிற் றன்றே" (79, மேற்) என்னும் இரண்டும் இன்ன நூல்களிலுள்ள பகுதிகளென்று இப்போது தெரியவில்லை; இவற்றுட் பின்னது அடியார்க்கு நல்லாராலும் நச்சினார்க்கினியராலும் மேற்கோளாக எடுத்தாளப்படுவது.

மயிலாப்பூரில் இருந்த சிறந்த தமிழ் வித்துவானாகிய திருவம்பலத்தின்னமுதம் பிள்ளையவர்களுக்குரிய இவ்வந்தாதியின் மூலமும் உரையும் அடங்கிய ஏட்டுச் சுவடிகள் இரண்டு இற்றைக்கு 50 வருடங்களுக்குமுன், அவருடைய மாணாக்கராகிய அண்ணாசாமி உபாத்தியாயரென்பவரிடமிருந்து கிடைத்தன. பின்பு ஓரன்பரிடமிருந்து மூலம்மட்டும் உள்ளபிரதியொன்று கிடைத்தது; அதன் இறுதியில்,

"தனந்தந்த மாவி னிசைகாட்டுங் காவிரி தண்மயிலை
தனந்தந்த மாகிரி முத்துமை பாகர் சரண்பரவு
தனந்தந்த மாப்பரி தந்திந்த வையகந் தாங்குஞ்சிங்கா
தனந்தந்த மாதவன் போற்றுமெய்ச் சீருந் தருந்திரமே"

என்னும் செய்யுளொன்று அதிகமாகக் காணப்பட்டது.

இப்பொழுது இது ஸ்ரீகபாலீசுவரர் திருவருளால் 'சிவநேசன்' பத்திரிகையில் வெளியிடப்பெற்றது. இதனைத் தம் பத்திரிகையில்

வெளியிட்ட சிவபக்திச் செல்வர்களும் சிவஸ்தல பரிபாலகர்களு மாகிய ஸ்ரீமான் ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரவர்க ளுடைய தமிழன்பும் சைவப்பற்றும் பாராட்டற்பாலன.

இந்நூலை ஆராயும்பொழுதும் பதிப்பிக்கும்பொழுதும் உட னிருந்து உதவி செய்தவர்கள் சென்னை, கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் சிரஞ்சீவி வித்துவான் வி. மு. சுப்பிரமணிய ஐயரும், சிரஞ்சீவி வித்துவான் கி. வா. ஜகந்நாதையரும் ஆவர்.

'தியாகராஜ விலாசம்'
திருவேட்டீசுவரன்பேட்டை.
15—4—36.

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்.

தாண்டவராய கவிராயர்

திருமயிலை யமக அந்தாதியை இயற்றியவர் தாண்டவராய கவிராய ரென்பவர். இவருடைய ஊர் இன்னதென்று தெரியவில்லை. "நற்படி மேற்சந்திராதித்தர்" (ப. 67) என்னும் பாட்டாலும், "தண் பார்துதிக்கும்" (ப. 67) என்னும் பாட்டாலும் இவர் மயிலாப்பூரி லிருந்த பூம்பாவை வேலப்ப முதலியா ரென்பவருடைய விருப்பத் தின்படி இவ்வந்தாதியை இயற்றினரென்றும், இந்நூல், சிங்கார வேலவர் பிள்ளைத்தமிழ், சிங்காரவேலவர் வெண்பா வென்னும் மூன்றும் அம்முதலியாருடைய ஆதரவினால் அரங்கேற்றப்பெற்றன வென்றும் தெரிகின்றது.

பூம்பாவை வேலப்பமுதலியாரென்பவர் மயிலாப்பூரில் இருந்த ஒரு பெரிய செல்வர்; சிவபக்தி மிக்கவர்; தமிழ்ப்புலவர்களை ஆதரித் துப் பாராட்டும் இயல்புடையவர். அவருக்கும், தருமபுர மடத்தில் ஆதீன வித்துவானாக இருந்தவரும் இராமநாடகம்பாடிய சீகாழி அருணாசல கவிராயர் முதலிய பலருடைய ஆசிரியருமாகிய ஸ்ரீ அம்பலவாண கவிராயருக்கும் நட்பு இருந்து வந்தது. ஆதலின் முதலியார் இவ்வந்தாதியையும் உரையையும் அம்பலவாண கவிராய ருக்கு அனுப்பி இவற்றின் தகுதியை அறிந்துகொள்ள விரும்பினார். அக் கவிராயர் இவ்வந்தாதியையும் உரையையும் கண்டு மகிழ்ந்து 'இவை அரங்கேற்றற் குரியன' என்ற தம் கருத்தை ஒரு சீட்டுக் கவியின் வாயிலாக முதலியாருக்குத் தெரிவித்தார்; அக்கவி வருமாறு:—

"சங்கத் தமிழ்ப்பொன்னி னுரையாணி ஞானச்
சரக்கறை யெதிர்ந்த கவிதைத்
தந்திக் குழாம்வென்ற கண்டீர வம்பெரிய
சைவசித் தாந்த நிபுணன்
துங்க ப்ரபந்தங்க ளொருகோடி யனுதினஞ்
சொல்லினிய மதுர வாக்கி
துரைராசர் பரவுமம் பலவாண கவிராச
துரந்தர னனுப்பு மோலை
வங்கப் பயோததியி னிறைசெல்வன் மதியூகி
வைத்யநா தேந்த்ர னீன்ற
வரதநற் குணமேரு பூம்பாவை வேலப்ப
மகிபனெதிர் கொண்டு காண்க
கங்கைச் சடாமகுடர் * மயிலையந் தாதியுரை
கனிகண்டு கண்டு கொண்டோம்

* மயிலையந்தாதியும் உரையும் கனியும் கண்டும் ஆகும் என்று நிர னிறையாகக் கொள்க.

கவியரங் கேற்றியிசை நாட்டுதாண் டவராய
கவிராசர் மனமகிழவே"

இதனைப் பெற்ற பிறகு அந்தாதி முதலியன அரங்கேற்றப்பெற்றன வென்று தோற்றுகின்றது. "தாண்டவராய கவிராசர்" எனப் பன்மையாக இவ்வாசிரியரை அம்பலவாண கவிராயர் சொல்லியிருப்பதும், "தாண்டவராய தமிழ்ச்சிங்கம்" என்று பிறர் பாராட்டுவதும் இவருடைய பெருமையைப் புலப்படுத்தும். சிங்காரவேலர் பிள்ளைத் தமிழ், வெண்பாவென்னும் இரண்டும் இவரால் இயற்றப்பட்டவை யென்று கருத இடமுண்டு.

தாண்டவராய கவிராயர் சிவபக்திச் செல்வமும், தமிழன்பும், நன்றியறிவும், கடினமான அமைப்பையுடைய செய்யுட்களையும் பாடும் திறமையும், உரையெழுதும் ஆற்றலும், சிவதலங்களையும் நாயன்மார்களையும் நினைந்துபாராட்டும் இயல்பும் உடையவர். சிவபெருமான்மீது யமக அந்தாதி முதலியன பாடுவதில் இவருக்கு விருப்பம் இருந்தமையை, "பரமர் பத்திபண் அளிபாடு அலங்காரம் யமகமும் பாடின் உண்டாம்....சம்பத்து இயல்பே" (33) என்னும் இந்நூற்செய்யுட்பகுதி வெளிப்படுத்தும்; சிவபெருமானை அன்புடன் போற்றிப் புகழும் பாடல்கள் அப்பெருமானால் ஏற்றருளப் பெறு மென்னும் துணிபுடையவர் இவர் (34); கல்விச்சிறப்பையும் வித்துவான்களின் உண்மை மதிப்பையும் அறிந்துள்ள அன்பர்களோடு பழகுவதையன்றி அற்பர்களுடைய பழக்கத்தை இவர்விரும்பவில்லை; இதனை, "கா...கல்வி சுருங்காது அற்பர் அவையகத்துச் செல்லாது கடைக்கண் வைத்தே" (68) என்று இறைவனை இவர் வேண்டிக் கொள்ளும் பகுதி புலப்படுத்தும். மயிலைப்பிரானை இறுதிச் செய்யுளில், "தனம் தந்து அருட்செல்வமும் தந்தருள் சீர்பெறவே" என்று வேண்டுகின்றார்; இங்ஙனம் பொருட்செல்வமும் அருட்செல்வமும் ஒருங்கு வேண்டிய இப்புலவர் பூம்பாவை வேலப்ப முதலியார் முதலிய பொருட்செல்வர்களாலும் சிவபெருமானாகிய அருட் செல்வராலும் பாதுகாக்கப் பெற்று இன்புற்று வாழ்ந்து வந்தார்.

உ

கணபதி துணை.

திருமயிலை யமக வந்தாதி மூலமும் உரையும்.

காப்பு.

கூடத்தா டுவர்க்க வளந்தோன் பணியரன் கோகிலங்கள்
கூடத்தாடு சோலை மயிலையந் தாதியைக் கூறவுரு
கூடத்தா டுனிப்புகழ் வார்க்கருள் கற்பகங் கொண்டல்வண்ணக்
கூடத்தாடு மைங்கரன் காப்பாகு மேன்மை கொடுத்திடுமே.

என்பது: கூ - பூமியை, தாள் துவர்க்க - தனது பாதம் சிவக்க, அளந்தோன் பணி அரன் - அளந்த திருமால் வணங்கும் பரமசிவனது, கோகிலங்கள் கூட - குயில்கள் கூவுதலையுடைய, தாடுசோலை - பெரியசோலை சூழ்ந்த, மயிலை அந்தாதியைக் கூற - * திருமயிலைப் பதி அந்தாதியைச் சொல்லுதற்கு, உருகூட - நெஞ்சம்அன்பால் நெகிழ்ந்து, தாள் - முயற்சியால், துன்னி - காலங்கள்தோறும் தனது ஆலயத்தில் வந்து, புகழ்வார்க்கு - தன்னைத் துதி செய்யும் அன்பர்களுக்கு, அருள் கற்பகம் - வேண்டிய வெல்லாம் கொடுக்கும் கற்பகத்தரு, கொண்டல் வண்ணக் கூத்தாடும் ஐங்கரன் - மேகம் போல நீல நிறத்தைப் பொருந்திய கூத்தாடும் பிள்ளையார், காப்பு ஆகும் - இடையூறு வாராமற் காப்பார், மேன்மை கொடுத்திடும் - எழுத்து முதலிய ஐந்திலும் வழுவாமல் பாடும் அறிவுடைமையையும் கொடுப்பார். எ - று.

தாள் து சோலை - பராரைப் பெருமை பொருந்திய சோலை † எச்ச உம்மை விகாரத்தால் தொக்கது.

நூல்.

1. சீராக மாதவன் போற்றும் பதாம்புய சேயிதழிச்
சீராக மாதவ ளந்தரு தண்மதிச் செஞ்சடையாய்
சீராக மாதவர் நல்லோர்கள் வாழுந் திருமயிலைச்
சீராக மாதவ னேராக நல்குன் றிருவருளே.

என்னை? கட்டளைக் கலித்துறை.

---

* மயிலாப்பூர். † மேன்மையு மென்ற எச்சவும்மை.

முத்தகம், குளகம், தொகைநிலை, தொடர்நிலை என்னும் செய்யுள் நான்கனுள், தொடர்நிலைச்செய்யுள், சொற்றொடர்நிலையும் பொருட்டொடர் நிலையுமென இருவகைத்து. அவ்விரண்டனுள் சொற்றொடர்நிலை இரட்டை மணிமாலை, மும்மணிக்கோவை, நான்மணிமாலை, பல்சந்தமாலை, அந்தாதி, கலம்பக முதல் பலவகையினை யுடைத்து. அவற்றுள் அந்தாதி, வெண்பாவாற் செய்வதுவும், விருத்தத்தாற் செய்வதுவும், கலித்துறையாற் செய்வதுவு மென மூவகைத்து. அம்மூன்றனுள் இது கட்டளைக் கலித்துறை அந்தாதி. ஒரு செய்யுளின் நான்காம் அடியின் ஈற்றின் கண்ணவாகிய எழுத்தாக, அசையாக, சீராக இம்மூன்றனுள் ஏற்பதொன்றனை அதனடுத்த செய்யுட்கு ஆதியாகக் கூறுதலின் அந்தாதி என்பது காரணப் பெயர். அந்தாதி என்பது வடசொல் முடிவு. குளாம்பல் போல வென்பது இயையாது. இவ்வந்தாதியை அகப்பொருட் பகுதியானும், புறப்பொருட் பகுதியானும் கூறுவான் தொடங்கி முதற்கண்,

> திருமயி லைப்பதி மருவிய சிவனே
> திருமான் முதலா வுரைசெயு மெமக்கு
> மேம்படு பெரியோ னும்பதி யெனவும்
> இம்மையு மறுமையு மின்ப வீடுமாம்
> மும்மையு முதவு முதல்வனு மெனவும்
> புகலரு மாகமம் பகர்பவ னெனவும்
> அன்னோ னருளான் முன்னிய யாவும்
> வருமெனக் கூறு நிருமித முகத்தான்
> முன்னிலை யாக்கி யின்மொழி யதனாற்
> பரவருங் கடவுட் பரவிய தாகும்.

எ - து. சீர் ஆக - இந்திரன் முதலிய கடவுளர்க்குமேலான செல்வங்களுண்டாம் வண்ணம், மாதவன் போற்றும் பதாம்புய - திருமால் துதி செய்யும் பாததாமரையினைப் பொருந்திய சிவனே, சே இதழிச் சீர் ஆக - சிவந்த கொன்றை மாலையினை அணிந்த அழகிய மார்பனே, மா தவளம்தரு தண்மதிச் செஞ்சடையாய் - பெருமையும் வெண்மையு முண்டாகிய குளிர்ந்த பிறையைத்தரித்த சிவந்த சடாமகுடத்தைப்பொருந்திய பரனே, சீர் ஆகமா-புகழ்பொருந்திய காமிகாதி வாதுளாந்தமாகிய இருபத்தெட்டுத் திவ்விய ஆகமங்களைத் திருவுளம்பற்றின கர்த்தனே, தவர் நல்லோர்கள் வாழும் திருமயிலைச் சீரா - சரியை, கிரியை, யோகமென்னும் மூன்றுபாத ஒழுக்கத்தோர்களும் ஞானஒழுக்கத்தோரும் நிலைபெற்றுவாழும் திருமயிலைப் பதியில் எழுந்தருளியிருக்கும் சிறந்த அரனே, கம் ஆதவன் நேராக - விசும்பின்கண் விளங்கும் சோதிக் கதிரவனுக்கு ஒப்பாம் வண்ணம், நல்கு - அடி

யேனுக்கு அருளுவாயாக; உன் திருவருளே - நினது திருவருளினை. எ - று.

அருட்செல்வம், யோகச் செல்வம், கல்விச் செல்வம், பொருட் செல்வம் என்னும் நான்கினையும் வேண்டுவார் வேண்டியாங்கு அருள்பவன் என்பது தோன்றப் பொதுவகையாற் சீராக வென்றும், இந்திரன் முதலிய கடவுளரெவரும் போற்றுதற் கெளிய செவ்வியதன்று என்பது தோன்ற, 'மாதவன் போற்றும்' என்றும் பூவின் மாலை பொருந்திய மார்பன் பாவின் மாலையும் பரிப்பனென்பது தோன்றச் சேயிதழிச்சீராக வென்றும், சிறுமையும் வெண்மையுஞ் சேரினுமென்சொல் இறையவன் கொள்ளும் என்பது தோன்ற மாதவளந்தரு தண்மதிச் செஞ்சடையாயென்றும்,

உலகா யதன்முத லுலப்பிலர் கூறும்
பல்பல வாகப் பகுதிக ளனைத்தும்
அணுவினுஞ் சிறியவென் றனைவரு மியம்ப்
நுணுகிய வறிவு நுகர்பெரும் பயனும்
எடுத்துக் காட்டு மேதுவுங் கூறும்
எற்றமுடையா னென்பது தோன்றச்

சீராக மாவென்றும்,

அந்தண ரரசர் சுந்தர வணிகர்
பெருமைவே ளாளர் பிரம சாரியர்
ஆனவில் வாழ்வோர் வானப் பிரத்தர்
முற்றத் துறந்த முனிவ ரென்னும்
நான்குவரு ணத்தோர் நான்குநன் னிலையோர்
யாவரு மேவின ரென்பது தோன்றப்

பொதுவகையால் தவர் நல்லோர்கள் என்றும்,

குணந்தன நல்ல குலம்வய துருவம்
வித்தைசம் பத்து விவேக மென் றியம்பும்
எண்வகைத் தனங்களும் திண்ணி தின் மேவி
என்றுங் குறைவில ரென்பது தோன்ற

வாழும் என்றும்,

அலைபடு பாற்கட னிலையில ததனுல்
வள்ளிதழ்க் கமலங் கள்ளூறு மதனுல்
போரரி மார்பம் போரெதிர் தலினுல்
நன்னிலை யுடைய திக்க ராமென்
றிருந்தனள் பூமக ளென்பது தோன்றத்

திருவென்றும்,

சயில வேந்தன் றவப்பெரும் பேறும்
அயில்விழி யுமையாண் மயிலெழி லுருவம்

எய்தியர்ச் சித்தா ளென்பது தோன்ற

மயிலை யென்றும்,

எண்ணுல கங்களிற் புண்ணிய பூமியும்
நீடிய வரைகளி னாடக மேருவும்
தங்குநீர்க் கடல்களிற் பொங்குபாற் கடலும்
எங்குவாழ் நதிகளிற் கங்கைமா நதியும்
பொற்புறு தருக்களிற் கற்பக தருவும்
நந்தா மணிகளிற் சிந்தா மணியும்
வாமமார் பசுக்களிற் காம தேனுவும்
பலவித வங்கத் திலகிய சிரமும்
தெளியுமைம் பொறிகளி லொளிகொணேத் திரமும்
பல்வித வறிவிற் கல்வியி னறிவும்
ஓதிய நூல்களில் வேதவா கமமும்
ஊனுடைப் பிறவியின் மானிடப் பிறவியும்
நலம்புரி சங்கினுள் வலம்புரிச் சங்கமும்
மானதே சிகர்களின் ஞானதே சிகனும்
நூவல்புண் ணியங்களிற் சிவபுண் ணியமும்
திறம்படு புகழொடு சிறந்தன போலக்
கடவுள ரெவரினுந் தடநிறை மயிலை
இறையவன் சிறந்தோ னென்பது தோன்றச்

சீரா வென்றும்,

உதிக்கும் வரையின் மதிக்குமுன் னொளியும்
அத்த வரையின் மொய்த்தபின் னொளியும்
இலகுபே ரொளியல வென்பது தோன்றக்

கமாதவனென்றும்.

பேரிரு ளதனாற் காரின் மறைப்பால்
முதிரொளி குறையாக் கதிரவன் போல
ஆணவ மதனா லூனுறு செயலால்
திருந்துமென் னறிவு சிறிதுங் குறையா
திருத்தல் வேண்டு மென்பது தோன்ற

கோராக வென்றும்,

கொடுத்துழி யன்றிக் கொள்ளுதல் கூடா
தடுத்தவர்க் கருளுத லண்ணலின் றொழிலால்
எளிதினி லருளுதி யென்பது தோன்ற

நல்கென்றும்,

எண்ணிலா ருயிரையு நண்ணியாட் கொண்டே
இலகுபல் லாயிர மிரவிக ளுதிப்பினும்
அகலா வாணவ மலவிரு ளகற்றி
என்று மொருதன்மைத் தென்பது தோன்றத்

திருவருளென்றுங் கூறிய தென்க.

யோகச் செல்வமாவது இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி முதலிய எட்டன் பயனாகிய அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம் வசித்துவம் என்னும் எண்வகைச் சித்திகளுமாம்.

உள்ள நிகழ்ச்சியன்றி மொழியாற் போற்றலாகாமையானும் உள்ளமும் மொழியும் நேர்ந்த செயலின்கண் மெய்யும் உடன்படுதலானும், போற்று மென்பதனால் மூவகை வணக்கமும் அடங்கும்.

* சீர்ஆக மாதவன் என்பது அழகு பொருந்திய மார்பிடத்து மாதாகிய திருவினை வைத்தவனாகிய திருமால் எனவும், சேயிதழிச் சீராக என்பது சிவந்த ஆதரத்தையுடைய உமாதேவியைச் சிறந்த திருமேனியிலுடைய வனே எனவும், மாத வளந்தரு தண்மதி என்பது மாதந்தோறும் அமுது நுகர்ச்சியாகிய வளத்தினைப் † பாவகன் முதலிய கடவுளர்க்குக் கொடுக்கும் தண்மதி யெனவும், சீராகமா என்பது மதர்த்த நடையொடுங்கூடிய இடப வாகனத்தில் எழுந்தருளியிருக்கின்றவனே எனவும், சீராக மாதவனோராக என்பது நடுவு நிலைமையினையும், அதிசயத்தினையும், தலைமையினையும், பெருமையினையு முடைய தவத்தினை அடியேனுடன்படும் வண்ணம் என வும், திருவருள் என்பது சிறந்த கருணை யெனவும் கூறினும் அமையும்.

சீரென்னும் எழுவாய் ஆகவென்னும் வினையெச்சப் பயனிலை கொண்டது. ஆகவென்பது போற்று மென்னும் பெயரெச்சத்தோடு முடிந்தது. போற்று மென்பது பாதாம்புய மென்னும் செயப்படுபொருள் கொண்டது. பாதாம்புயம்: வடசொன் முடிவு. "அண்மையினியல்பு மீறழிவும்" (நன்-சூ. 313) என்பதனால் னகரம் குறைந்துநின்றது. ‡ "விளிநிலைக் கிளவியும்" என்பதனாலியல்பாயிற்று. சேயிதழி: பண்புத் தொகை. 'மாதவளம்' என்புழி உரிச்சொற் புணர்ச்சியாதலின் இயல்பாயிற்று; வடசொன் முடிபு எனினு மமையும். 'தருதண்மதி' என்பது அடையடுத்த பெயரொடு தொக்க வினைத்தொகை. 'ஆகமன்' என்னும் பெயர் ஈறுகுறைந்து அயல் நீண்டு விளி கொண்டது. தவர் நல்லோர்: உம்மைத்தொகை. 'வாழும்' என்னும் பெயரெச்சம் 'திருமயிலை' என்னும் இடப்பெயர் கொண்டது.

---

* ஆகம் - மார்பு. † பாவகன் - அக்கினி.

‡ தோல். உயிர்மயங்கு. சூ. 8.

'கம்மாதவன்' என்னற் பாலது ஒலிநோக்கி ஈறு குறைந்து நின்றது. கம் மாதவன்: வேற்றுமைத் தொகை. ஆதவன் என்பது உயர்திணைப் பெய ராகலான் இறுதிநிலை விகாரமாயிற்று. 'உன்' என்பது விரவுப் பெயராத லின் இயல்பாயிற்று. 'திருவருள்' என்புழி இறுதிக்கண் இரண்டனுருபு விகாரத்தாற் றொக்கது. ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது; பிரிநிலை யெனினுமமையும். இது திணை: பாடாண். துறை: பரவுதல். குணம்: வைதர்ப்பம். அதனுட் செறிவும் தெளிவும், இன்பமும் இலாதவாறோர்ந் துணர்க. 'தண்மதிச் செஞ்சடையாய்' என்பதனால் தன்மைஅலங்காரமும், 'ஆதவனேராக' என்பதனால் உவமையும், 'பாதாம்புய' என்பதனால் உருவக மும், நான்கடியினும் சீர் என்னும் சொல்லைப் புணர்த்தமையால் சொற்பின் வருநிலையும், இரு பொருளியையக் கூறுதலிற் சிலேடையும், இடை யிட்டும் இடையிடாதும் வந்த நான்கடியாதிமடக்கும் வந்தவாறு ஓர்ந் துணர்க.

இதன் இயல்களெல்லாம் விரித்துரைப்பிற் பல்குமெனக் கருதித் தொகுத்துக் கூறினமையின் அவற்றை யெல்லாம் விரித்துரைத்துக் கொள்க. மேல்வரும் செய்யுள்கட்கெல்லாம் பெரும்பான்மையும் பதவுரை மாத்திரமே கூறிப் போந்தமையின் அவற்றின் இயல்புகளை யெல்லாம் இவ்வாறே விரித்துரைத்துக் கொள்க. (க)

2. திருமயி லைக்கண் மலர்கொன்றைத் தாமர்
சிகரமொப்பாம்
திருமயி லைக்கண் மணியணி வோர்கரஞ்
சேருமின்மு
திருமயி லைக்கண்ண னன்மரு கோற்கருள்
சிற்பரர்பூந்
திருமயி லைக்கண் மகிழ்சோதி யார்பதஞ்
சிந்திப்பனே.

எ - து. திருமயிலைக்கள் மலர் கொன்றைத் தாமர் - அழகிய இரு வாட்சியினது தேன் பொருந்திய பூவையும் கொன்றை மாலையையும் அணிந்தவர், சிகரம் ஒப்பாம் திருமயிலைக் கண்மணி அணிவோர் - மலைக் கொப்பாகச் சொல்லும் சிறந்த திருமாலாகிய மீனின் கண்மணியைத் தரித் தவர், கரம்சேரும் மின் முதிரும் அயிலைக் கண்ணன் நன் மருகோற்கு அருள்சிற்பரர் - கையிடத்துப்பொருந்தும்படி ஒளிமிகுந்த வேலாயுதத்தை விட்டுணுவுக்கு நல்ல மருகனாகிய சுப்பிரமணியசுவாமிக்குக் கொடுத்த ஞான சொரூபர், பூந்திரு மயிலைக் கண் மகிழ்சோதியார் - தாமரைப் பூவில் வீற் றிருக்கும் இலட்சுமி சேர்ந்த திருமயிலைப் பதியிடத்து மகிழ்ச்சியுடனே

எழுந்தருளியிருக்குஞ் சிவனார், பதம் சிந்திப்பனே - பாதார விந்தத்தைத் தியானம் பண்ணுவேன். எ - று.

அன்னீறு தன்மைக்கண் வந்தது. பூந்திரு என்பதனால் தாமரைப் பூவாயிற்று. ஏகாரம் ஈற்றசை. மேல்வருவனவற்றிற்கும் இஃது ஒக்கும். யான் சிந்திப்பன். (உ)

3. சிந்தாரப் பன்னக வேணிய மாநிலஞ்
சேர்ந்தளந்த
சிந்தாரப் பன்னக வேணியெல் லாம்புகழ்
தேவவுள்க
சிந்தாரப் பன்னக வேணிதம் போற்றர
செந்நெல்கழை
சிந்தாரப் பன்னக வேணின் மயிலைச்
சிவனருளே.

எ - து. சிந்து - கங்கை யாற்றினையும், ஆர் - ஆத்திமாலையினையும், அ பன்னக - தாருகாவனத்து முனிவரேவிய அந்தப்பாம்பினையும், வேணிய - தரித்த சடையினை யுடையவனே, மாநிலம் - பெரிய பூமியை, சேர்ந்து - பொருந்தி, அளந்த - ஓரடியாக அளவு செய்த, சிந்தார் - வாமனரூபமாகிய விட்டுணுவும், அப்பன் - திருநாவுக்கரசரும், அகம் - கடல் சூழ்ந்த இடமகன்ற, ஏணி யெல்லாம் புகழ் - உலகங்களெல்லாமும் புகழும், தேவ - தேவனே, உள் கசிந்து - மனமுருகி, ஆர மிகவும், பல்நகவேள் - பல மலைகளில் எழுந்தருளியிருக்கும் முருகக் கடவுளும், நிதம் போற்று அர - நித்தியந் துதிக்கும் அரனே, செந்நெல் கழை சிந்து ஆரம் - செந்நெல்லும், கரும்புகளும் உதிர்க்கும் முத்தங்களைப்பொருந்தி, பன்னு * அக ஏண் இல் சொல்லப்பட்ட பாவத்தின் கொடுமையில்லாத, மயிலைச் சிவன் அருளே - திருமயிலைப் பதியின் வாழும் பரமசிவனே கிருபை செய்.

அப்பன் அகம் என்பது அப்பன்னகம்; னகரம்: ஒற்றில் வழி ஒற்று மிக்கது யமகம் நோக்கி. நித்தம் நிதமென விகாரமாயிற்று. சிவன்: அண்மை விளி. நீ அருள். பாவக்கொடுமை இல்லாதஊர்; தலவிசேடம். (௩)

4. அருணா வனன்கற் பகவல் லியநட னண்டர்பதம்
அருணா வனன்கற் பகவல் லிலையயி லன்றுதொட்ட
அருணா வனன்கற் பகவல்லி நாத னணிமயிலை
அருணா வனன்கற் பகவல்லிப் போதிடத் தண்ணுவனே.

---

* அகம் - பாவம்.

எ - து. * அருண வனன் - மானைத்தரித்த கெங்காதரன், கற்பு அகம் அல்லிய நடன் - முல்லை நிலத்தையும் அல்லியமென்னும் கூத்தையும்உடைய திருமாலுக்கும், அண்டர் - தேவர்களுக்கும், பதம் அருண அனன் - கால் சிவந்த அன்னவாகனனுக்கும், கல் பக - கிரௌஞ்சமலை பிளக்கும்படிக்கு, வல் இலை அயில் அன்று தொட்ட - வலிய இலைபொருந்திய வேலாயுதத்தை முன்பொரு காலத்தில் விடுத்த, அருண ‡ வனன் - கோடி சூரியப் பிரகாசத்தைப் பொருந்திய சுப்பிரமணிய சுவாமிக்கும், கற்பகவல்லிநாதன் - கற்பகவல்லி என்னும்பெயரையுடைய உமாதேவிக்கும் கர்த்தன், அணி மயிலை அருள்நவன் - அழகு பொருந்திய திருமயிலைப் பதியில் எழுந்தருளி இருந்து யாவருக்கும்அனுக்கிரகம் செய்யும் நவரூபத்தையுடையவன், நன்கு அற்பு அக அல்லிப்போதிடத் தண்ணுவனே - நல்ல அன்புபொருந்திய என்னுடைய இதயத்து மலர்ந்த அகவிதழையுடைய தாமரைப் பூவினிடத்துப் பொருந்துவான். எ - று.

நவன் அண்ணுவன். (௪)

5. வனவேட ஞரணி யக்கங்கொண் டாள்பவன் மாதரெண்ணெவ்
வனவேட ஞரணி யக்கனை நட்டவன் வாரெதிர்செவ்
வனவேட ஞரணி யக்கர வாவென் மயிலைமன்ன
வனவேட ஞரணி யக்கட லோவரின் வெல்லுவனே.

எ - து. வனவேடனார் - ஆரணியத்தில் வாழும் கண்ணப்பநாயனார், அணி அக்கம் கொண்டு ஆள்பவன் - சாத்தின கண்ணைத் தரித்துக்கொண்டு அவரை ஆண்டவன், மாதர்எண் எவ்வனவேடன் - தாருகாவனத்து மாதர்கள் ஆசையால்நினைக்கும் இளமை வேடத்தை யுடையவன், நார்அண் இயக்கனை நட்டவன்-அன்புபொருந்திய குபேரனைத்தோழனாகச்செய்தவன், §வார்எதிர் செல்-வைகையாற்றின் எதிரே செல்லும், ¶வன ஏடன் - திருப்பாசுரத்தின் எழுத்தைப் பொருந்திய திருவேட்டை யுடைய திருஞானசம்பந்தர், ஆர் அணி அக்குஅரவா என் - ஆத்திமாலையினையும் அழகிய சங்குமணியினையும் பாம்பினையும் உடையவனே என்று தோத்திரம்செய்யும், மயிலைமன்னவன் - திருமயிலைப் பதியின்கண் வாழும் இறைவன், நவேள் - சிறந்த மன்மதன், தன் ஆர்அணி அக்கடலோவரின் - தனது மிகுந்த படைவகுப்பாகிய அக்

* அருணம் - மான்; வனம் - ஜலம். ‡ வன்னன்.
§ வார் - நீர். ¶ வன்னம் - எழுத்து.

கடலோடு என்னைப் பொருதற்கு வருவானாகில், வெல்லுவனே - வெல்லு வான். எ - று.

ஒடுருபு கடைக்குறை. ந - சிறப்பு. துறை - கடவுட் பக்கம். மன்ன வன் வெல்லுவான். (ரு)

6. வரியானை யானையன் மாயா புரிசத்தி மன்னன்மன்னு
வரியானை யானையன் மாயா புரியுடன் மாலகற்றை
வரியானை யானையன் மாயா புரியென் மயிலையினாண்
வரியானை யானையன் மாயா புரிமலர் வாயன்னமே.

எ - து. வரியானையான் - யானைமுகவனுக்கு, ஐயன் - பிதா, மாயா புரி சத்தி மன்னன் - அன்பில்லாதாருக்கு மாயையைச் செய்யும் உமா தேவிக்கு நாயகன், மன் உவரியான் ஐ - நிலைபெற்ற பாற்கடலில் துயில் வானுக்குச் சுவாமி, ஆன் ஐயன் - இடபவாகனத்தை யுடைய பெரியோன், மாயாபுரி உடல் மால் அகற்று - பித்தனைப் போலத் தூர்க்கந்தத்தையுடைய உடலால் வரும் மயக்கத்தைத் தீர்க்கும், ஐவரியான் - ஐந்தெழுத்தை யுடையவன், ஐயான் - அழகுள்ளவன், ஐயன் - ஐயமேற்றவனது, மாயாபுரி என் மயிலையின் - சத்தபுரியில் மாயாபுரி என்றுசொல்லும் பெயரையுடைய திருமயிலைப் பதியின், நாண் வரியான் - நாணை வண்டாக்கிக்கொண்ட மன் மதனோ, மையான் - மடியான், ஐ அல் மாயா - வியப்பையுடைய இராப் பொழுதோ விடியாது, புரிமலர் வாய் அன்னமே - அன்பைப் பொருந்திய மலர் போலும் வாயையுடைய தோழி. எ - று.

மாயாதென்பது கடைக்குறைந்து நின்றது.

கிளவி: தலைவன் பொருண்மேற் பிரிந்துழித் தலைவி கலங்கல். யான் என் செய்வேன் என்பது குறிப்பெச்சம். (சு)

7. வாயனந் தங்க டருமஞ் செயப்பொருள் வாழ்த்தவுனை
வாயனந் தங்க டருகிலன் வேதன் மனத்தின்மகிழ்
வாயனந் தங்கட ருள்ளிதழ்க் கஞ்ச மதியெனவெல்
வாயனந் தங்கட ருந்தட வாவி மயிலையனே.

எ - து. வாயன் - மெய்மையனே, அந்தங்கள் தருமம் செயப்பொருள் - அழகுகளையுடைய நினது புண்ணியஞ் செய்தற்குப் பொருள்களையும், வாழ்த்த உனை வாய் அனந்தங்கள் - நின்னைத் தோத்திரம் செய்தற்கு எண் ணில்லாத வாய்களையும், தருகிலன் வேதன் - பிரமா படைத்திலன், மனத் தின் மகிழ்வாய் அனம் தங்கு - உள்ளத்து மகிழ்ச்சியாக அன்னங்கள் இருக் கும், அடர்-பொற்றகடுபோல, உள் - நினைத்தற்கு ஏதுவாகிய, இதழ்கஞ்சம் - இதழையுடைய செந்தாமரைப் பூக்கள் சூரியனைப் போலவும், மதியென -

சந்திரனைப் போலவும், எல்வாய் அல் - பகற்காலத்தும் இராக்காலத்தும், நந்து - சங்கங்களும், அடரும் - செறிந்திருக்கும், அங்கு - அவ்விடமாகிய ஆகாயம் போலும், தடவாவி மயிலையனே - இடமகன்ற வாவிசூழ்ந்த திரு மயிலைப் பதியில் வாழுஞ் சிவனே. எ - று.

வாயன் - வாய்மை என்பது மைவிகுதி கெட்டு அன்விகுதி பெற்றது; அண்மை விளியாய் நின்றது. அங்கடரு மென்பதனை அடருமங்கென மாறுக. தியானம் பண்ணுதற்கு ஒருமையில்லாத மனமுடையேனென் பது குறிப்பெச்சம். சூரியனைப் போல என்பது அவாய் நிலையான் வந்தது. * அன்னந் தென்பது குறைந்து நின்றது.

வேதன் தருகிலன். (எ)

8. அனேகாவென் பார்க டமக்குப் பலவுரு வாந்தகுதி
யனேகாவென் பார்கடத் தோர்பாவை செய்த வவர்க்கருளை
யனேகாவென் பார்கடந் தாரறி யாய்பொழி லாமயிலை
யனேகாவென் பார்கட னஞ்சார் கிரீபத்தை யாசைநெஞ்சே.

எ - து. அனேகா என்பார்கள் தமக்கு - பலரூபமுடையவனே யென்று நினைத்தவர்க்கு, பல உருவாம் தகுதியன் - பலவடிவாய் வருமுறைமை யுடையவனே, ஏகா - என்றும் ஒருதன்மையை யுடையவனே, என்பு ஆர் கடத்து ஓர் பாவை செய்த அவர்க்கு அருள் ஐயன் - என்பு நிறைந்த குடத் தின் கண்ணே அந்த எலும்பினை ஒப்பற்ற பூம்பாவையாகச் செய்த சம்பந்த மூர்த்திக்குத் திருவருளைக் கொடுக்கும் கர்த்தனே, ஏகா வென் பார் - நீங் காத வெற்றியையுடைய பூமியை, கடந்தார் அறியாய் - கீண்டு தேடிய மாய னால் அறியப்படாதவனே, பொழில் ஆம் மயிலையனே - எக்காலமுஞ் சோலையுண்டாகா நின்ற திருமயிலைப்பதியில் வளர்பவனே, கா என் - இரட்சி யென்று சொல்லு, கடல் நஞ்சு ஆர் கிரீபத்தைப் பார் - கடலினுள தாகிய விடம் பொருந்திய அவனது கந்தரத்தைப் பார்ப்பாயாக, ஆசை நெஞ்சே - வீணாசையைக் கொண்ட நெஞ்சமே. எ - று.

நீ என்னும் தோன்றா எழுவாய் என் பார் என்னு மிரண்டு பயனிலை கொண்டது. வென் - வெற்றி. பார் கடல் நஞ்சார் கிரீபத்தை.

இனி அன்னுவயம்: கடல் நஞ்சார் கிரீபத்தைப் பார். கிரீவம் கிரீ பம் என வழிமொழியாயிற்று. (அ)

9. ஆம்பலஞ் சங்கத் தாளத் தலரு மணிமயிலை
ஆம்பலஞ் சங்கத் தரியுரி யாயரு ளாத்திமுல்லை

---

* அன்னந்து என்பது அனந்து என நின்றது.

ஆம்பலஞ் சங்கத் தலைமதி தென்ற லலரிசைக்கும்
ஆம்பலஞ் சங்கத் தடன்மார வேள்கணைக் காற்றிலளே.

எ - து. ஆம்பல் - குமுதமலர்கள், அம் சங்கத் தாளத்து அலரும் - அழகிய சங்கங்க ளீன்ற முத்தங்களின் ஒளியால் மலர்கின்ற, அணி மயிலை - அழகிய திருமயிலைப் பதியிடத்துவாழும், ஆம்பல் அஞ்சு அங்கத்து - யானைகள் அஞ்சுதற்கு ஏதுவாகிய உறுப்புகளையுடைய, அரியுரியாய் - நரசிங்கத்தின் தோலைப் போர்த்துக் கொண்டவனே, அருள் ஆத்தி - உனது ஆத்தி மாலையைக் கொடுப்பாயாக, முல்லை ஆம் பல் அஞ்சம் - முல்லையரும்பாகுந் தந்தங்களைப்பொருந்திய அன்னநடையை யுடையாள், கத்து அலை - ஒலிக்குங் கடலும், மதி - சந்திரனும், தென்றல் - தென்றற்காற்றும், அலர் - ஊரார் சொல்லும் பழிமொழியும், இசைக்கும் ஆம்பல்-ஊதும் வேய்ங்குழலுமாகிய, அஞ்சு அங்கத்து - ஐவகை உறுப்பிற்கும், அடல் மாரவேள் கணைக்கு - கொலை செய்யும் மன்மத பாணத்திற்கும், ஆற்றிலளே - எதிர் நின்று ஆற்றமாட்டாள். எ - று.

துறை - கடவுட் பக்கம்; நற்றாயிரங்கல். ஆம்பல் அஞ்சு அங்கத்து - யானைகள் அஞ்சுதற்கு ஏதுவாகிய உருவத்தையுடைய எனவும், அம் சங்கத்து - சிறந்த காமத்துயரத்தை வாய்ந்த கூட்டத்து எனவும் ஆம். (கூ)

10. இலங்கங் குழையத் தவஞ்செய் மயிலைக் கிறைவர்மன்னும்
இலங்கங் குழையத் தரவிந்த னார்சிர மேந்தார்சங்
கிலங்கங் குழையத்தர் வெற்பின்மின் னாருக் கிமையமெய்ச்ச
யிலங்கங் குழையத் தனங்கருங் கண்க ளிடைவஞ்சியே.

எ - து. இல் - தம்மனையாளாகிய உமாதேவி, அங்கம் குழையத் தவம் செய் மயிலைக்கு இறைவர் - திருமேனி வருந்தத் தவம் செய்த தலமாகிய திருமயிலைப் பதிக்குக் கர்த்தர், மன்னும் இலம் - நிலைபெற்ற வீடாகிய, கம் - சலமும், குழை - இலைகளும், * அத்து - பொருந்தும், அரவிந்தனார் சிரம் ஏந்து அரர் - தாமரைப்பூவில் இருக்கும் பிரமதேவர் சிரத்தைக் கரத்தில் தரிக்கும் அரனார், இலங்கு அம் சங்கக் குழை அத்தர் - விளங்கும் அழகிய சங்கக் குழையையுடைய சிவனாருடைய, வெற்பின் மின்னாருக்கு - மலையிடத்திற் கண்ட மின்போன்ற மங்கைக்கு, இமையம் மெய்ச் சயிலம் - இமையமென்னும் மெய்யாகிய மலையும், கங்கு உழை - தினைப்புனத்திற் சஞ்சரிக்கும் மானும், அத்தனம் கருங்கண்கள் - அந்த முலைகளும் கரியகண்களும், இடை வஞ்சியே - இடை வஞ்சிக் கொடியும் ஆம். எ - று.

துறை - அவன் அஃது இவ்விடத்து இவ்வியற் றென்றல். சங்கிலங்

* அத்துதல் - பொருந்தி யிசைத்தல்; சூ. நிகண்டு. கக: 12.

சங்குழை அத்தர்: அன்னுவயம் - இலங்கு அம் சங்குக் குழையத்தர். (கo)

11. வஞ்சிக்கு முப்புர மால்கணை மேருவில் வாய்ப்பவெய்தி
வஞ்சிக்கு முப்புர மால்வென் மயிலை வரதமலை
வஞ்சிக்கு முப்புர மால்சேரப் பாலருண் மன்னகைத
வஞ்சிக்கு முப்புர மால்செலப் பாதம் வழங்குவையே.

எ - து. வஞ்சிக்கு - மாலை வேய்ந்து பொருதலைக் குறித்துச் செல்லுதற்கு, உம் - உம்முடைய, உப்பு உரம் மால்கணை - கடலிடத்துப் பள்ளி கொள்ளும் திருமால் பாணமாய், மேருவில் - மகமேருவில்லாய், வாய்ப்ப எய்தி - வாய்க்கும்படி பொருந்தி, வஞ்சிக்கும் முப்புர மால் வெல் - தேவர்களை வஞ்சித்தலைச் செய்யும் முப்புரத்தார் பெருமையை வென்ற, மயிலை வரத - திருமயிலைப் பதியில் வாழும் வள்ளலே, மலை வஞ்சிக்கும் - திருமாலுக்கு ஒரு பாகங்கொடுத்ததேயன்றி மலை மகளுக்கும், உப்பு - இனிமையும், உரம் - ஞானவலிமையும், மால் - விருப்பமும், சேர - பொருந்த, பால் அருள் மன்ன - இடப் பாகத்தைக் கொடுத்த கர்த்தனே, கைதவம் - வஞ்சனையும், சிக்கும் - பிணக்கும் பொருந்திய, உப்புரம் - அந்தத் தேகங்களாலுண்டாகிய, மால்செல-மயக்கவினை என்னை விட்டுப் போக, பாதம் வழங்குவையே - உனது திருவடியை அருளுவாய். எ - று.

உப்புரம் - இவ்வுடலுக்கு முன் எடுத்த உடலங்கள்; உகரம் சுட்டு. மால்: ஆகு பெயர். * "குன்றி னெஞ்சுபக வெறிந்த வெஞ்சுடர் நெடுவேல்" என்றாற் போல உரமென்றது ஈண்டு இடப்பொருட்டாய் நின்றது. நீ - தோன்றா எழுவாய். வழங்குவை: பயனிலை. (கக)

12. குவையுரு முத்தலை நீக்கு மயிலைக் குழகரிலங்
குவையுரு முத்தலைச் சூலர்பொற் றாண்மனங் கோயில் செய்
குவையுரு முத்தலை யுற்பவந் தீர்ந்து குறைவின்றியோங் [தாங்
குவையுரு முத்தலை யெய்து மராவெனக் கூற்றஞ்சுமே.

எ - து. குவை உரு முத்து - குவியலாக இருக்கும் வெண்ணிற முத்தங்கள், அலை நீக்கும் மயிலைக் குழகர் - இருளினைத் தூரக்குந் திருமயிலைப் பதியின் வாழும் நித்தியமாயிருக்கும் இளமையையுடையவர், இலங்கு வை உரு முத்தலைச் சூலர் - பிரகாசிக்கும் கூர்மை வடிவினையும் மூன்று தலையினையும் பொருந்தும் சூலாயுதத்தரது, பொன்தாள் - பொலிவு பொருந்திய பாதத்தை, மனம் கோயில் செய்து ஆங்கு வை - நெஞ்சமே உன்னைக்

*. குறுந். க. இச்செய்யுளில் உள்ள நெஞ்சென்றது இடப்பொருட்டாக நின்றதென்பது இவ்வுரையாசிரியர் கொள்கை.

கோயிலாகச் செய்து அக்கோயிலுள்ளே வைப்பாயாக, உரு முத்தலை உற்பவம் தீர்ந்து - அச்சத்தைச் செய்யும் பழையகடல் போலும் பிறவியெல்லாந் தவிர்ந்து, குறைவு இன்றி ஓங்குவை - ஞானத்திற் சிறிதும் குறைபாடின்றி யாவர்க்கு மேலாயிருப்பாய், உருமுத் தலை எய்தும் அராவென - இடியினிடத்திற் செல்லும் பாம்பு அஞ்சுவதுபோல, கூற்று அஞ்சுமே - யமன் நம்மிடத்தில் வருதற்கு அஞ்சுவானாதலால். எ - று.

* பழைய கடல்-சகரரால் தோண்டுதற்கு முன்னுள்ள கடல். மூந்து, முத்தென வலித்து நின்றது. உருமுத்தலை எய்து மராவென என்பது அபூத உவமை. நீ: தோன்றா எழுவாய். வை: பயனிலை. (கஉ)

13. அஞ்சன நாட்டத் தரம்பையர் போல வணிநடைகொள்
அஞ்சன நாட்டத்தன் போற்று மயிலைய னன்புசெய்யும்
அஞ்சன நாட்டத்த னம்புயத் தாடுணை யாகிநெஞ்சே
அஞ்சன னாட்டத் தரந்தையைத் தீர்த்துவந் தாட்கொளுமே.

எ - து. அஞ்சன நாட்டத்து அரம்பையர் போல - கரியகண்களையுடைய தெய்வப் பெண்களைப் போல, அணி நடைகொள் அஞ்சன் - அழகிய நடையைப் பொருந்திய அன்னவாகனனும், நல்நாட்டு அத்தன் - மருதநிலத்திற்குத் தெய்வமாகிய இந்திரனும், போற்று மயிலையன் - தோத்திரஞ் செய்யும் திருமயிலைப் பதியில் வாழுஞ் சிவன், அன்பு செய்யும் அம்சனம் - தன்னிடத்து அன்பை வைக்கும் அழகிய மனிதரை, நாட்டு அத்தன் - உயர்ந்த பதவிகளிலே நிலைபெற வைக்கும் திருக் கரத்தை யுடையவனது, அம்புயத்தாள் துணையாகி - தாமரை மலர் போன்றபாதம் நமக்குத் துணையாயிருந்துகொண்டு, நம் நாள் தத்து அரந்தையைத் தீர்த்து உவந்து ஆட்கொள்ளுமே - நம்முடைய வாழ்நாளுக்குவரும் அவமிருத்துத் துன்பத்தை நீக்கி மகிழ்ந்து நம்மை அடிமை கொள்ளுமாதலால், நெஞ்சே அஞ்சல் - நெஞ்சமே அஞ்சாதே. எ - று.

அன்னுவயம்: நெஞ்சே அஞ்சன நாட்டத்து அரந்தையைத்தீர்த்து வந்தாட்கொள்ளுமே: என்பது நம் நாட்டத்து அரந்தையைத்தீர்த்து வந்து ஆட்கொள்ளும் நெஞ்மே அஞ்சல் எனவாம். நன்னாடு: விகாரம். சோதிடத்தில் காலசக்கர நேரே நாட்டவராமல் இராசிகளை யிடையிலே விட்டுத் தத்திவருங்காலத்து அவமிருத்து வருமாதலால் அவமிருத்தைத்தத் தென்றார். நீ: எழுவாய்; அஞசல்: பயனிலை; அரந்தை: செயப்படு பொருள். (கங)

14. ஆட்டானம் மானங்கை யம்புலி தங்கொள் ளரனடத்தும்
ஆட்டானம் மானங்கை யம்புலி வேணிய னைமுகன்பேட்

* "குடாஅது, தொன்று முதிர் பௌத்தின்" புறநா. கூ: 4.

டாட்டானம் மானங்கை யம்புலி ஞேன்மயி லைப்பதியான்
ஆட்டானம் மானங்கை யம்புலி சேட னமரர்களே.

எ - து. ஆட்டான் - வெற்றியையுடையான், அம்மான் - உயிர்கட்கெல்லாம் பிதாவானவன், அங்கை - சங்குமணியினையும், அம் - கங்கையினையும், புல் - அறுகினையும், இதம்கொள் அரன் - நன்மையுடனே தரித்துக் கொள்ளுஞ் சிவன், நடத்தும் ஆட்டான் - செலுத்துகின்ற ஆட்டை வாகனமாகவுடைய அக்கினியையும், நமான் - சிறந்த மானையும், அங்கை - அங்கையிடத்தேந்தி, அம்புலிவேணியன் - பிறையைச் சடையிற் றரித்தபரன், ஐமுகன் - ஐந்து திருமுகத்தையுடையவன், பேட்டு ஆட்டான் அம்மான் - பேடாடலென்னும் கூத்தையுடைய காமனுக்கு அம்மானென்னு முறையுடையோன், அங்கு ஐயம் * புலிஞேன் - தாருகாவனத்து ஐயமேற்றவன், மயிலைப்பதியான் - திருமயிலைப் பதியில்வாழுஞ் சிவன், ஆள் - அவனுடைய அடியார் யாவரென்னில், தானம் மால்-மாவலியிடத்தில் தானம்வாங்கிய திருமாலும், நங்கை - அவனுடைய செந்திருவும், அம் புலி - அழகிய வியாக்கிரபாதரும், சேடன் - பதஞ்சலியும், அமரர்களே - தேவர்களுமாகிய இவர்களே எ - று.

அக்கு அங்கு எனமெலிந்து ஐபெற்று நின்றது. தானம்மால் என்பதில் மகரம் ஒற்றில்வழியொற்றாய் வந்தது. இவர்கள்: எழுவாய். ஆள்: பயனிலை. (௧௪)

15. அமரச் சலந்தரற் காய்ந்தோய் மயிலை யரசடையுள்
அமரச் சலந்தரம் வைக்கும் பரம வகத்துவன்னி
அமரச் சலந்தர ளத்தி னகைமுக மாக்கும்வஞ்சம்
அமரச் சலந்தரந் தந்தரு ணல்ல வறிவென்றுமே.

எ - து. அமர் அச் சலந்தரற் காய்ந்தோய் - போர்த்தொழிலையுடைய அந்தச் சலந்தராசுரனைக் கோபித்தவனே, மயிலை அர - திருமயிலைப் பதியின் வாழுஞ்சிவனே, சடையுள் அமர - சடைமுடியிற் பொருந்த, சலம் † தரம் வைக்கும் பரம - கங்கையினையும் வெண்டலைமாலையினையும் அணிந்த பரனே, அகத்து வன்னி அமரச் சலம் - நெஞ்சத்து அக்கினிபோலக்கோபத்தையும், தரளத்தின் நகை முகம் - முத்தங்களைப்போல முறுவலித்தலை முகத்தின் கண்ணும், ஆக்கும் வஞ்சம் அமர் அச்சு அலம் - உண்டாக்கும் வஞ்சனையை விரும்புதற்கேதுவாகிய உடலெடுத்தது அமையும், தரம் தந்து - இனிமேற் சனனமெடாத மேன்மையைக் கொடுத்து, நல்ல அறிவு என்றுமே யருள் - சிவஞானத்தை எக்காலமுந் தருவாய்.

---

* புல்லிஞேன். † தரம் - தலை.

சலம் என்பது கோபம். அச்சு - உடல். அலம் - அமைவு. அன்னு வயம்: அருணல்லவறிவென்றும், நல்லவறிவென்றுமேயருள் எனவாம். என்றும் அருளென்றது சமவாதகண்டனம். நீ: எழுவாய். அருள்: பயனிலை. (கரு)

16. என்றருந் தந்த நினைவுல கத்தவர்க் கேழைநெஞ்சே
என்றருந் தந்த மிலக்கியங் கற்றறி வெய்துவைநீ
என்றருந் தந்த னெனச்செய் மயிலை யிறைவர்தந்த
என்றருந் தந்தமில் போகமெல் லாம்பின் பிடரில்லையே.

எ - து. என்தரும் - என்ன பயனைக் கொடுக்கும், உலகத்தவர்க்குத் தம் தம் நினைவு - உலகத்துள்ள உயிர்கட்குத் தங்கள் தங்கள் நினைவுகள்; ஏழை நெஞ்சே அறிவில்லாத நெஞ்சமே! என்று - எக்காலத்து, அருந்தந்து அம் இலக்கியம் - அரியனவாகிய நூல்போன்ற அழகிய சாத்திரங்கள், கற்றறிவு எய்துவை - ஓதி ஞானத்தைப் பொருந்துவாய், நீ - (எனக்குத் துணையாகிய) நீ, என்று * அருந்தந்தன் எனச் செய்மயிலைஇறைவர் - சூரியனைத் தந்தமில்லாதவனென்று செய்த திருமயிலைப் பதியின் வாழும் சிவனார், தந்த என்று அருந்து - (நம்முடைய வினைக்கீடாக) அமைத்துக் கொடுத்தனவென்று கருதிப் புசிப்பாயாக, அந்தம் இல் போகமெல்லாம் - முடிவில்லாத போகங்களை யெல்லாம், பின்பு இடர் இல்லையே - (இந்நிலையினின்ற) பின்னர் உனக்கு ஒரு துன்பமுமில்லை யாதலான் எ - று.

நீ: இசை யெச்சம். தூய்மையு நுண்மையும் உடைமையின் நூல் போன்ற தென்ற தென்க. நீ: எழுவாய். அருந்து: பயனிலை. (கசு)

17. இடப்பாலை யானனத் தான்பணி சங்கரன் யாழினிசைத்
திடப்பாலை யானனத் தான்ஞான மூர்த்தி யிமையமின்சேர்
இடப்பாலை யானனத் தான்மயி லைப்பதி யேத்திலர்போல்
இடப்பாலை யானனத் தான்மகள் சேறற் கெழுந்தனனே.

எ - து. இடப்பால் - விசாலம் பெருந்திய பாற்கடலினையும், ஐஆல்- அழகிய ஆலிலையு முடைய, நல்நத்தான்பணி சங்கரன் - நல்ல சங்கபாணி வணங்கும் சிவன், யாழின் இசைத்திடு அபாலை - வீணையாலே சொல்லப் படும் அந்தப் பாலைப் பண்ணைப்பாடும், ஆனன் - இடபவாகனத்தன், அத் தான் - சிவந்த திருமேனியை யுடையவன், ஞானமூர்த்தி - ஞானசொரு பன், இமையமின்சேர் இடப்பால் ஐயானனத்தான் - மலைமகள் பொருந்திய வாம பாகத்தையுடைய ஐம்முகனது, மயிலைப்பதி ஏத்திலர்போல் - திரு மயிலைப் பதியைத் தோத்திரம் செய்யாதாரைப்போல, இடப்பாலையான் -

* "அருங்கேடன்" என்றது போல நின்றது.

BESANT NAGAR. MADRAS-600 090.

பாலை நிலத்திடத்து, அனத்தான் மகள் சேறற்கு எழுதினனே - அன்ன வாகனத்தையுடைய பிரமன் என்னுடைய மகள் செல்லுதற்கு (அவள் தலையில்) எழுதினான். எ - று.

ஆல்: ஆகுபெயர். நனத்தான் - நல்நத்தான் என்பது விகாரம். ஆனன்: விகுதியைப் பெற்றது. அத்து - சிவப்பு. பாலையிடம்: இடப் பாலையென முன்மொழி பின்மொழியாயிற்று. ஏழாவதன் பொருட்கண் மூன்றாவதுருபு வந்தது. கிளவி: நற்றாய் அயலார் தம்மொடு தாங்கலளாகிச் சாற்றல். அனத்தான்: எழுவாய், எழுதினான்: பயனிலை. (கஎ)

18. இனற்கிளைப் பாற்று வணத்திரி சூல ரெழுபரித்தேர்
இனற்கிளைப் பாற்று வணக்கா மயிலை யிறைவரன்பாய்
இனற்கிளைப் பாற்று வணத்தார்நல் காவிடி னின்றிரவின்
இனற்கிளைப் பாற்று வணரலை மூழ்குவ ளேந்திழையே.

எ - து. இன் அற்கிளை - இனிய இருட் கூட்டத்தை, பாற்று - போக்கும், வணத்திரிசூலர் - ஒளி பொருந்திய முத்தலைச் சூலத்தர், எழு பரித்தேர் இனற்கு - எழு (பச்சைக்) குதிரையைக் கட்டிய பொற்றேரை யுடைய சூரியனுக்கு, இளைப்பு ஆற்று வணக் கா மயிலை இறைவர் - (அனு தினமும் செல்லும்) இளைப்பினைத் தீர்க்கும் அழகிய சோலை சூழ்ந்த திரு மயிலைப் பதியின் வாழும் கர்த்தர், இநற் கிளைப்பால் அன்பாய் - இந்த நல்ல தூதாகச் சென்ற கிளியிடத்துக் கிருபை செய்து, துவள் ந தார் நல்காவிடின் - (எண்டோளிற் கிடந்து) அசையும் சிறந்த (நிறத்தை வாய்ந்த கொன்றை) மாலையைக் கொடாதுவிட்டால், இன்று இரவின் - இன்றை இராக்காலத்தில், இனற் கிளைப்பு ஆற்று - துன்பப் பெருக்காகிய ஆற்றின் கண், வணர் அலை மூழ்குவள் ஏந்திழையே - (சோகமாகிய) வளைந்த அலையின்கண்ணே அழுந்துவாள் ஆபரணங்களை யுடைய தலைவி. எ - று.

பாற்று - போக்குதல். அன்னுவயம்:— அன்பாய் இனற் கிளைப்பால் இனற் கிளைப்பாலன்பாய்; அது விகாரம். கிளவி தலைவி தூது விடுதல் கண்ட தோழி சொல்லியது. ஏகதேச வுருவகம். ஏந்திழை: அன்மொழித் தொகை. ஏந்திழை: எழுவாய்; மூழ்குவள்: பயனிலை. (கஅ)

19. ஏந்தலை யந்தரத் தாரக மேவு மிறைமயிலை
ஏந்தலை யந்தரத் தாரகங் கைத்தலத் தேற்றவண்ணல்
ஏந்தலை யந்தரத் தாரக லாதணி யீசனரி
யேந்தலை யந்தரத் தாரக மெய்ப்பொரு ளீகுவனே.

எ - து. * ஏந்தல் ஐ - (கயிலை) மலையில் எழுந்தருளியிருக்கும் சுவாமி, அந்தரத்தார் அகம் மேவும் இறை - ஆகாயத்திற் றேவர்கள் மனம் விரும்பும்

* ஏந்தல் - மலை.

கர்த்தன், மயிலை எந்தல் - திருமயிலைப் பதியில்வாழும் சிறந்தோன், ஐயம் தர-(தாருகாவனத்துத்தவமாதர்) பிட்சையையிட, * தார் அகங்கைத்தலத்து ஏற்ற அண்ணல்-மலர்போலும் திருக்கரத்திடத்தினகத்தே ஏற்றுக்கொண்ட சிவன், ஏந்து அலை அம்-ஏந்திய அலையையுடைய கங்கையினையும், † தரம் தார் - தலைமாலையினையும், அகலாது அணி ஈசன் - (எக்காலமும்) நீங்காமல் தரிக்கும் பரமேசுவரன், அளியேம்தலை - எளியேமாகிய எங்களிடத்து, அம் தரம் தாரக மெய்ப்பொருள் ஈகுவனே - அழகும் மேம்பாடும் பொருந்திய தாரகப் பிரமமாகிய மெய்ப்பொருளை அனுக்கிரகிப்பான். எ - று.

ஏந்தலை - பெருமையையுடைய சுவாமி யெனினும் அமையும். அவன்: தோன்றா எழுவாய்; ஈகுவன்: பயனிலை. (கக)

20. ஈயா தவனய னத்துணை யெய்து க லில்லைபொருள்
ஈயா தவனய னத்துறு நற்கதி யெய்தல்கல்வில்
லீயா தவனய னத்துவி தம்பெற வெண்ணுபுரா
ரீயா தவனய னந்து மயிலை யிறையவனே.

எ - து. ஈ ஆதவன் நயனத்துணை எய்துதல் இல்லை - (பறக்கும்) ஈயானது சூரியனது நேத்திரத்தளவும் செல்லுதல் இல்லை, (அதுபோல,) பொருள் ஈயாதவன் - (தான்தேடிய) பொருளை (நல்லோர்க்குக்) கொடாதவன், அயனத்து உறு நற்கதி எய்தல் - சன்மார்க்கத்தினாலே பொருந்தும் நல்ல பதவியைப் பொருந்துதல், கல் வில்லீ - (மகமேருவாகிய) மலையை வில்லாக உடையவனே, யாதவன் அயன் அத்துவிதம்பெற எண்ணு புராரீ-யதுவங்கிசத்தானாகிய திருமாலும் பிரமனும் (ஞானானந்த) அத்துவித மோட்சத்தைப் பெறுதற்குத் தியானம் பண்ணப்பட்ட சிவனே, யாது - எது? அவல் நயம் நந்து - தாழ்ந்த நீர்த்தடாகங்களில் நல்ல சங்கங்கள் உலாவும், மயிலை இறையவனே - திருமயிலைப் பதியில் வாழுங்கர்த்தனே. எ - று.

அத்துவிதம் - இரண்டன்மை. அவல் - பள்ளம். யாது என்பது ஈண்டு இன்மையைக் குறித்து நின்றது. நந்தென்பதில் நகரம் யமக நோக்கிச் சிறப்புனகரம் ஆயிற்று.

அடியேற்கு உலோபமில்லாத விதரணத்தையும் அதற்கேற்ற பொருள்களையும் தந்தாள்வ ரென்பது குறிப்பெச்சம்.

எய்துதல்: எழுவாய்; யாது: பயனிலை. (உ0)

21. இறையாய வெள்ளங்கத் தார்கவிப் பார்புரந் தேதுபெற்ற
திறையாய வெள்ளங்கத் தார்சுகம் வேட்குநெஞ் சேயுய்குவாய்

* தார் - பூ. † தரம் - தலை.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR. MADRAS-600 090.

இறையாய வெள்ளங்கத் தாரெண் புயத்த னெழின்மயிலை
இறையாய வெள்ளங்கத் தார்நெய்யின் மேவுவ னெங்கு
[மென்றே.

எ - து. இறை ஆய வெள்ளம் - அரசராகிய வெள்ளமென்னும் எண்ணுடையோர், கத்து ஆர்கலி பார் புரந்து பெற்றது ஏது - ஒலிக்கும் கடல் சூழ்ந்த பூமியை இரட்சித்தலாற் பெற்ற பயன் யாது? இறை - பூமியில் தங்கும், ஆயம் எள் அங்கத்து - மக்ளிர்களுடைய (மல பாண்டம் என்று) இகழும் (மூலை முதலிய) அங்கங்களால், ஆர் சுகம் வேட்கும் நெஞ்சே - அனுபவிக்கும் சுகத்தை விரும்பும் நெஞ்சமே! இறை ஆய உய்குவாய் - ஓர் இறைப்பொழுதாயினும் தியானம் பண்ணிஞல் பிறவிக் கடலை நீந்திக் கரையேறுவாய், (தியானிப்பது எவ்வாறெனின்,) வெள் அங்கம்தார் எண்புயத்தன் - வெள்ளிய எலும்புமாலையை அணிந்த எட்டுத் திருப்புயத்தை உடையவன், எழில் மயிலை இறை - அழகிய திருமயிலைப் பதியில் வாழும் கர்த்தன், ஆய் அ எள் அங்கு - சிறிதாய அந்த எள்ளினிடத்து, அத்து ஆர் நெய்யின் - செவ்வையாக நிறைந்த நெய்போல, மேவுவன் எங்கும் என்றே - உலகமெல்லாம் வியாபித்திருப்பானென்று கருதி. எ - று.

இறை - தங்கல். எள்ளல் - இகழ்ச்சி. அன்னுவயம்:— உய்குவாயிறையாய - இறைஆய உய்குவாய்.

நீ: தோன்ற எழுவாய். உய்குவாய்: பயனிலை. (உக)

22. என்னுக ராவணற் பொற்சடை யாய்கட லேய்ந்தவிடம்
என்னுக ராவணற் காய்ந்தவன் போற்று மிறைவகுழை
என்னுக ராவணற் காமயி லைப்பதி யீசவிவட்
கென்னுக ராவணற் கஞ்சநல் காத திதழியையே.

எ - து. என் - யாது? நாகுஅரா - இளம்பாம்புகள், அணல் - பொருந்துதலையுடைய, பொற்சடையாய் - பொன்னிறமுள்ள சடைமுடியை யுடையவனே! கடல் - உவரியில், ஏய்ந்த - பொருந்திய, விடம் என் - ஆலகாலமென்று சொல்லத்தக்க, ஆகம் - கரிய உடம்பைப் பெற்ற, ராவணன் - இராவணனை, காய்ந்தவன் - சங்கரித்த திருமால் போற்றும் - தோத்திரஞ் செய்யும், இறைவ - சிவனே! குழை - (திருச்செவியிற்சாத்தும்) குழையாகிய, எல் - ஒள்ளிய, நாகு - சங்கத்தையுடைய, அரா - அரனே! வள் - வளவிய, நல் - நல்ல, கா - சோலை சூழ்ந்த, மயிலைப்பதி - திருமயிலைப்பதியில் வாழும், ஈச - ஈசனே! இவட்கு - இந்தத் தலைவிக்கு, என் ஆக - ஏதாக, ரா அணற்கு - இராக்காலத்தின் அண்ண

லாகிய சந்திரனுக்கு, அஞ்ச - பயப்பட, நல்காதது இதழியையே - கொன்றை மாலையைக் கொடாதது? எ - று.

எல் - ஒளி. என்-இகழ்ச்சிக்குறிப்பு. ராவென்னுஞ்சொல் தலைக்குறை.

நல்காதது: எழுவாய். என்: பயனிலை; இது பூட்டுவிற் பொருள்கோள். (உஉ)

23. இதவா ரணங்கொடி யாக்கொண்ட தேவற் கிறைவன்விப
ரிதவா ரணங்கொடி யார்விட்ட போதட்ட வெந்தைநற்பு
னிதவா ரணங்கொடி மாசலை சேர்மயி லேசன்றவ
ளிதவா ரணங்கொடிப் பூமானை யன்பருக் கீபவனே.

எ - து. இத ஆரணம் கொடியாக்கொண்ட தேவற்கு இறைவன் - (உயிர்களுக்கு) நன்மையைச் சொல்லும் வேதத்தைக் கொடியாகக்கொண்ட பிரமாவுக்குக் கர்த்தன், விபரித வாரணம் கொடியார் விட்டபோது அட்ட எந்தை - அதிசயத்தைச் செய்யும் யானையைக் கொடிய தவத்தையுடைய முனிவர் செலுத்திய காலத்து அதனை உரித்துப் போர்த்துக்கொண்ட எம்முடைய சுவாமி, நற்புனித வார் அணங்கொடு- நல்ல பரிசுத்தம் பொருந்திய கங்காதேவியுடனே, இமாசலை சேர்மயிலேசன்-இமோற் பர்வதராசன் மகளாகிய உமாதேவியும் பொருந்தும் திருமயிலைப் பதியில் வாழும் சிவன், தவளிதம் வாரணம் கொடிப்பூ மானை அன்பருக்கு ஈபவனே - வெண்மை நிறம் பொருந்திய பாஞ்சசன்னியத்தையும் தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளையும் தன் அன்பருக்கு அருளுவான். எ - று.

தவளிதம் - வெண்மை. கொடிப்பூ-தாமரைப்பூ. திதி கிர்த்தியத்தைப் பண்ணும்படி அருளுவானென்பதாம்.

அவன் என்னும் சுட்டுப் பெயர்: தோன்றா எழுவாய்; ஈபவன்: பயனிலை. (உங)

24. பவனம் பிருதிவி வான்றீகம் மாகும் பவனைவிரும்
பவனம் பிருதிவி டாமற் செயச்செய் பரனையுன்னும்
பவனம் பிருதிவி யஞ்சேர் மயிலைப் பதிதினஞ்செய்
பவனம் பிருதிவி துப்போல் விளங்குவை பாரினெஞ்சே.

எ - து. பவனம் பிருதிவி வான் தீ கம் ஆகும் பவனை - வாயுவும் பிருதிவியும் ஆகாயமும் அக்கினியும் அப்புவுமாகிய பஞ்ச பூதத்தையு முண்டாக்கும் சிவனை, விரும்ப - இச்சிக்க, வன் * அம்பு - வன்மையையுடைய

---

* ஒரு சமயத்தில் அம்புவடிவங்கொண்டிருந்தமை பற்றித் திருமாலை, 'அம்பு' என்றார்.

திருமால், * இருதி - திதித் தொழிலை, விடாமற் செயச் செய் பரனை - நீங்காமற் செய்ய அனுக்கிரகம் பண்ணும் சங்கரனை, உன்னும் பவம் நம்பு - தியானம் பண்ணும் பிறப்பையே விரும்புக, திவியம் சேர் மயிலைப்பதி இரு - அதிசயம் பொருந்திய திருமயிலைப் பதியிடத்து (எக்காலமும்) இருப்பாயாக, † தினம் செய்பவன் - நாளை உண்டாக்கும் சூரியனைப் போலவும், அம்புஇருது இவி துப்போல-சலருதுவாகிய கார்காலத்தில் வரும் இந்தச் சந்திரனைப் போலவும், பாரில்விளங்குவை நெஞ்சே - பூமியிடத்திற் பிரகாசிப்பாய் நெஞ்சமே! எ - று.

வனம்பு: வன்மை, கடைகுறைந்து நின்றது. அன்னுவயம்:— இருதிவியஞ்சேர் மயிலைப்பதி-திவியஞ்சேர் மயிலைப்பதி இரு; திவியம்-திவ்வியம்.

நீ: தோன்றா எழுவாய்; விளங்குவை: பயனிலை. (உச)

25\. பாரிடந் துன்னடிப் புக்கர சாகிய பாண்டரங்கா
பாரிடந் துன்னடி காணான் முகுந்தனப் பாதநிலப்
பாரிடந் துன்னடி காணின் மயிலைப் பதியைத்துதிப்
பாரிடந் துன்னடி யாரெனச் செய்கை பரமுனக்கே.

எ - து. துன் பாரிடம் நடிப்புக்கு-அடுத்த பூதகணங்கள் ஆடும் நடத்திற்கு, அரசு ஆகிய பாண்டரங்கா - கர்த்தனாகிய பாண்டரங்க நடனத்தையுடையவனே! பார் இடந்து உன் அடி காணான் முகுந்தன் - பூமியைக் கீண்டு உனது பாதாரவிந்தத்தைக் கண்டறிந்திலன் திருமால், அ பாதம் - அத்தன்மையதாகிய பாதத்தை, நிலப்பாரிடம் துன் அடிகாள் - பூமியாகிய தேர்ப்பரப்பின்கண் செறியவைக்கும் சுவாமி! நின் மயிலைப்பதியைத் துதிப்பார் - உனது திருமயிலைப்பதியைத் தோத்திரஞ் செய்வாரை, ‡ இடம் துன் அடியார் எனச் செய்கை பரம் உனக்கே - செல்வத்தைப் பொருந்திய நின் அடியார் என்று யாவரும் புகழப்பண்ணுதல் உனக்குக்கடன். எ - று.

அன்னுவயம்:—பாரிடந் துன்னடிப் புக்கு - துன் பாரிட நடிப்புக்கு. அடிகாள் - சுவாமீ! துதிப்பாரை: ஐகாரம் விகாரத்தாற்றொக்கது. இடம் - செல்வம்.

இது தன்னைப் பிறர் போலக் கூறியது.

செய்கை: எழுவாய்; பரம்: பயனிலை. (உரு)

26\. பரவுத்தி யானம் புயக்கண்ணைச் சாத்தும் பதத்ததிக்கம்
பரவுத்தி யானம் புயல்வானந் தோயும் பதிமயிலைப்

---

* திதி என்பதில் தி என்னும் எழுத்துஇரண்டு இருப்பதனால் அதனை இருதி யென்றார். † தினஞ் செய்பவன் - தினகரன். ‡ குறள், 218, 910.

பரவுத்தி யானம் புயர்தனத் தாணின் பவனிகண்டு
பரவுத்தி யானம் புயத்தாக்க வுற்றதப் பாலணங்கே.

எ - து. பரவு உத்தி ஆன் - வித்தாரமாகிய உபாயத்தையுடைய (இடபமாகிய) திருமால், அம்புயக் கண்ணைச் சாத்தும் பதத்த-தாமரைமலர் போலும் நயனத்தைச்சாத்திய பாதனே! திக்கு அம்பர-எண்டிசைகளாகிய வத்திரத்தையுடையவனே! உத்தியானம் புயல் வானம் தோயும் மயிலைப்பர - சோலைகள் மேகம் பொருந்திய ஆகாயமளவும் உயர்ந்த திருமயிலைப்பதியில் வாழும் பரனே! உத்தி ஆம் நம்புஉயர்தனத்தாள் - பசலை உண்டாகாநின்ற விருப்பத்தையும் பெருமையையும் பொருந்தும் முலைகளையுடைய நங்கை, நின் பவனி கண்டு - நின்னுடைய திருவுலாவைத் தரிசித்து, பரவுத்தியானம் புயத்து ஆக்க - சொல்லுகின்ற நினைவை நின் திருப்புயத்தின் மேல் வைக்க, அப்பால் அணங்கே உற்றது - அதன் பின்னர் (அவட்கு) வருத்தமே மிக்கது. எ - று.

உத்தி உபாயம், தேமல். பரவுந்தியானம்: வலித்து நின்றது. அன்னுவயம்:—உற்றதப் பாலணங்கே - அப்பால் அணங்கே உற்றது.

அணங்கு: எழுவாய்; உற்றது: பயனிலை. (உசு)

27. அணங்குமை யத்த னகத்தா லயன்றலை யன்றுகொய்தோன்
அணங்குமை யத்த னகத்தா னவரை யருள்வலவை
அணங்குமை யத்த னகத்தா ளெனச்செய் யரன்பணிமேல்
அணங்குமை யத்த னகத்தாகு மாமயி லைப்புரியே.

எ - து. அணங்கு உமை அத்தன் - அழகிய உமையை இடப்பாகத்திலே வைத்தவன், நகத்தால் அயன்தலை அன்று கொய்தோன் - (திருக்கரத்தின்) நகத்தினாற் பிரமன் தலையை முன்பொருகாலத்திற்கிள்ளினவன், அணங்கும் ஐயத்தன் - (தவமாதர்) வருந்துதற்கு ஏதுவாகிய ஐயத்தைப் பெற்றவன், அகம்தானவரை அருள் வலவை அணங்கும் - பாவத்தைச் செய்யும் அசுரரைப் பெற்ற வல்லவையென்னும் பெயரையுடைய தெய்வப் பெண்போல்வாளையும், ஐ அத்தன் அகத்தாள் எனச்செய் அரன் - ஐங்கரனுக்கு மனைவியென்றுசொல்லச் செய்த சிவன், பணிமேல் அண் அம் குமையம் - சேடன் தலையிற் பொருந்திய அழகிய பூமிக்கு நடுவிலுள்ள, தன் நகத்து ஆகும் மா மயிலைப் புரியே - தன்னுடைய வெள்ளிமலையாகும் திருமயிலைப் பதி. எ - று.

அணங்கு - அழகு, வருத்தம், தெய்வப்பெண். ஐயம் - பிச்சை. அணங்கும்; உம்மை: இழிவு சிறப்பு. பணிமேல் அண் அம் கு எனப் பிரிக்க. தன்னென்பது ஈறு கெட்டு நின்றது.

மயிலைப்புரி: எழுவாய்; ஆகும்: பயனிலை. (உஎ)

28. புரிசையஞ் சக்கர வாளமொப் பாகும் புகழ்மயிலைப்
புரிசையஞ் சக்கரம் விற்றே ரெனக்கொள் புராரிக்கிடம்
புரிசையஞ் சக்கர மைந்தான் சரண்மனம் பூசிவலம்
புரிசையஞ் சக்கரம் பெற்றோ னுலகைப் புரப்பதற்கே.

எ - து. புரிசை அம் சக்கரவாளம் ஒப்பாகும் புகழ்மயிலைப் புரி - திருமதில் அழகிய சக்கரவாள கிரியைப்போல (உயர்ந்த) கீர்த்தியையுடைய திருமயிலைப்பதி, சையம் சக்கரம் வில் தேர் எனக் கொள் புராரிக்கு இடம் - மேருவையும் பூமியையும் வில்லாகவும் தேராகவும் கொண்ட சிவனுக்கு இடமாம். புரி - (அத்திருமயிலைப் பதியை) விரும்புவாயாக. சை - (அதனை விரும்பாவிடின் மெய்யடியார் இகழும்) இகழ்ச்சிக்கு, அஞ்சு - அஞ்சுவாயாக. அக்கரம் ஐந்தான் சரண் மனம் பூசி - பஞ்சாட்சரத்தையுடைய அந்தச் சிவன் திருவடியை நெஞ்சமே! பூசனைசெய். வலம்புரி - பிரதட்சிணம் பண்ணு, சயம் - விசயத்தையுடைய, சக்கரம் பெற்றோன் உலகைப் புரப்பதற்கே - சக்கராயுதத்தைப் பெற்ற திருமாலின் வைகுண்டத்தை ஆளுதற்கு. எ - று.

சையம் - மலை; சக்கரம் - பூமி. இது நிரனிறை. சை: இகழ்ச்சிக் குறிப்பு. சையம் * விசையம்; தலைக்குறை இடைப்போலி.

மனமே: எழுவாய். பூசி: பயனிலை. (உஅ)

29. பதத்துக் களவிலை பெற்றாலு முற்பவப் பற்றடர்சோ
பதத்துக் களவிலை நீங்கா துறந்தபின் பற்றுறிற்றா
பதத்துக் களவிலை மேவான் மயிலைப் பரமசிவன்
பதத்துக் களவிலை யிட்டானற் பேரின்பம் பாலிக்குமே.

எ - து. பதத்துக்கு அளவிலை - உயிர்கள்பெறும் (சுவர்க்கம் முதலிய) பதவிக்கெல்லாம் எண் இல்லை, பெற்றாலும் - (அசுவமேத முதலிய யாகங்களையும், துலாபாரம் இரணிய கர்ப்ப முதலிய தானங்களையும், ஐங்கனல் நாப்பண் நிற்றல் முதலிய தவங்களையும் செய்து அப்பதவிகளைப்) பெற்றாலும், உற்பவப்பற்று - பிறவிக்கு ஏதுவாகிய ஆசையும், அடர்சோப தத்துக்கள் - செறிந்த மயக்க மரணங்களும், அ இலை நீங்கா - அந்த அந்தத் தேகங்களை விட்டு நீங்கமாட்டா, துறந்தபின் - (துறவியர்க் கல்லது துன்பம் நீங்காதென்று எண்ணிப்) பற்றை விட்டாராயின் அதன்பின்பு, பற்றுறின் - விட்டபற்று (முற்பழகிய பயிற்சி வயத்தால் அவரைப்) பொருந்துமாயின், தாபதத்து களவில் ஐ மேவான் - தவவேடத்தோடு கூடிய கூடாவொழுக்கத்தாலே பரமசிவன் அவர்களைப் பொருந்தான்; (ஆதலால் நெஞ்சே! துன்

* விசையம் - விசயம் இடைப்போலி.

பத்திற்கு ஏதுவாகிய இச்செயல்களைச் செய்யாமல்), மயிலைப் பரமசிவன் பதத்து - திருமயிலைப் பதியில்வாழும் பரமசிவன் பாதத்தில், கள்ள-தேன் பொருந்திய பூக்களையும், இலை - பத்திரங்களையும், இட்டால் - அருச்சனை செய்தாயாயின், நற்பேரின்பம் பாலிக்கும் - நல்லபேரின்ப வாழ்வைக் கொடுப்பான். எ - று.

பெற்றாலும்; உம்மை: சிறப்பு. இல் - உடம்புகள். கள்ள: விகாரம்; கள்ளுடையன வென்பதாம்.

அவன்: தோன்றா வெழுவாய்; பாலிக்கும்: பயனிலை. (உகூ)

30. பாலிக்கு நேருத் தரநல் லவர்பணி பாதனுக்குப்
பாலிக்கு நேருத் தரமா மயிலைப் பதிவளர்க
பாலிக்கு நேருத் தரங்கண் ணிழந்திடு பண்ணவரைப்
பாலிக்கு நேருத் தரமறி யார்சொல்வர் பான்மைநன்றே.

எ - து. பாலிக்கும் நேர் - கொடுக்கும் நேர்மையை யுடைய, உத்தரம் நல்லவர் பணி பாதனுக்கு - மேலான நல்லோர்கள் வணங்கும் திருப்பாதத்தை உடையவனுக்கு, கு பாலி - பூமியிலுள்ள பாலியாற்றிற்கு, நேர் உத்தரம் மாமயிலைப் பதிவளர் கபாலிக்கு - செவ்விதாகிய வடதிசைக்கண் உண்டாம் திருமயிலைப் பதியில் வாழும் கபாலீசுரனுக்கு, நேர் - ஒப்பாக, உ தரம் கண் இழந்திடு பண்ணவரை - அந்தத் தலையையும் கண்ணையும் இழந்த பிரமாவையும் திருமாலையும், பால் இக்கு நேர் உத்தரம் அறியார் சொல்வர் - பாலையும் கரும்பையும் போன்ற நுட்பத்தை உடைய பிரதி உத்தரம் அறியாத மனிதர் சொல்லுவார்கள். பான்மை நன்றே - அவர் ஊழ் இருந்த முறைமை நன்று. எ - று.

அன்னுவயம்:— பாலிக்கு; குப்பாலி. உத்தரம்; உ: சுட்டு; தரம் - தலை. நன்றென்பது இகழ்ச்சிக் குறிப்பு.

பான்மை: எழுவாய். நன்று: பயனிலை. (௩௦)

31. பானலம் போருக வென்றோ ருததி பரந்துவியப்
பானலம் போருகத் துஞ்சிதை யாத பதியெனுமென்
பானலம் போருகஞ் சேரு மயிலைப் பரன்களம்போற்
பானலம் போருக பாகவிண் மூடும் படிசெலவே.

எ - து. பானல் அம்போர் உக வென்றோர் - நீலோற்பல பாணத்தை யுடைய மன்மதனுர் உடலம் கெடும்படி வென்றவர், உததி பரந்து வியப்பான் அலம்பு - (சத்த) சாகரமும் ஒன்றாய்ப் பெருகி அதிசயத்துடனே ஆரவாரிக்கும், ஓர் உகத்தும் - ஒப்பற்ற பிரளய காலத்தும், சிதையாத பதி

எனும் - அழிவில்லாத நகரமென்று சொல்லப்படுகின்ற, மென்பானல் அம்போருகம் சேரும் மயிலை - மெல்லிய வயலிடத்துத் தாமரைகள் பொருந்தும் திருமயிலைப் பதியில் (வாழும்), பரன் களம் போல் - சிவனது கந்தரம் போல், பால் நல் அம்பு - பகுதிப் பட்ட நல்ல மேகங்க ளானவை, விண் மூடும்படி செலவே பாக ஒருக - ஆகாயத்தினை மறைக்கும்படியாகச் செல்லுதலை (தேரை நடத்தும்) பாகனே! அறிவாயாக. எ - று.

வியப்பான்; ஆன் ஒடு. அலம்பு - ஒலிக்கின்ற. பானல் - வயல். பால: பகுதி. அன்னுவயம்: ஒருக பாக விண்மூடும்படி செலவே: விண்மூடும்படி செலவே பாக ஒருக; விரைந்து தேரைச் செலுத்தென்பது குறிப்பெச்சம். * செலவே என்றது 'கதவழகிது' என்றாற் போல நின்றது.

துறை: பாகனொடு கூறல்.

நீ: தோன்றா எழுவாய்; ஒருக: பயனிலை. (௩௧)

32\. படியேற்ற மாற்கர விந்த முரித்தவர் பார்த்திபன்பாற்
படியேற்ற மாற்கர விந்தற்கெட் டாதபொற் பாதருட்
படியேற்ற மாற்க ரவிர்தார் மயிலைப் பரமர்விதிப்
படியேற்ற மாற்கர வில்லாம னில்லருள் பண்ணுவரே.

எ - து. படி எற்ற மால் கரம் விந்தம் உரித்தவர் - பகையாய் வந்து எதிர்த்த பெரிய துதிக்கையை உடைய விந்தமலை போலும் யானையை உரித்துப் போர்த்துக்கொண்டவர்; பார்த்திபன் பால் படி ஏற்ற மாற்கு - மாவலிச் சக்கரவர்த்தி யிடத்திற்போய்ப் பூமியைத் தானம் வாங்கின திரு மாலுக்கும், அரவிந்தற்கு - தாமரைப் பூவில் இருக்கும் பிரமாவிற்கும், எட்டாத பொன் பாதர் - (தரிசிக்கக்) கிட்டாத அழகிய பாதர், அருள்படி ஏற்று அ மாற்கர் - (முத்தி வீட்டிற் செல்லுதற்குப்பக்குவ உயிர்களைத்) திருவருளாகிய படியின்கண்ணே ஏறச் செய்யும் அழகிய சன்மார்க்கத்தைக் கொடுப்பவர்; அவிர் தார் மயிலைப் பரமர் - பிரகாசம் தங்கிய கொன்றை மாலையை அணியும் திருமயிலைப்பதியில் வாழும் சிவனார்; விதிப்படி ஏற்றம் - வேதாகமங்களில் திருவுளம் பற்றின இயல்பாகிய உயர்ந்த ஒழுக்கத்தின் கண்ணே, மால் கரவு இல்லாமல் நில் - மயக்கத்தோடு கூடிய கள்ளாசாரம் இல்லாமல் நிற்பாயாக; அருள் பண்ணுவரே - (நெஞ்சமே நம்மிடத்தில்) கருணை செய்வார். எ - று.

படி - பகை. அரவிந்தம்: பொருளாகு பெயர். ஏற்றம்: ஆகுபெயர். கரவு: ஆகுபெயர்.

அவர்: தோன்றா எழுவாய்; பண்ணுவர்: பயனிலை (௩௨)

---

* செலவு எ.

33. பண்ணளி பாடலங் காரகிற் புன்னை பலாக்கமுகு
பண்ணளி பாடலங் கார மயிலைப் பரமர்பத்தி
பண்ணளி பாடலங் காரம் யமகமும் பாடினுண்டாம்
பண்ணளி பாடலங் காரன்ன தந்திசம் பத்தியல்பே.

எ - து. பண் - வயல்களிடத்தும், அங்கு நளி பாடலம் கார் அகில் புன்னை பலா கமுகு-அங்குக் குளிர்ந்த பாதிரியும் கரிய அகிலும் புன்னையும் பலாவும் கமுகங்களும் (ஆகிய சோலையிடத்தும்) பண் அளி பாடல் ஆர்அம் மயிலைப் பரமர் - பணகளை வண்டுகள் பாடுதல் பொருந்தா நின்ற அழகையுடைய திருமயிலைப் பதியில் வாழும் சிவனுருக்கு, பத்தி பண் - (மனங் கலங்காது நின்று செய்யும்) பணிவிடைகளைச் செய்வாயாக, அளி - அன்புடனே, பாடு அலங்காரம் - பெருமையை உடைய (தன்மை, உவமை, உருவகம் முதலாய்ச் சங்கிரணம் பாவிகம் ஈறாகிய) பொருளணி முப்பத்தைந்தினையும், யமகமும் அடிமுழுதும் மடக்கும் சிறப்புடைய மடக்கும் மற்ற ஆதி மடக்கு முதலிய மடக்கு விகற்பங்களையும், பாடின் - (அச்சிவனார்மீது) பாடுவையாயின் (நினக்கு), உண்டாம் (இகத்திலே தானே) உண்டாம் (அவையாவை யெனின்), பண் நளி பாடலம் - (கலினம், குசை, கிண்கிணித் தாமம் முதலிய) கலனை செறிந்த உத்தம அசுவங்களும், கார் அன்ன தந்தி - மேகம் போன்ற (கருமையும், மதசலமும் அதிரொலியுமுடைய) யானைகளும், சம்பத்து இயல்பே - குபேர ஐசுவரியமும் நற்குணங்களும். எ - று.

பண் - பணை; ஐ கெட்டு நின்றது. அங்கென்பது முன்னர்ப் பாடலமென்பதனோடு கூட்டி உரைக்கப்பட்டது. உம்மையை முன்னுங் கூட்டுக. முதலடியினும் மூன்றாமடியினும் இகர ஈறுகள் செய்யுட்டொடை நோக்கி வல்லொற்றுப் பெறாது நின்றன.

அவை: எழுவாய்; உண்டாம்: பயனிலை. (௩௩)

34. இயற்கும்ப ரச்சங் கலிதீர் மயிலை யிடத்துறுமா
ரியற்கும்ப ரச்சனென் றேத்துங் கபாலிக் கெழின்மயின்மேல்
இயற்கும்ப ரச்சலி லக்கா ரிகைக்கு மிறைவற்குத்தென்
இயற்கும்ப ரச்சந்தப் பாமாலை யாமன்ப ரின்றமிழே.

எ - து. இயல் கும்பர் அச்சம் - கும்பராசி சுமந்த புருடராகிய இயல்பினையுடைய சனிச்சரரால் வரும் பயங்களும், கலி-கலியுக தர்மத்தால் வரும் பயமும், தீர் - இல்லாத, மயிலை இடத்து உறும் - திருமயிலைப் பதியில் வாழும், ஆரியற்கு - யாவராலும் பூசிக்கப்படும் சிவனுக்கு, உம்பர் அச்சன் என்று ஏத்தும் கபாலிக்கு - தேவர்கள் ஞானோபதேச பிதா என்று துதிக்

கும் கபாலீசுவரனுக்கு, எழில் மயில் மெல்லியற்கும் - அழகிய மயில் வடிவாய் வந்து பூசித்த மெல்லிய இயலையுடைய உமாதேவிக்கும், பரம் சலிலம் காரிகைக்கும் - (நதிகளுக் கெல்லாம்) மேலாகிய சலவடிவையுடைய கங்காதேவிக்கும், இறைவற்கு - கணவனாகிய கர்த்தனுக்கு, தென் இயல் கும்பர் அ சந்தம் பாமாலை ஆம் - தென்மொழியாகிய தமிழிலக்கணத்தைக் கூறிய அகத்தியர் (தோத்திரம் செய்த) அந்த அழகிய பிரபந்தங்களைப் போலத் (திருச்செவி சார்த்திக் கொள்ளுதற்கு) ஆம்; அன்பர் இன் தமிழே - தன் அடியார் அன்பாற் செய்த இனிய தமிழ்கள். எ - று.

* பரச்சலில் - விரிதலில்லாத எனினுமாம்.

தமிழ்: எழுவாய்; ஆம்: பயனிலை. (௩௪)

35. இன்றமிழ் தாலத்து ணீடு மயிலை யிறைவர்பணி
இன்றமிழ் தாலத் துணவுடை யார்குக னெண்ணுமொழுத்
தின்றமிழ் தாலத் துரைக்கப்பெற் றோர்சிர மெய்தவங்கை
யின்றமிழ் தாலத்துக் கொப்பா வயன்செய்த தெத்தவமே.

எ - து. இன்தமிழ் தாலத்துள் நீடும் மயிலை இறைவர் - (அங்கம் பூம்பாவையாகச் சம்பந்த மூர்த்தி யோதின) இனிய திருப்பதிகத் தமிழ் முதலானபிரபந்தங்கள் உலகத்தில் நிலைபெறுதற்கு ஏதுவாகிய திருமயிலைப் பதியில் வாழுங் கர்த்தர், பணி இன்று - துயரமின்றி, அமிழ்து ஆலத்து உணவுடையார் - அமுதம் போல விஷத்தை உணவாக உடையவர், குகன் எண் ஒரெழுத்து இன்றமிழ் தாலத்து உரைக்கப் பெற்றோர் - வேலாயுதக் கடவுள் யாவரும் எண்ணுநின்ற ஒரெழுத்தினாலே தாரகப் பிரமத்தி னீர்மையை நாவாற் சொல்ல அதனை அங்கீகரித்துக் கொண்டவரது, அங்கையின் சிரம் தமிழ் தாலத்துக்கு ஒப்பா எய்த அயன் செய்தது எத் தவமே - திருக்கரத்திற் பிரமாவின் சிரம் இனிய உண்கலத்துக்கு ஒப்பாகப் பொருந்த அப்பிரமா செய்தது எத்தன்மைத்தாகிய தவமோ? எ - று.

இன்றி என்னும் வினை எச்சம் இன்று என நின்றது. அன்னுவயம்: சிரமெய்த வங்கையின் றமிழ் தாலத்துக் கொப்பாவயன்: அங்கையின் சிரந் தமிழ் தாலத்துக் கொப்பா வெய்த அயன். கையின் என்புழி னகரமும் அதனை அடுத்த தமிழ் என்புழி ழகரமும் செய்யுட் டொடை நோக்கி இயல் பாயின.

செய்தது: எழுவாய்; எத்தவம்: பயனிலை. (௩௫)

36. தவராக விக்குளத் தங்கண் மயிலைத் தலைவர்வெற்றித்
தவராக விக்குளத் தந்தாங்கு வேள்புரந் தன்னைமுனிச்

* பரச்சல் - பரத்தல்.

தவராக விக்குளத் தன்பரம் பர்செலுஞ் சங்கார்மெய்த்
தவராக விக்குளத் தந்நேரங் காக்குநற் றற்பரரே.

எ - து. தவ ராக வி குளத்து அம் கண் மயிலை தலைவர் - மிகுந்த சிவப்பையுடைய (முருக்கின்) அலர் போலும் நெற்றியில் அழகிய கண்ணைப் பொருந்திய திருமயிலைப்பதியில் வாழும் கர்த்தர், வெற்றி தவர் ஆக இக்கு-விசய வில்லாகும்படிக்குக் கரும்பை, உள் அத்தம் தாங்கு வேள் புரந் தன்னை முனிந்தவர் - உள்ளங்கையிற் பிடித்த மன்மதனுடைய உடலைப் பொடிபடச் செய்த சிவனார், ஆகு அவிக்கு உளத்து அன்பர் அம்பர் செலும் சங்கரர்(யாகத்தில்)உண்டாகாநின்றஅவிப்பாகம் கோடற்கு உள்ளன்புடைய சோமாசியாரது அம்பரென்னும் நகரத்திற்கு எழுந்தருளும் பரமர், மெய்த் தவர் - (தம்மை நோக்கிச் செய்யும்) மெய்யாகிய தவத்தை யுடைய அடியாரது, ஆ விக்குள் அத்து அந்நேரம் காக்கும் நல் தற்பரரே - நெஞ்சுள் நின்றும் விக்கல் பொருந்தும் அக்காலத்துப் (பிரசன்னமாகி யமவாதை யில்லாமல்) காக்கும் நல்ல ஞான சொரூபர் எ - று.

தவ - மிகுதி. ராகம் - சிவப்பு. வி: வீ யென்பது குறுகிநின்றது. ஆகு அவிக்கு எனப் பிரிக்க. ஆ: இரக்கக் குறிப்பு.

அவர்: எழுவாய். தற்பரர்: பயனிலை. (௩௬)

37. பரசமை யத்தர் மயிலைப் பதியிற் பரமர்முன்னாட்
பரசமை யத்தர் திருஞான சம்பந்தர் பாடல்கொண்டோர்
பரசமை யத்த ரறியா ரிதழிப் படலைநல்கின்
பரசமை யத்தா வேல்விழி யாய்மைப் பலிதருமே.

எ - து. பரசு அமை அத்தர் - மழுப்பொருந்திய திருக்கரத்தர், மயிலைப்பதியிற் பரமர்-திருமயிலைப்பதியில் வாழுஞ்சிவனார், முன்னாள் பரசு அமை அத்தர் - (மயிலாகவந்து) முன்னொருகாலத்தில் (அருச்சித்துத்) தோத்திரம் செய்யும் உலகமாதாவாகிய பார்ப்பதி பொருந்திய வாமபாகத்தர், திருஞானசம்பந்தர் பாடல் கொண்டோர் - திருஞானசம்பந்த மூர்த்திகளோதிய பாமாலையைத் தரித்துக் கொண்டவர், பரசமையத்தர் அறியார் - (உலகாயதன் முதற் பாஞ்சராத்திரி யீறாகிய) பிறசமயத்தாரால் சொரூப சுபாவங்கள் அறியப்படாதவர், இதழி படலை நல்கு இன்பரசம் - (நமக்கு,) கொன்றை மாலையைக் கொடுத்தலால் வரும் இன்ப அனுபவத்தை, மை அத்து அரம் வேல்விழியாய் - அஞ்சன மெழுதிய செவ்விய அரத்தால் அராவிய வேல் போலும் கண்ணையுடையாய், மை பலி தருமே-ஆட்டினை முருகர்க்கு நேர்ந்து செய்யும் பலி கொடுக்குமோ? (கொடாது.) எ - று.

ஏகாரம்: எதிர்மறை.

கிளவி - வெறி விலக்கல்.

பலி: எழுவாய். தராது: பயனிலை. (கூஎ)

38. பலிப்பா லனங்க மதலைக் கறியுண் பசுபதிவெண்
பலிப்பால னங்கம்பெண் ணான மயிலைப் பரமன்வெற்பிற்
பலிப்பா லனங்கங்கொண் டோன்பகை தீர்தல் பகரப்பெற்றோம்
பலிப்பா லனங்க மொழித்தமு துண்ணும் படியுணரே.

எ - து. பலிப்பால் அனம் - பிட்சையின் கூறுபாட்டால் வந்த போனகத்தையும், மதலை கம் கறி - சீராளாது தலைக்கறியினையும் உடற் கறியினையும், உண் பசுபதி - புசித்த சிவன், வெள்பலி பாலன் - வெள்ளிய விபூதியைத் தரித்த திருநெற்றியினன், அங்கம் பெண்ணான மயிலை பரமன் வெற்பில் - அங்கம் பூம்பாவையாதற்கு இடமாகிய திருமயிலைப் பதியில் வாழும் சங்கரனது மலையினுள்ள, பல்லி பால் - கெவுளியினிடத்து, அநங் கம் கொண்டோன் பகை தீர்தல் பகரப் பெற்றோம் - அரூபியாகிய மன் மதன் ஒழியாது போர் செய்யும் பகை நீங்குதல் சொல்லப் பெற்றோம், பலிப்பால் - இப்பயனால், அனம் கம் ஒழித்து அமுது உண்ணும்படி உணரே - அன்னமானது நீரைப் பிரித்துப் பாலினை உண்ணும் முறைமை போலத் (தலைவர் விரைந்து வருவாரென்பதனை) அறிந்துகொள். எ - று.

கறியுமென்னும் எச்சவும்மை விகாரத்தால் தொக்கது.

பலி - விபூதி, பல்லி.

கிளவி - பாங்கி தலைவன் வரவைக் கெவுளியா லறிந்து தலைவிக்கு உரைத்தல்.

நீ: தோன்றா எழுவாய். அறி: பயனிலை. (கூஅ)

39. உணவால மாவடு வாரங்க தாயர்முன் னொண்கமர்தட
டுணவால மாவடு வாரண்ண லேபொன் னுளமயக்க
வுணவால மாவடு வாரய னேத்தர வுய்யச்செய்ய
ருணவால மாவடு வார்சேர் மயிலையி லுத்தமனே.

எ - து. உணவு-ஊணாகிய, ஆலம் - நஞ்சினையும், மா - பெரிய, வடு - மூலைத்தழும்பினையும், ஆர் - பொருந்திய, அங்க - கந்தாத்தையும் மார்பினை யும் உடையவனே, தாயர் முன் - அரிவாட்டாயனார் முன்பே, ஒள் கமர் தட் டுண் அ வால மாவடு - ஒள்ளிய கமரின்கண்ணே வீழ்ந்த அந்த இளமைச் செவ்வித்தாய மாம்பிஞ்சை, ஆர் அண்ணலே - (விடேல் விடேலென்னும் ஓசை தோன்றப்) புசித்தவனே, பொன் உளம் மயக்கு அவுண வாலமா -

திருமகளாகிய சீதையின் மனத்தை மயக்கிய மாரீசனாகிய வாலையுடைய மானே, அடுவார் அயன் ஏத்து அர - சங்கரித்த மாயனாரும் பிரமாவும் தோத்திரம் செய்யும் பகவனே, உய்யச் செய் - (சனன சாகரத்தின் நீங்கி) அருட்கரையேறும் வண்ணம் செய்வாயாக, அருணம் ஆலம் மா வடு வார் சேர் மயிலையில் உத்தமனே - செம்மை நிறமிருந்த பூக்களும் வண்டுகளும் புனலும் பொருந்திய திருமயிலைப் பதியில் வாழும் புண்ணிய சொரூபனே. எ - று.

மயக்கு அவுண - மயக்கத்தைச் செய்த அவுணனாகிய. வால மா - வாலையுடைய மான். ஆலம் - மலர்ந்த பூ. மாவாகிய வடு; வடு - வண்டு.

நீ: தோன்றா எழுவாய். செய்: பயனிலை. (௩௯)

40. தமனிய விற்கனைஞ் சுக்குண மால்கணை தாங்குவினோ
தமனிய விற்கனை முப்புர நீறெழத் தண்ணகைசெய்
தமனிய விற்கனை மும்மத மாவதட் சாத்தியவுத்
தமனிய விற்கனை போன்றாண் மயிலையிற் சங்கரனே.

எ - து. தமனியம் கல் வில் - பொன்மலையாகிய வில்லினையும், நைஞ்சு குணம் - பாம்பாகிய நாணினையும், மால் கணை - திருமாலாகிய அம்பினையும், தாங்கு விநோதம் மன்னி - தரிக்கும் விளையாட்டைப் பொருந்தி, அவிற்கு அல் நை முப்புரம் - அ(ந்நகையினது) ஒளிக்கு இருள் நீங்கும் (மூ அசுரருடைய) மூன்று கோட்டையினையும், நீறு எழ தண்நகை செய்த மன் - பொடிபடக் குறுநகை செய்த கர்த்தனே, இயவில் - தாருகாவனத்தில் உண்டான, கனை மும்மத மா அதள் சாத்திய உத்தமன் - இடிக் குரலினையும் மூன்று மதத்தினையுமுடைய யானைத் தோலைப் போர்த்துக் கொண்டவுண்மையானவனே, இயவிற்கு - (அடியேன் செல்லும்) நெறிக்கண், அனை போன்று - நற்றாய் போல வந்து உதவி, ஆள் - (நடுக்கம் தீர்த்து) ஆட்கொள்வாயாக, மயிலையிற் சங்கரனே - திருமயிலைப்பதியில் வாழும் (யாவர்க்கும்) இன்பத்தைச் செய்பவனே. எ - று.

கல்வில் என்பது மாறிநின்றது. நைஞ்சு - நஞ்சு: ஆகுபெயர். குணம்- நாண். வில் - ஒளி. அல் நை நகையெனக் கூட்டுக. இயவில் - வனத்தில்.

நீ: தோன்றா எழுவாய். ஆள்: பயனிலை. (௪0)

41. கரந்தையைக் கங்கையர் தாளா லெடுத்தணி காதிற்குழை
கரந்தையைக் கங்கையர் முன்பான் மயிலையர் கார்நிறச்சக்
கரந்தையைக் கங்கை யரவிந்தர் போற்றக் கறுவுழுத்துங்
கரந்தையைக் கங்கைய ராய்வந்து தீர்ப்பார்மெய்க் காரணரே.

எ - து. கரந்தை ஐ கங்கையர் - கரந்தைப் பூவினையும் வியப்புள்ள கங்கையினையு முடையவர், காதில் குழை கரந்து தாளால் எடுத்து அணி - திருச் செவியிற் குண்டலத்தை (ஒருவரும்) காணாவண்ணம் (ஒரு வியாசத்தால்) வீழ்த்தித் திருப்பாதத்தால் எடுத்துத் தரித்துக்கொண்டு, ஐயைக்கு - காளியின் பொருட்டு, அங்கு - திருவாலங்காட்டில், ஐயர் முன்பு ஆல் மயிலையர் - தேவர்கண்முன்னே ஊர்த்துவதாண்டவஞ்செய்யும் திருமயிலைப் பதியில் வாழுஞ்சிவனார், கார்நிறச்சக்கரம் - கரிய நிறம் பொருந்திய கடலில் (அவதரித்த), தையை - மகரமீனை, கங்கை அரவிந்தர் போற்ற - கரையருகே (நின்று) பிரமா தோத்திரஞ் செய்ய, கறுவும் உத்துங்கர் - நிக்கிரகஞ் செய்த பெரியோர், அந்தையை - நமது செனனமரண துக்கத்தை, கம்கையராய் வந்து தீர்ப்பர் மெய்க்காரணரே - கபாலீசுவரராகி வந்து நீக்குவார் மெய்யாகிய (மோட்ச) காரணராதலான். எ - று.

அன்னுவயம்:— தாளா லெடுத்தணி காதிற் குழை கரந்து - காதிற் குழை கரந்து தாளால் எடுத்துஅணி. அணிந்தென்பது குறைந்து நின்றது. சக்கரம் - கடல். * தை: குறிப்பு மொழி. கங்கை: உருபு மயக்கம். அந்தை - அரந்தை; இடைக்குறை. அவர்: எழுவாய்; தீர்ப்பர்: பயனிலை. (சுக)

42. காரம் பரத்தம் பொருபா லொலிக்குங் கரையிற்குழற்
காரம் பரத்தம் பொருங்கண் ணுமையத்தர் காமயிலைக்
காரம் பரத்தம் பொருவாநந் தேர்ப்பின்மின் காண்பதுப
காரம் பரத்தம் பொருடவ றாமற் கருதன்பனே.

எ - து. கார் அம்பரத்து அம்பு ஒருபால் ஒலிக்கும் கரையில் - கரிய கடலினீர் கீழ்பாலில் ஆரவாரிக்கும் கரைக்கண் (உளதாகிய), குழற்கார் அம்பு அரத்தம் பொரும் கண் உமை அத்தர் - அளகமாகிய கருமேகத்தினையும் அம்பும் செங்கழுநீரும் ஒக்கும் கண்ணினையும் உடைய உமாதேவியை வாமபாகத்துடையவரது, கா மயிலை - சோலை சூழ்ந்த திருமயிலைப் பதியின்கண், கார் அம்பரத்து அம்பு - கார் காலத்து உண்டாகிய ஆகாயத்திற் செல்லும் மேகத்தை, ஒருவா நம் தேர்ப்பின் - (அவள் நெஞ்சின்) நீங்காத நமது தேரைக் கண்ட பின்பு, மின்காண்பது உபகாரம் - மின்னையொக்கும் தலைவி காணச் செய்வது (நீ நமக்குச் செய்யும்) உபகாரம்; (ஆதலால்), பரத்து அம் பொருள் தவறாமல் - மேன்மையுடைய அழகிய நம் வாய்மை பொய்யாகாமல், கருது அன்பனே - (தேரை விரைந்து செலுத்துதற்கு) நினைப்பாயாக அன்புடைய பாகனே. எ - று.

---

* மகர மென்பது தைமாதத்துக்குப் பெயர்; ஆதலின் தையென்றது குறிப்பாக மகரமீனென்பதைப் புலப்படுத்தியது.

அம்பரம் அத்துச் சாரியை பெற்றது. அரத்தம் - செங்கழுநீர். அம்பு- மேகம்; ஆகுபெயர். ஒருவா - நீங்காத. கிளவி: பாகனொடு கூறல். நீ: தோன்றா எழுவாய்; கருது: பயனிலை. (சஉ)

43. கருமா மருப்பக்கங் கண்டோர் மயிலைக் கடவுளர்மாற்
கருமா மருப்பக்கங் கண்டிகை மத்தங் கடுக்கைவில்வம்
கருமா மருப்பக்கங் கண்டலை வேய்வர் கடிவர்பொய்ப
கருமா மருப்பக்கங் கண்டலி னீடிய கான்மலரே.

எ - து. கரு மாமர் - (நெஞ்சிற்) கருமையுடைய (தக்கனாகிய) மாமனை, உப்பக்கம் கண்டோர் - வென்னிடச் செய்தவர், மயிலைக்கடவுளர்- திருமயிலைப் பதியில் வாழும் தேவர், மால் கருமா மருப்பு - திருமாலாகிய பன்றிக்கொம்பினையும், அக்கு - சங்கு மணியினையும், அம் - கங்கையினையும், கண்டிகை - தோளணியையும், மத்தம் - மத்த மலரையும், கடுக்கை - கொன்றை மாலையினையும், வில்வம் - கூவிளத்தினையும், கரு மா - பெருமை யுடைய மாந்தளிரினையும், மரு - மருவையும், * பக்கம் - கொக்கிறகினையும், கண் - (திருமாலின்) கண்ணினையும், தலை - (பிரமாவின்) தலையினையும், வேய்வர் - தரிப்பவர், கடிவர் - (தரித்துக் கொள்ளாமல்) நீக்குவர், பொய் பகரும் அருப்பம் ஆம் கம் கண்டல் - (பிரமன் திருமுடியைக் கண்டனனென்று) பொய் கூறிய சிறுமை பொருந்திய வெண்டாழையினது, நீடிய கான் மலரே - நீண்ட மணத்த பூவை. எ - று.

† மாமர்: இகழ்ச்சிக் குறிப்பு. கருமா - பன்றி. கண்டிகை - ஆடக மாலையுமாம். கரு - பெருமை. அன்னுவயம்: பொய்பகருமா மருப்பக்கங் கண்டல் பொய்பகரும் அருப்பம் ஆம் கம் கண்டல்; அருப்பம் - அல்பம். கம் - வெண்மை. கான்மலரைக் கடிவர். (சங)

44. கானத்தப் பேடி வரப்பேசு வித்த கவிஞன்முத்தம்
கானத்தப் பேடி வரச்செய்சம் பந்தன் கவிதைகொண்டோன்
கானத்தப் பேடி வரம்பெற முன்சென்ற கானவன்பூங்
கானத்தப் பேடி வரன்ன மயிலைக்கங் காதரனே.

எ - து. கானம் தப்பு ஏடி வர பேசுவித்த கவிஞன் - பாடல் சொல்லுதலின்மையாகிய பிழைப்பையுடைய ஏடி தம் முன்பு வரப் பேசச் செய்த மாணிக்கவாசகரும், முத்தம் கால் நத்து அப்பு - முத்தங்களை ஈனும் சங்கங்கள் பொருந்திய (வையையாற்று) நீரின்கண்ணே, ஏடு இவர செய்

* பக்கம்; பக்ஷம் - இறகு. † "காமரை வென்ற கண்ணோன்" (திருச்சிற். 164) என்புழிப் போல.

சம்பந்தன்-(திருப்பாசுரத்தை எழுதிய) (திருவேடு எதிரேறச்செய்தசம்பந்த மூர்த்திகளுமாகிய (இருவர் பாடிய), கவிதைகொண்டோன்-பாமாலைகளைத் தரித்துக்கொண்டோனும், கானத்து அ பேடி - காட்டின்கண்ணே (தவம் செய்த) அந்த அருச்சுனன், வரம்பெற முன்சென்ற கானவன் - வரம் பெறுதற்கு அவன் முன்பே எழுந்தருளின வேட்டுவ வேடத்தையுடைய வனும், பூங்கா நத்த-பூஞ்சோலை எக்காலத்து முண்டாக (அதன்கண்), பேடு இவர் அன்னம் மயிலை கங்காதரனே - பெண்ணன்னங்களை விரும்பிய ஆணன்னங்கள் பொருந்திய திருமயிலைப்பதியில் வாழும் கங்கையைத் தரித்தோன். எ - று.

கானம் - இசைப்பாட்டு. தப்பு - தவறு. ஏடி - தோழி; என்பதால் ஊமைப் பெண்ணாயிற்று. கால் - கான்ற. நத்து - சங்கு. அப்பு வையை யின்நீர். பேடி - அருச்சுனன்.

நந்தவென்பது நத்தவென விகாரமாயிற்று. அவன்: தோன்றா எழு வாய். கங்காதரன்: பயனிலை. (சச)

45. காதரம் பையு ளவர்போன் மயங்கெனைக் கண்டுமுரு
காதரம் பையுளங் கல்லோசொன் மாதர் கவானையென்றும்
காதரம் பையுளந் தேனார் மயிலைக்கங் காளர்குழைக்
காதரம் பையுள பொற்பணி வேணியர் கார்வரைக்கே.

எ - து. காதரம் பையுளவர் போல் மயங்கு எனை கண்டும் - தீவினைத் தொடர்ச்சியால் நோய்கொண்டார் போல் மயங்குகின்ற என்னைப் பார்த் தும், அரம்பை உளம் உருகாது கல்லோ சொல் - தேவரம்பையைப்போல அழகுடையாய்! உன்மனம் உருகவில்லை; உருகாத கல்லோ? சொல்வாயாக. மாதர் கவானை என்றும் கா து அரம்பையுள் அம் தேன் ஆர் - மகளிர் குறங் கினை எக்காலமும் வெகுளும் வாழைச் சோலைகளில் அழகிய தேனிறால் பொருந்திய, மயிலை கங்காளர் - திருமயிலைப் பதியில் வாழும் (அரிபிரம ரது) என்புக்கோவையை அணிந்தவர், குழைக்காதர் - (சங்கக்) குழை பொருந்திய திருச்செவியர், அம் பை உள பொன்பணி வேணியர் - கங்கை யினையும் படம் பொருந்திய அழகிய பாம்பையும் தரித்த சடாமகுடத்தரது, கார்வரைக்கே - மேகம் தவழும் மலையிடத்து. எ - று.

கிளவி - பாங்கியைத் தலைவன் பழித்தல். பையுள் - நோய். அன்னு வயம்: உருகாதரம்பையுளங் கல்லோ சொல் - அரம்பை உளம் உருகாது. கல்லோ சொல். நீ: தோன்றா எழுவாய். சொல்: பயனிலை. (சரு)

46. வரையா தரிக்கு நிகர்வீர பாணித்து வைகவிற்றை
வரையா தரிக்கு மலர்சகி யாண்மர பன்றுமத
வரையா தரிக்கு மதனரைக் காய்ந்திட்ட வள்ளல்கற்ற
வரையா தரிக்குங் கபாலி மயிலை மலையிடத்தே.

எ - து. அரிக்கு நிகர் வீர - சிங்க வேற்றுக்கு ஒப்பாகிய வீரத்தை யுடைய தலைவனே, வரையாது பாணித்து வைக - மணம் செய்துகொள்ளாது காலம் நீட்டித்திருத்தற்கு, இற்றை வரை யாது - இன்றளவும் (காரணம்) யாது? அரிக்கும் அலர் சகியாள் - (நின் தலைவியோ பிறரால்) வருத்தும் பழிமொழியைப் பொறுக்கத்தக்காளல்லள், மரபு அன்று - (இனி வரையாதிருத்தல்) முறைமை அன்று, மதவரை - மதமுடைய மலை போன்ற யானையினையும், ஆதர் இக்கு மதனரை - அறிவில்லாராகிய கருப்பு வில்லை யுடைய மாரனுரையும், காய்ந்திட்ட வள்ளல் - சங்கரித்த வரதன், கற்றவரை ஆதரிக்கும் - (தாம் ஓதிய நூல்களைக்) கற்ற அறிவுடையோரை விரும்பும், கபாலிமயிலைமலையிடத்தே-கபாலீசன் எழுந்தருளியிருக்கும் திருமயிலைப்பதியினது மலையிடத்து. எ - று.

அன்னுவயம்: வரை யாதரிக்கு நிகர் வீர பாணித்து வைக: அரிக்கு நிகர்வீர வரையாது பாணித்து வைக; வரைதல் - விவாகம். வரையாதிருத்தல்: தோன்றா எழுவாய். மரபன்று: பயனிலை.

கிளவி - வரைவு கடாதல். (சுகு)

47. மலைத்தலைத் தீர்த்தரை மாத்திரை யர்ச்சிக்கு மார்க்கண்டரை
மலைத்தலைத் தீர்த்தரைப் போமென்ற காலனை வாட்டியசெம்
மலைத்தலைத் தீர்த்தரை யன்பரை யாளும் வடகயிலை
மலைத்தலைத் தீர்த்தரைத் தென்மயி லைக்கண் வணங்குவனே.

எ - து. மலைத்தலை தீர்த்தரை - மயங்குதலை நீக்கியவரை, மாத்திரை அர்ச்சிக்கும் மார்க்கண்டரை - தம்மை நொடிப்பொழுதினுள் அருச்சனை செய்யும் மார்க்கண்ட முனிவரை, மலைத்து அலைத்து ஈர்த்து அரைப்போம் என்ற காலனை - பொருது சுழலப்பண்ணி இழுத்துச் செக்கிலிடுவோமென்று அகங்காரத்தாற் சொன்ன யமனை, வாட்டிய செம்மலை - உதைத்த பெருமை யுடையோரை, தலைத்தீர்த்தரை - சடாமகுடத்தில் கங்கையைத் தரித்தவரை, அன்பரை ஆளும் வடகயிலை மலைத்தலைத்தீர்த்தரை-மெய்யன்புடைய அடியார்களைப் (பேரின்ப வீட்டிலே) செலுத்தும் வடக்கின்கண்ணுள்ள கயிலாயத்திடத்திருக்குந் தேவதேவரை, தென்மயிலைக்கண் வணங்குவனே - அழகு பொருந்திய திருமயிலைக்கண் (மனமொழி மெய்களால்) யான் வணங்குவன். எ - று.

வாட்டல் - மெலிவித்தல். யான்: தோன்றா எழுவாய். வணங்குவன்: பயனிலை. (சஎ)

48. வணத்தா னமனந்தி வண்ணனென் றேத்து மயிலையன்வெள்
வணத்தா னமனந்தி வாகனன் யார்க்கு மனமிரங்கும்
வணத்தா னமனந்தி நீர்விளக் கானரு மாமறைக்கோ
வணத்தா னமனந் திடச்செய் நமனந்தி மாதங்கனே.

இ - ள். வள் நத்தான் - வளனுடைய சங்கபாணி, அம் மன் - கங்கையைத் தரித்த தலைவன், அந்தி வண்ணன் - செக்கர் வானம் போலும் திருமேனியன், என்று ஏத்தும் மயிலையன் - என்று சொல்லித் தோத்திரம் செய்யும் திருமயிலைப்பதியில் வாழ்வோன், வெள்வண்ணத்து ஆன - வெண்ணிறத்தோடு உண்டான, மன் நந்திவாகனன் - நிலைபெற்ற இடபவாகனத்தான், யார்க்கும் மனம் இரங்கும் வண்ணம் தானம் மன் - (தன்னை வழிபடும் அன்பர்) எல்லார்க்கும் திருவுள மிரங்கும் இயல்பினையும் (அவர்களுக்கு வேண்டுவன கொடுக்கும்) கொடையினையும் உடைய சுவாமி, நந்தி நீர் விளக்கான் - நமிநந்தியடிகளார் தண்ணீர் வார்த்து ஏற்றிய தீபத்தை யுடையவன், அரு மாமறைக் கோவணத்தான் - (அறிவினால் அறிதற்கு) அரிய பெரிய வேதமாகிய கவுபீனந் தரித்தவன், நமன் நந்திடச் செய் நமன் - காலனையும் கெடும்படி செய்த காலகாலன், நந்தி - நந்தியென்னும் திருப்பெயரை யுடையோன், மாது அங்கனே - பார்ப்பதியை வாம பாகத்துள்ளான். எ - று.

வள் நத்தான் எனப் பிரிக்க. நத்தான் என்று ஏத்து மயிலையனென்றவாறு. ஆன்-ஒடு. நமிநந்தியை நந்தியென்பதற்கு மேற்கோள்: * "பாட்டிய லளிமுரல் பதுமக் கோயிலில், நாட்டிய நிமலர்முன் னந்தி நீரிடை, மாட்டிய பல்பெருஞ் சுடரை மானுமாற், கோட்டுயர் தடந்தொறுங் குவளை பூத்தவே". இது நாமைகதேச நாமக் கிரகணம். இத்தன்மையன்: தோன்றா எழுவாய். மயிலையன்: பயனிலை. (சஅ)

49. மாதங்க வத்திரத் தாட்குத் திலக மயிலையனே
மாதங்க வத்திரத் தாரறி யாத வரதசெவ்வேள்
மாதங்க வத்திரத் தானத்த வில்லென வைத்தமலை
மாதங்க வத்திரத் தாமோ தரவருண் மாநிலத்தே.

எ - து. மாதம் - பெரிதாகிய, கம் - கடலினை, வத்திரத்தாட்கு - ஆடையாக வுடைய பூமிதேவிக்கு, திலகம் - நெற்றித் திலதம் போலும், மயிலையனே - சிறந்த திருமயிலைப் பதியில் வாழுஞ் சிவனே, மாது அங்க -

* கந்த. திருநாட்டுப். 47.

பார்ப்பதி வாமபாகனே, அந்திரத்தார் அறியாத வரத - திரமில்லாத (பொய்ச்சமயத்தாரால்) அறியப்படாத வள்ளலே, செவ்வேள் - சிவந்த திருமேனியையுடைய முருகக் கடவுளுக்கும், மாதங்க வத்திரத்தான் - யானை முகத்தோனுக்கும், அத்த - பிதாவானவனே, வில்லென வைத்த மலை மாதங்க - தனுவாகத் (திருக்கரத்தில்) தரித்த பெரிய பொன்மலை யுடையாய், அத்திரம் தாமோதர - பாணமாகிய திருமாலை யுடையோய்! அருள் மானிலத்தே - பெரிய பூமியின்கண்ணே எனக்கு அனுக்கிரகம் செய். எ - று.

மாதம்-பெருமை. நீ: தோன்றா எழுவாய். அருள்: பயனிலை. (௪௯)

50. மான வியற்பகை யாரத்தஞ் சுற்றத்தை மாய்த்தவெற்றி
மான வியற்பகை யாரிற்கொண் டோயம்பன் மாறன்மதி
மான வியற்பகை யாற்றோர் மயிலை வரததிண்ணன்
மான வியற்பகை யார்சங் கரவருள் வைத்தருளே.

எ - து. மானம் இயல் பகையார் அத்தம் சுற்றத்தை மாய்த்த-குற்றப் பாடாகிய இயல்பினையுடைய பகை பொருந்திய தம்முடைய சுற்றத்தார் யாவரையும் (போர்க்களத்தில்) மடியச் செய்த, வெற்றி மானம் இயற்பகை யார் இல்கொண்டோய் - வெற்றியினையும் பெருந்தன்மையினையுமுடைய இயற்பகை நாயனாரில்லாளை விரும்பிக் கொண்டவனே, அம்பல் மாறன் மதிமான் - அம்பலென்னும் ஊரிலிருக்கும் சோமாசி மாறனென்னும் ஞானவான் கொடுக்கும், அவி அற்ப - அவிப்பாகத்துக்கு விருப்பமுள்ளவனே, கையாற்றோர் மயிலை வரத - நல்லொழுக்கத்தார் (வாழும்) திருமயிலைப் பதியில் மேவும் வள்ளலே, திண்ணன் மான் அவியல் பகை - கண்ணப்பர் (நைவேதித்த) சமைத்த மானிறைச்சிப் பகுப்பினை, ஆர் சங்கர - புசித்த சங்கரனே, அருள் வைத்தருள்-(என்னிடத்தில்) கருணைசெய்தருள்வாய். எ - று.

மானம் - குற்றம், பெருமை. மதிமான் - ஞானவான். அற்பு - அன்பு. கையாற்றோர் - ஒழுக்கமுடையவர். அவியல் - சமைத்தல். பகை - பகுப்பு. நீ: தோன்றா எழுவாய். அருள்: பயனிலை. (௫௰)

51. வையத் தருக்க ரடலர சாட்சியும் வானவர
வையத் தருக்க ரடவெண் களிறு மதிக்கிலன்பொன்
வையத் தருக்க ரடர்சோலை தங்கு மயிலையிற்பா
வையத் தருக்க ரடலைவெண் பூச்சர் வரமன்றியே.

எ - து. வையம் தருக்கர் அடல் அரசாட்சியும் - பூமியின்கண்ணே யுள்ள களிப்பினையுடைய அரசரது வெற்றி பொருந்திய அரசுரிமையினை

யும், வானவர் அவைய - தேவர் குழாத்தின் வைகும், தரு கடவெண் களிறும் - கற்பகத் தருவையும் மதத்திற்கு உறையுளாகிய கபோலத்தைப் பொருந்திய வெண்ணிற அயிராவதத்தையும், மதிக்கிலன் - மெய்ப்பொருளாக எண்ணேன், பொன்வையத்து அருக்கர் அடர்சோலை தங்கும் - பொற்றேரில்வரும் ஆதவர் வந்து பொருந்தும் சோலை சூழ்ந்த, மயிலையிற் பாவை அத்தர் - திருமயிலைப் பதியில் வாழும் அர்த்தநாரீசுரர், உக்கர் - இடபவாகனத்தர், அடலை வெண் பூச்சர் வரமன்றியே - வெண்ணிற விபூதியைத் தரித்த சிவனார் கொடுக்கும் திருவரத்தை (மெய்ப் பொருள்) என்பதன்றி. எ - று.

யான்: தோன்றா எழுவாய். மதிக்கிலன்: பயனிலை. (ருக)

52. வரமரு ளம்பெண்ணைத் தென்பாகம் வைத்த மயிலைமன்ன
வரமரு ளம்பெண்ணைத் தென்மா மடலன்றில் வாய்ச்சின்னத்த
வரமரு ளம்பெண்ணைத் தென்னை யடாதிகழ் வாருமஞ்சு
வரமரு ளம்பெண்ணைத் தென்பா லடிமை வளர்த்தவனே.

எ - து. வரம் அருள் - (அடியேனுக்கு) வரத்தைக் கொடுப்பாயாக, அம் பெண்ணை தென்பாகம் வைத்த மயிலை மன்ன - அழகிய உமாதேவியை அழகிய வாம பாகத்தில் வைத்த திருமயிலைப்பதியில் வாழும் கர்த்தனே, மருள் வர - மயக்க முறும்படிக்கு, அம் பெண்ணைத் தென்மா மடல் - மேலாகிய பனையின் (* சுஃஃறென்னும் குறிப்பிசையினையுடைய) அழகிய பெரியமடலிலிருக்கும், அன்றில் வாய்ச்சின்னத்தவர்-தரிஞ்சகமாகிய பெரிய காளத்தையுடைய மாரனார் (செய்யும்), அமருள்-போரிடத்து, அம்பு எணைத்து என்னை அடாது - பஞ்ச பாணமும் என் அறிவை மயக்கி என்னை வருத்தாது, இகழ்வாரும் அஞ்சுவர் - (காமியென்று என்னை) இகழும் மனிதரும் (எனக்கு) அஞ்சுவார்கள், உளம் அமர் பெண்ணை தென்பால் அடிமை வளர்த்தவனே - திருவுள்ளத்து விருப்பத்தால் பெண்ணை நதியின் தென்பாலாகிய திருவெண்ணெய்நல்லூரில் வன்றொண்டரை ஞானத்தால் வளரச் செய்தவனே. எ - று.

வரமருள்: முன்பின். அமர் - விருப்பம். நீ: தோன்றா எழுவாய். அருள்: பயனிலை. (ருஉ)

53. வளருகக் கொங்கய வன்மீனுண் சேயை வரவழைத்தோன்
வளருகக் கொங்கய வன்மீன் பதிச்சிர மாலகற்றாய்

---

* 'சுஃஃறென்னுந் தண்டோட்டுப் பெண்ணை' தொல். மொழி. சூ. 7, ந. மேற்.

வளநாகக் கொங்கய வன்மீ னவர்க்கு வகுத்துச் சொல்ப
வளநாகக் கொங்கய வன்மீக்கண் சோலை மயிலையையே.

எ - து. வளம் நாகம் கொங்கு - வளப்பம் பொருந்திய மலைகளை யுடைய கொங்கு தேயத்து, அய வன்மீன் உண்சேயை வர அழைத்தோன்- இரும்புபோன்ற முதலையுண்ட பிள்ளையை (உலகத்தில் யாவரும் காண) வரும்படி செய்த சுந்தர மூர்த்திக்கு, வள்ளல்-(வேண்டிய பொருள்களெல் லாம் கொடுக்கும்) வரதனே, நாகக் கொங்கு அய - பாம்பினையும் மணம் பொருந்திய கெங்கையினையும் தரித்தவனே, அல்மீன் பதி சிர - இராக் காலத்திற்கும் தாரா கணங்களுக்கும் நாயகனாகிய சந்திரனை யணிந்த சடா மகுடத்தனே, மால் அகற்று - (அடியேனுடைய) மயக்கத்தைத் தீர்ப்பாயாக, ஆய்வளன் ஆக - உலகமாதாவாகிய பார்ப்பதியைப் பொருந்திய அழகிய திருமேனியை உடையவனே, கொங்கு - கொங்குதேர் வாழ்க்கை யென்னும் கவிதையை, அயம்வல் மீனவர்க்கு - (கனவட்ட மென்னும்) குதிரையை யுடைய வலிய பாண்டியனுக்கு, வகுத்து சொல் பவள-(கூந்தற்குஇயற்கை மணமுண்டென்பதனை) விளக்கத் திருவுளம் பற்றும் பவளம் போலும் சிவந்த வாயினையுடையாய், கொங்கு நாகம் ஐய - * தேனையுடைய புன்னை மரத்தின் கீழே எழுந்தருளியிருக்கும் ஐயனே! அல் மீக்கு அண்சோலை - இருள் செறிந்துயர்ந்து குளிர்ந்த சோலைகளையுடைய, மயிலைஐயே - திருமயிலைப்பதியில் வாழும் கர்த்தனே. எ - று.

அயம் - இரும்பு. வளல்: விகாரம். அல் - இருள், இரா. கொங்குதேர் வாழ்க்கை யென்னும் பாட்டினைக் கொங்கென்றது முதனினைப்பு; † "கணிகொண்ட மூவடி வோடிட்ங் கொங்குமற்றும்" என்புழிப் போல. ஈ: தோன்றா எழுவாய். அகற்று: பயனிலை. (டுங)

54. ஐந்துருப் பாற்கவ ரும்பளிங் காமென் னறிவகம
லைந்துருப் பாற்கவஞ் செய்யுத் தமகொங்கை யண்ணினும்பி
யைந்துருப் பாற்கவ ராதது போல வவர்மயல்வி
ளைந்துருப் பாற்கவ லாதருள் வாய்மயி லைக்கரசே.

எ - து. ஐந்து உரு பால் கவரும் பளிங்காம் என் அறிவு-(வெண்மை, செம்மை, பொன்மை, கருமை, பசுமை என்னும்) ஐவகை நிறத்தினையும் தன்னிடத்திற் கிரகிக்கும் படிகமாகும் எனது அறிவு, அகம் மலைந்து உருப் பாற்கு - மனம் வேறுபட்டுக் கோபித்த சலந்தரனுக்கு, அவம் செய் உத்தம- பயனின்மையைச் செய்த உத்தமனே, உரு கொங்கை அண்ணினும் பால்

* புன்னைமரம் இத்தல விருட்சம்.
† யா - கா. உறுப்பு. 13.

இயைந்து கவராதது போல் - அட்டை முலையினை வாயாற் கவ்வினும் அதனிடத்துள்ள பாலைப் பொருந்த விரும்பாதது போல, அவாமயல் விளைந்து உருபால் கவலாது அருள்வாய் - ஆசையும் மயக்கமும் மிகுந்து உடலின் பகுதிகளாற் கவலையுறாமல் உனது அருளைச் செய்வாயாக, மயிலைக்கு அரசே - திருமயிலைப்பதியில் வாழும் கர்த்தனே. எ - று.

உரு - நிறம், அட்டை, உடல். அன்னுவயம்:* கொங்கை யண்ணினு மியைந்துருப்பாற் கவராதது போல - உருகொங்கை அண்ணினும் பாலினையைந்து கவராதது போல. இயைய என்பது திரிந்து நின்றது. கவலாதென்பதை அறிவென்பதனோடு கூட்டுக. விளைந்து கவலாதென்பது ஞாயிறுபட்டுவந்தானென்புழிப் போலப் பிறவினை கொண்டது. நீ: தோன்றா எழுவாய்; அருள்வாய்: பயனிலை. (டுச)

55. அரவம் பணத்தினைச் சீறிய வல்கு லரிவையர்சொல்
அரவம் பணத்திரங் கண்ணென் னைந்தன னார்மலர்க்கொம்
பரவம் பணத்தி யுடனடஞ் செய்யு மணிமயிலை
அரவம் பணத்தி யமுதேசன் மார்க்க மருளெனக்கே.

எ - று. அரவுஅம் பணத்தினை சீறிய அல்குல் அரிவையர் - பாம்பினது அழகிய படத்தை (ஒப்பல்லவென்று) முனிந்தநிதம்பத்தினையுடைய மகளிரது, சொல் அரவம் பண் என - மொழியைப் பண்ணின் ஒலியென்றும், அத்திரம் கண் என-கண்ணினை அம்பென்றும், நைந்தனன் - (இப்படியென்று சொல்லி நெஞ்சம்) வருந்தினேன், ஆர்மலர்க் கொம்பர் அ அம்பணத்தியுடன் - நிறைந்த மலர்களையுடைய பூங்கொம்பு போல அழகிய துர்க்கையுடனே, நடம் செயும் அணிமயிலை அர - நடனம் புரிந்த அலங்காரம் பொருந்திய திருமயிலைப் பதியில் வாழும் சிவனே, அம்பு அண் அத்தி அமுதே - (அளவிடப்படாத) நீரைப்பொருந்திய கடலிடத்துண்டாகிய அமுதமே, சன்மார்க்கம் அருள் எனக்கே - ஞானவொழுக்கத்தை அடியேனுக்கு அருளுவாய். எ - று.

அம்பணத்தி - துர்க்கை. அம்பணத்தியமுதே - அம்பு அண் அத்தி அமுதே யெனப் பிரிக்க. நீ: தோன்றா எழுவாய். அருள்: பயனிலை. (டுரு)

56. அருந்தலை யிந்திய தந்திக ளானலி வாகியது
யருந்தலை யிந்தியல் வேணி முடிப்பர வாரணனார்
அருந்தலை யிந்திரன் போற்றக்கொண் டோய்மல ரம்புயமாம்
அருந்தலை யிந்திரை மேவு மயிலைக் கதிபதியே.

எ - று. அருந்தல் ஐ இந்திய தந்திகளால்- (சத்த பரிச ரூபரசகந்தங்களைப்) புசித்தலையுடைய பஞ்சஇந்திரியங்களாகிய யானைகளால், நலிவாகிய

துயர் உந்தலை - குறைபாடுண்டாகிய துன்பத்தினை (அடியேனுக்கு) நீக்கு கின்றாயல்லை; இந்து இயல் வேணிமுடிபர-பிறை உலாவும் சடாமருடத்தை யுடைய பரமனே, ஆரணனார் அருதலை இந்திரன் போற்றக் கொண்டோய்-பிரமனாரது பெரிய சிரத்தைப் புரந்தரன் துதிக்கத் திருக்கரத்தில் தரித்த வனே, மலர் அம்புயமாம் அருதலை இந்திரை மேவும் - தாமரை மலராகிய சிறந்த இடத்தில் திருமகள் பொருந்திய, மயிலைக்கு அதிபதியே - திரு மயிலைப்பதிக்குக் கர்த்தனே. எ - று.

ஐ இந்தியம் - பஞ்சேந்திரியம். உந்தலை - நீக்கவில்லை; இனிமேலாயி னும் காக்க வேண்டுமென்பது குறிப்பெச்சம். தலை - இடம். நீ: தோன்றா எழுவாய். உந்தலை: பயனிலை. (ருசு)

57\. அதிதி யருந்ததி நாதர்க்கு நாத வயன்றலையின்
அதிதி யருந்ததி பிட்சைகொண் டோய்பக டட்ட வலி
யதிதி யருந்ததி யுண்டோனும் போற்றிய வம்புயத்தா
ளதிதி யருந்ததி நாற்றார் வயன்மயி லைக்கத்தனே.

எ - து. அதிதி அருந்ததி நாதர்க்கு நாத - (தேவர்களுக்குத் தாயாகிய) அதிதிக்கும் அருந்ததிக்கும் கணவர்களாகிய காசிபர்க்கும் வசிட்டர்க்கும் கர்த்தனே, அயன் தலையின் அதிதியர் உந்து அதிபிட்சை கொண்டோய் - பிரமனது சிரத்திற் புதியராய் வந்தார் போல இகழ்ச்சி பொருந்து மிகுந்த ஐய மேற்றவனே, பகடு அட்ட வலிய திதியரும்-மகிடாசுரனைச் சங்கரித்த மகா நவமியையுடைய பார்ப்பதியாரும், ததி உண்டோனும் - (ஆயர்பாடி யில்) தயிரினைக் (காந்து) உண்ட திருமாலும், போற்றிய அம்புயத்தாள - துதிசெய்த தாமரை மலர் போலும் பாதத்தை யுடையவனே, திதி - அடி யேனை ரட்சி, அரு ததி நாற்று ஆர்வயல் மயிலைக்கு அத்தனே - நல்ல இளமைச் செவ்வியையுடைய நாற்றுப் பொருந்திய கழனி சூழ்ந்த திரு மயிலைப் பதியில் வாழும் சங்கரனே. எ - று.

அதிதியர் - புதியோர். உந்துதல் - பெய்தலுமாம். அதி - மிகுதி. வலிய திதியர் - மகா நவமியுடைய பார்வதி. நீ: தோன்றா எழுவாய். திதி: பயனிலை. (ருஎ)

58\. அத்தமுன் னன்குள வேலன்முன் னாட்சொல் லருமறையின்
அத்தமுன் னன்குறை சொல்லா தருண்மணி யாணியிடா
அத்தமுன் னன்குழை யான்கணண் டாகிதி யன்பர்களுள்
ளத்தமுன் னன்குண்டை மேற்சென் மயிலையி லாரமுதே.

எ - து. அத்தம் முந்நான்கு உளவேலன் முன்னாள் சொல் அருமறை யின் அத்தம் - கைகள் பன்னிரண்டுள்ள வேலாயுதக் கடவுள் முன்னொரு

காலத்தில்சொன்ன அரிய பிரணவத்தின்பொருளாயுள்ளோனும், முன்நான் குறை சொல்லாது அருள்மணி - தனது சந்நிதியில் அடியேன் மனக்குறையினை விண்ணப்பஞ் செய்யாமல் (தானே அறிந்து விரும்பிய பொருளைக்) கொடுக்கும் சிந்தாமணியாயுள்ளோனும், ஆணியிடா அத்தம் - ஆணியிட்டு உரைத்தற்கு அடங்காத பொன்போலுள்ளோனும், உன்னுன் குழையான் கண் அண்டாநிதி - தியானம் செய்யாதவனிடத்தும் (மனமொழி மெய்களான்) வணங்காதவனிடத்தும் பொருந்தாத அருநிதியாயுள்ளோனும், அன்பர்கள் உள்ளத் தம்முன் - மெய்யன்பர் மனத்திற் பாவனைசெய்ய அவர் முன்பே, ஆன் குண்டை மேற்செல் மயிலையில் ஆரமுதே - இடபத்தின் மீதேறி எழுந்தருளும் திருமயிலைப் பதியில் வாழும் பெறுதற்கரிய அமுதம் போன்ற பரமசிவனே. எ - று.

அத்தன்மையன்: எழுவாய். ஆரமுது: பயனிலை. (ருஅ)

59. ஆரந் தனச்சிலை மீதணி யோமணிந் தான்மதிக்கி
லாரந் தனச்சிலை வேற்கணல் லார்படை யாகியமின்
னாரந் தனச்சிலை யாக்கு மயிலை யரசர்பணி
ஆரந் தனச்சிலை மார்பங்கை யார்த மசலத்தனே.

எ - து. ஆரம் தனம் சிலைமீது அணியோம்-முத்துமாலையினை யாங்கள் முலையாகிய மலையில் அணியோம், அணிந்தால் - (நினது கையுறையை மறுத்தற்கு அஞ்சி வாங்கி) அணிந்தோமாகில், மதிக்கிலார் அந்த நச்சு இலை வேற்கண் நல்லார் - எம்மை அவமதிப்பார் கடலிற் பிறந்த விடத்தையும் இலை பொருந்திய வேலையும் ஒத்த கண்களையுடைய ஆயத்தார், படை ஆகிய மின்னார் அந்தன் - தனக்குச் சேனையாகிய மகளிரை யுடைய அழகிய மாரனது, அச்சு இலை ஆக்கும் மயிலை அரசர் - உடல் இல்லையாகச் செய்யும் திருமயிலைப்பதியில் வாழும் கர்த்தர், பணி ஆரம் தனம் சிலை மார்பு அங்கையார் தம் - பாம்பாகிய பதக்கத்தினையும் பொன்மலையாகிய வில்லினையும் முறையே மார்பினும் அகங்கையினும் உடையவரது, அசலத்தனே - மலையில் வாழுந் தலைவனே. எ - று.

அச்சு: இவ்விடத்தில் உடல். நல்லார்: எழுவாய்; மதியார்: பயனிலை. கிளவி: பாங்கி கையுறை மறுத்தல். இக்கையுறையினை யாம் கொள்ளோமென்பது குறிப்பெச்சம். (ருகூ)

60. அசலத் திணைக்கரி வென்றுசெங் கேழயி லைச்சினவி
யசலத் திணைக்கயற் கண்ணளைக் காத்தவர்க் கன்றியெண்ணி
யசலத் திணைக்கருத் தால்வரை வேற்பசென் றாரநண்ணி
யசலத் திணைக்கண் மயிலைக் கிறைவரை யாய்ந்துரையே.

எ - து. அசலத்து இணைக்கரிவென்று - மலைபோன்ற யானையைச் சங்கரித்து, செங்கேழ் அயிலை சினவிய சலத்து இணை சயல் கண்ணளை - சிவந்த நிறத்தைப் பொருந்திய வேலினை முனிந்த நீரிலிராநின்ற இரண்டு கயல்போலும் கண்களையுடையவளை, காத்தவர்க்கு அன்றி - இரட்சித்தவர்க்குக்கொடுத்தலன்றி, எண்ணிய சலம் திணைக்கருத்தால் வரைவு ஏற்பது என் - பலவாக எண்ணப்பட்டசஞ்சல வொழுக்கத்தையுடைய புத்தியினால் அப்பிறர் பரிசத்தினை ஏற்க முயல்வது யாது காரணம்? ஆரம் நண்ணிய சலம் திணைக்கண்-முத்தங்களைப் பொருந்திய நல்ல அழகிய நெய்தற்றிணைக்கண் உளதாகிய, மயிலைக்கு இறை வரை ஆய்ந்துரையே - திருமயிலைப் பதிக்குக் கர்த்தனது மலையிடத்திலிதனை நாடிச் சொல்வாயாக. எ - று.

இணை - சமானம், இரண்டு. சலம் - வஞ்சனை, சஞ்சலம். திணை - ஒழுக்கம், நிலம். வரைவு - வரைதற்குரிய பரிசம். வரை - மலை.

நீ: தோன்றா வெழுவாய். சொல்: பயனிலை. துறை - பாங்கி பிறர் வரைவு விலக்குவித்தல். (சுO)

61. ஆயத்தி னன்மறைச் சூதாடு மூர்க்கரை யாண்டவுன்னி
யாயத்தி னன்மறை புக்கேன் கவுணிய னன்றுமுப்பி
ராயத்தி னன்மறை செந்தமிழ்ப் பாடவைத் தாயருள்சே
யாயத்தி னன்மறை வேட்டாய் மயிலைநண் ணைம்முகனே.

எ - து. ஆயத்தினால் மறை சூது ஆடும் மூர்க்கரை - கவறு உருட்டும் தாயத்தினாற் கரந்த வொழுக்கமாகிய சூதாடலைச் செய்யும் மூர்க்கநாயனாரை, ஆண்ட உன் நியாயத்தின் - ஆட்கொண்ட உனது நீதியைக் கருதி, நான் - (விலக்கினவற்றைச் செய்கின்ற) அடியேனும், மறைபுக்கேன் - உன்னிடத்துச் சரண்புகுந்தேன். கவுணியன் முப்பிராயத்தின் அன்று நான்மறை செந்தமிழ்ப்பாட வைத்தாய் - திருஞானசம்பந்தர் மூன்றாண்டெய்திய பருவத்தின் முன்னொரு நாள் நான்கு வேதத்தின் பொருளைச் செவ்விய தமிழ்மொழியாற்பாடும் வண்ணம் அவரிடத்தில் திருவருளை வைத்தவனே! அருள் - அடியேனுக்குக் கிருபைசெய். சேய் ஆய் அத்தினால் - நினக்குத் திருப்புதல்வனாகப் பொருந்திய வேலாயுதக்கடவுள் ஆராய்ந்து கூறிய அதனால், மறைவேட்டாய் - பிரணவப் பொருளை விரும்பினவனே! மயிலை நண் ஐம்முகனே - திருமயிலைப்பதியில் வாழும் ஐந்து திருமுகத்தையுடையவனே! எ - று.

நான்: இழிபு சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. மறை - கரத்தல், அடைக்கலம், வேதம், பிரணவம். நீ: தோன்றா எழுவாய்; அருள்: பயனிலை. (சுக)

62. ஐயா யிரத்திலைந் நூற்றைம்பத் தொன்றி லரும்புலவோர்
ஐயா யிரத்தில்லை மன்று மயிலையி ராளுநட
லையா யிரத்திலைக் கொண்டீ ரியற்பகை யார்தரவல்
லையா யிரத்திலை யான்மெலி யாதைந் தலர்க்கஞ்சியே.

எ - து. ஐயாயிரத்தில் ஐந்நூற்றைம்பத்தொன்று இல் அரும்புலவோர் - ஐயாயிர மென்னும் எண்ணினுள் ஐந்நூற்றைம்பத்தொன்றென்னும் எண் இன்மையானுளவாகின்ற * நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதென்னும் எண்ணுடையோராகிய சங்கத்தார்க்கு, ஐ ஆயிர் - அழகிய ஐவகைத் தாயரானவரே! அ தில்லை மன்றும் மயிலையிர் - அந்தத் தில்லை நகரத்துக் கனகசபையாகிய திருமயிலைப்பதியில் வாழும் பரமரே! ஆளும் - (எனது விரகம் தீர) ஆள்வீராக. நடலையாய் - (பத்தியைச் சோதிக்க வேண்டுமென்னும்) உள்ளீடு பொருந்தி, இயற்பகையார் தர இரந்து இல்லை வல்லை கொண்டீர் - இயற்பகைநாயனார் கொடுப்ப யாசித்து அவர் மனையாளை விரைந்து ஏற்றுக்கொண்டவரே! ஆய் இர - (மகளிரெல்லாம் தலைவரை) நாடும் இராக்காலத்து, திலையான் - ஆசையையுடையயான், ஐந்து அலர்க்கு அஞ்சியே மெலியாது - பஞ்ச பாணத்தினுக்கு உள்ளம் நடுங்கி வாடாமல் எ - று.

† ஐவகைத்தாயர்; நற்றாய், செவிலித்தாய், ஊட்டுந்தாய், ஆட்டுந்தாய், சொற் பயிற்றுந்தாயென இவர். அன்னுவயம்: இரந்திலைக் கொண்டீ ரியற்பகையார் தரவல்லை; இயற்பகையார்தர இரந்திலைவல்லைக் கொண்டீர்; இரந்தென்பது விகாரம். விரகமுள்ளாரென்பது தோன்றுதற்கு இவ்வாறு கூறியது. ஆயிர - மகளிர் ஆய் இர; இரா இரவு - இரா. திலை; தில்: ஆசை. மெலியாது ஆளுமெனக் கூட்டுக. நீர்: தோன்றா எழுவாய். அருளும்: பயனிலை. (சுஉ)

---

* இந்நூலாசிரியர் இங்ஙனம் கூறியது, "அவருள் தலைச்சங்க மிருந்தார் அகத்தியனாரும் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும்... அவருளிட்டு நாலாயிரத்து நானூற்றுநாற்பத்தொன்பதின்மர் பாடினாரென்ப" (இறையனாரகப்பொருள், சூ. 1, உரை); "நூலாநா லாயிரநா னூற்றுநாற் பத்தொன் பான், பாலாநா னூற்றுநாற் பத்தொன்பான் - மேலாநாற் பத்தொன்பான் சங்கமறு பத்துநா லாடலுக்கும், கர்த்தன் மதுரையிற்சொக் கன்" (தனிப் பாடல்.) என்னும் ஆதாரங்களை நோக்கிப் போலும்.

† "ஐவர் நலனேம்ப" (சீவக. 363) என்பதையும் அதனுரையையும் பார்க்க.

63. அஞ்சலிக் கக்கொற்ற வேள்கணை யாலல ரான்மெலிந் துள்
ளஞ்சலிக் கக்கொங்கைக் கண்முத் துதிர்ப்பளென் றம்புயத்தேன்
அஞ்சலிக் கக்கொழுஞ் சேல்பாய் மயிலை யரசர்தம்மை
அஞ்சலிக் கக்கொன்றை மாலை தருவ ரரிவையரே.

எ - து. அஞ்சல் - (எனது துயருக்கு இரங்காரென்று) அஞ்சுதலொழிவீராக, இக்கு அ கொற்றம் வேள் கணையால் - கருப்புவில்லினையும் (அதனால் வரும்) விசயத்தினையும் உடைய மன்மதபாணங்களாலும், அலரால் - (பலருஞ் சொல்லும்) பழிமொழியாலும், மெலிந்து உள்ளம் சலிக்க - (உடலம்) வாடி மனம் வருந்த, கொங்கைக்கண் முத்து உதிர்ப்பள் என்று - தன் முலைகளிற் (கண்ணீர்த் துளியாகிய) முத்தங்களை உதிர்க்கின்றாளென்று சொல்லி, அம்புயத்தேன் அம் * சலிக்க கொழுஞ்சேல் பாய் மயிலை அரசர் தம்மை - தாமரை மலர்களில் உண்டாகிய தேன் (தடாகத்துப்) புனலில் ஓடும்படி (அதனிடத்துள்ள) கொழுவிய சேல்மீனினம் குதிகொள்ளும் திருமயிலைப்பதியின்வாழும் கர்த்தரை, அஞ்சலிக்க கொன்றைமாலை தருவர் அரிவையரே - (நீவிர்) அஞ்சலி செய்து நிற்க அவர் கொன்றை மாலையைக் கொடுப்பராதலாற் பாங்கியர்களே.

நீவிர்: தோன்றாஎழுவாய். அஞ்சல்: பயனிலை. துறை: தூதுவிடுகின்ற தலைவி கூற்று. (௬௩)

64. வைகுந்த வாச வனமால் கனக வனசமிசை
வைகுந்த வாச வனத்தான் பிருகு மறைவரைப்பா
வைகுந்த வாச வனம்பித் துதிக்கு மயிலையதாள்
வைகுந்த வாச வனத்தாய்மெய் யன்பிலென் வன்றலையே.

எ - து. வைகுந்தம் வாசம் வனம் மால் - வைகுண்டத்தில் இருக்கும் துளசி மாலையையுடைய திருமாலும், கனகம் வனசம்மிசை வைகும் தவ்வு ஆசம் அனத்தான் - பொற்றாமரைப் பூவின்கண் இருக்கும் தாவாநின்ற அன்பு பொருந்திய அன்னவாகனத்தையுடைய பிரமாவும், பிருகு-பிருகுமகாரிஷியும், மறை - (நான்கு) வேதங்களும், வரைப்பாவை - மலைமகளாகிய (உமாதேவியும்), குந்தம் வாசவன்-(உச்சைச்சிரவம் என்னும்) குதிரையினையுடைய தேவேந்திரனும், நம்பி துதிக்கும் மயிலைய - விரும்பித் துதிக்கும் திருமயிலைப்பதியில் வாழும் சிவனே, தாள் வை - நினது பாதத்தை வைத்தருள்வாயாக, வாசம் குந்தம் வனத்தாய் - மணம் பொருந்திய குருந்த வனத்திற் (குருமூர்த்தியாய்) எழுந்தருளியிருந்தவனே, மெய் அன்பு இல் என் வன் தலையே-மெய்யன்பில்லாத அடியேனது வலிய தலைக்கண். எ - று.

---

* சலித்தல் - ஓடுதல்.

தவ்வு - தாவுதல். ஆசம் - அன்பு. குந்தம் - குதிரை, குருந்தமரம். நீ: தோன்றா எழுவாய்; வை: பயனிலை. (சுச)

65. தலைச்சங்கப் பொற்பக்கர் வண்மைக்கைக் கண்டத்தர் சம்பத்தர்தார்த்
தலைச்சங்கப் பொற்பக்கர் வண்மைக்கைக் கண்டத்தர் சம்பத்தர்தார்த்
தலைச்சங்கப் பொற்பக்கர் வண்மைக்கைக் கண்டத்தர் சம்பத்தர்தார்த்
தலைச்சங்கப் பொற்பக்கர் வண்மை மயிலையிற் சங்கரரே.

எ - து. தலை சங்கம் பொற்பு அக்கர் - இடம் அகன்ற நெற்றியின் கண்ணே அழகு பொருந்திய நேத்திரத்தையுடையவர், வண்மை - வலிய கரிய நஞ்சத்தை, கை - ஒப்பனை செய்து வைத்த, கண்டத்தர் - கந்தரத்தை உடையவர், சம்பு அத்தர் - வெண்ணாவல் நிழலில் (எழுந்தருளி யிருக்கும்) கர்த்தர், தலைசங்கம் தார் பொன் பக்கர் - (அரிபிரமர்) தலைக் கூட்டங்களால் (தொடுத்த) மாலையினைப் பொலிவு பொருந்திய (தோளின் இரு) பக்கத்தினும் உள்ளவர், வண்மை கைக்கு அண்டு அத்தர் - மெய்யாகிய ஒழுக்கத்திற்குப் பிரசன்னமாக வரும் மெய்ப்பொருளானவர், சம்பத்தர் - (ஞானச்) செல்வத்தை யுடையவர், தார்-(கல்வி) ஒழுங்கினையுடைய, தலைச் சங்கம் பொன் * பக்கர் - தலைச்சங்கப் புலவரிடத்திலும் சூரியனிடத்திலும் விருப்பமுடையவர், வண்மைக் கைகண்டத்தர் - வளப்பம் பொருந்திய கையிடத்துத் (தானம்வாங்கிய) பூமியைஉடையவராகிய, சம் பத்தர்-பத்து அவதாரமுடைய மாயனாரது, தார் - (கண்ணாகிய) பூவினையுடைய, தலை சங்கம் பொற்பு அக்கர் - பெருமை பொருந்திய சங்கத்தினாற்செய்த பொலிவாகிய அக்குமணியினையும் உடையவர் (யாவரெனின்), வண்மை மயிலையில் சங்கரரே - (யாவர்க்கும் வேண்டிய பொருளைக்) கொடுக்கும் திருமயிலைப்பதியில் வாழும் சங்கரர். எ - று.

வண்மை - வலிய கரிய நஞ்சத்தை; மை: ஆகுபெயர். அன்னுவயம்:- தார் தலைச் சங்கப் பொற்பக்கர் - தலைசங்கம் தார் பொற்பக்கர்; பொற்பு - அழகு, பொலிவு. சூரியனிடத்து விருப்பமுடையவரென்றது, யாவருஞ் செய்யும் நியதிப்பலனை அவனிடத்து வைகி ஏற்றுக்கோடலின். கண்டம் - உலகம். சம் - பிறப்பு. அவர்: எழுவாய்; சங்கரர்: பயனிலை. (சுரு)

66. கரவாத வம்பொரு காசர வக்கங் கணதிங்கள்சே
கரவாத வம்பொரு சங்கம்வெல் வீரகங் காசலத்திற்
கரவாத வம்பொருந் துஞ்சீர் மயிலைத்துங் காகருணை
கரவாத வம்பொரு வாநோய்ப் பவக்கடல் காய்ந்தருளே.

---

* பக்கம்பக்ஷம் - விருப்பம்.

எ - து. கரம் ஆதவம் பொரு காசு அரவம் கங்கணா - (சந்திர) கிரணத்தையும் சூரிய கிரணத்தையும் இகழும் (ஒளியையுடைய) மணி பொருந்திய நாக கங்கணனே, திங்கள் சேகர - சந்திரனைச் சடைமுடியில் அணிந்தவனே, அவம் வாது பொரு சங்கம் வெல் வீர - குற்றம் பொருந்திய வாதினைச் செய்யும் நக்கீரரை வென்ற வீரனே, கங்காசலத்தில் கரவா - திருக்கழுக்குன்றத்தில் (எழுந்தருளியிருக்கும்) * கள்ளம் வல்லவனே, தவம் பொருந்தும் சீர்மயிலை துங்கா - தவங்களைப்பொருந்துதற்கு ஏதுவாகிய செல்வங்களையுடைய திருமயிலைப்பதியில் வாழும் பெரியோய், கருணாகர - அருள் பிறத்தற்கு இடமானவனே, வாதம் ஒருவா நோய் வம்பு பவம் கடல் காய்ந்தருளே - வாதங்களால் வரும் நோய்களும் மற்றப் பித்தம் ஐகளால் வரும் நீங்காத நோய்களும் நிலையின்மையுமுடைய சனனசாகரத்தை வற்றும்படிசெய்து உனது தண்ணளியைக்கொடுப்பாயாக. எ - று.

கங்கம் அசலம் - கங்காசலம்; கங்கம் - கழுகு. நீ: எழுவாய்; அருள்: பயனிலை. (௬௬)

67. காயமன் றூடிக்கு மேவாம லன்பரைக் காக்குந்தில்லைக்
காயமன் றூடிக்கு வீடா மயிலையைக் காண்கிலர்மெய்
காயமன் றூடிக்குள் வந்தோன்சொல் பாடல் கருதுண்டுச
காயமன் றூடிக் குடகாற் கறங்கொத்த காதனெஞ்சே.

எ - து. கா்ய் யமன் தாள் திக்கு மேவாமல் - சினம் செய்யும் யமனது முயற்சி பொருந்திய தென்றிசையிற் செல்லாமல், அன்பரை காக்கும் தில்லை காயம் மன்றூடிக்கு - அடியாரை இரட்சிக்கும் தில்லைநகரத்து ஞானாகாசமாகிய சபையில் நடனம் செய்யும் பரமசிவனுக்கு, வீடாம் மயிலையை - (எக்காலமும் எழுந்தருளியிருத்தற்கு) இடமாகிய திருமயிலைப் பதியை, காண்கிலர் மெய் காயம் அன்று - தரிசியாதவர்களது உடலம் (பயனுடைய) உடலம் அன்றாதலால், ஆடிக்குள் வந்தோன்சொல் பாடல்கருது - கண்ணாடியினின்றும் (ஈசுரவிம்பமாக) வந்த சுந்தரமூர்த்தி ஓதிய திருப்பதிகத்தை நினைப்பாயாக. மன்று சகாயம் உண்டு - (உனக்குச்) சன்மார்க்கத்துக்குத் துணையுண்டாம். ஆடி குடகால் கறங்கு ஒத்த காதல் நெஞ்சே - ஆடிமாதத்திலே வரும் மேல்காற்றிற் சுழலும் காற்றாடி போலச் சுழலும் ஆசையையுடைய நெஞ்சமே! எ - று.

தாள் - முயற்சி. காயம் - ஆகாயம். அப்பாடலை நினைத்தலாவது † "ஊனைக்காவல் கைவிட்டு" என்னும் பாடலைக் கருதுதல். யமன் முயற்சி

---

* கள்ளம் வல்லானென்பது திருக்கழுக்குன்ற நாதருடைய திருநாமங்களுள் ஒன்று; தல புராணத்திலும் காணப்படுகின்றது; "கள்ளம் வல்லான் காதல்செய் கோயில் கழுக்குன்றே" தே.

† "தேனைக் காவல் கொண்டு விண்ட கொன்றைச் செழுந்தாராய், வானைக் காவல் கொண்டு நின்றா ரறியா நெறியானே, ஆனைக்காவி லரனே பரனே யண்ணா மலையானே, ஊனைக் காவல் கைவிட் டுன்னை யுகப்பா ருணர்வாரோ" சுந்தா. தே. ஊர்த்தொகை.

யாவன "செக்கினிடைத்திரித்துந் தீவாயி லிட்டெரித்தும், தக்க நெருப்புத் தூண் டழுவுவித்தும் - மிக்கோங்கு, நாராசங் காய்ச்சிச் செவிமடுத்தும்" என்பன போல்வன.

நீ: தோன்று எழுவாய். கருது: பயனிலை. (சுஎ)

68. காதற் பரவை யகத்தானுக் காவணங் காட்டுநம்பா
காதற் பரவை யகல்வாய் நவியக் கரமதனைக்
காதற் பரவை யகஞ்சொன் மயிலைய கல்விசுருங்
காதற் பரவை யகத்திற்செல் லாது கடைக்கண்வைத்தே.

எ - து. காதல் பரவை அகத்தானுக்கு ஆவணம் காட்டும் நம்பா - ஆசை பொருந்திய பரவையை மனைவியாக உடைய வன்றொண்டர்க்கு அடிமை முறிச்சீட்டைக் காட்டும் விருப்பமுடையவனே! கா - அடியேனை இரட்சி. தற்பர - ஞான சொரூபனே! வை அகல்வாய் நவியம் கர - கூர்மையினையும் அகன்ற வாயினையும் உடைய மழுவைத் தரித்த திருக்கரத்தனே! மதனை காது அற்பு அர - மன்மதனை முனிந்த கருணை பொருந்திய கர்த்தனே! வையகம் சொல் மயிலைய - உலகத்தார் புகழும் திருமயிலைப்பதியில் வாழும் கர்த்தனே! கல்வி சுருங்காது - (இரவச்சத்தால்) கல்வியறிவு குன்றாமலும், அற்பர் அவையகத்தில் செல்லாது - உலோபர் கூடியிருக்கும் இடத்தில் யாசித்துச் செல்லாமலும், கடைக்கண் வைத்தே - அடியேனிடத்தில் நினது கடாட்சத்தை வைத்து. எ - று.

அற்பு - அன்பு. நீ: தோன்று எழுவாய். கா: பயனிலை. (சுஅ)

69. கடக்குஞ் சரத்துரி போர்த்தாய்முன் மாவலி காணச்சென்ற
கடக்குஞ் சரத்தனென் றேத்து மயிலைய காத்தருள்வி
கடக்குஞ் சரத்துரை போற்கொடி தம்பல் கரும்பன்வலி
கடக்குஞ் சரத்துய ராற்றரி தாகுமிக் கான்கிரிக்கே.

எ - து. கடம் குஞ்சரத்து உரி போர்த்தாய் - மதம் பொருந்திய யானையினது தோலைப் போர்த்துக்கொண்ட சிவனே! முன் மாவலி காண சென்ற கடம்குஞ்சர் - முன்னொரு காலத்தில் மாவலி யென்னும் அவுணன் கண்ணுற் காணும்படி (தானம் வாங்கப்) போகிய இறைமையினையுடைய வாமன ரூபியாகிய திருமால், அத்தன் என்றேத்தும் மயிலைய-ஞானோபதேச பிதா வென்று துதிக்கும் திருமயிலைப் பதியில் வாழும் சிவனே! காத்தருள்- (விரகத்தைத் தீர்த்து) இரட்சிப்பாயாக. விகடம் குஞ்சர் அத்து உரை போல் - விகற்பத்தையுடைய கோள்வாயரிடத்துப் பொருந்தும் குறளைச் சொல் போல, கொடிது அம்பல்-கொடிதாயிருந்தது அயலவர்சொல்லும் பழிமொழி; (அதுவன்றியும்), கரும்பன் வலிகடக்கும் சரம் துயர் ஆற்று அரிது

ஆகும் இ காண்கிரிக்கே - கருப்புவில்லையுடைய மன்மதனது மகளிர் மன வலியைக் கடக்கும் அம்பினால் வரும் துயரத்தைப் பொறுத்தல் கூடாதாத லால், (வேங்கைப் பூவின்) மணம் உண்டாகா நின்ற இவ்வரைக்கண். எ - று.

கடக்குஞ்சர் - மெய்க்குள்ளார்; அர் - விகுதி. குஞ்சரத்துறை - குற ளைச் சொல்; அத்து: சாரியை. ஆற்று: முதனிலைத் தொழிற் பெயர். நீ: தோன்றா எழுவாய்; காத்தருள்: பயனிலை. (சுகூ)

70. கிரியை செயத்தரு ணம்பிகை ஞானங் கிளரிச்சையான்
கிரியை செயத்தரு பாதார விந்தன் கிரணவெள்ளிக்
கிரியை செயத்தருண் மேனியன் முத்தொளிர் கின்றசெந்து
கிரியை செயத்தருச் சூழ்மயி லைப்பதிக் கீர்த்தியனே.

எ - து. கிரியை செயம் தருண அம்பிகை ஞானம் கிளர் இச்சை யான் - கிரியாசத்தியும் வெற்றியையுடைய தருணியாகிய பராசத்தியும் ஆதிசத்தியும் ஞானசத்தியும் விளங்கும் இச்சா சத்தியு மாகிய பஞ்சசத்தி சொரூபன்; கிரியை செய தரு பாதாரவிந்தன் - (ஆகமத்திற் கூறிய முறை மையால்) அர்ச்சனையைச் செய்ய (அவ்வாறு செய்தவர்கட்குப்) பெறும் பேறாகக் கொடுக்கும் பாததாமரையையுடையவன்; கிரண வெள்ளிக் கிரி ஐ - ஒளிபொருந்திய கயிலைமலையில் எழுந்தருளியிருக்கும் சுவாமி, செய் அத்து அருள் மேனியன் - செய்ய நிறம் பொருந்திய அருள்வடிவுடைய வன்; முத்து ஒளிர்கின்ற செந்துகிர்-முத்தங்களும் பிரகாசிக்கின்ற சிவந்த பவளங்களும், இயை செய் - பொருந்திய கழனிகளும், அ தரு சூழ் - அழ கிய தருக்களும் (எவ்விடங்களிலும்) சூழ்ந்த, மயிலைப்பதிக் கீர்த்தியனே - திருமயிலைப்பதியில் வாழும் மிகுந்த புகழையுடைய சிவன். எ - று.

அவன்: தோன்றா எழுவாய்; கீர்த்தியன்: பயனிலை. (எ0)

71. கீரப் புலவ ரியம்புந் தருக்கக் கிரமம்வெல்சொக்
கீரப் புலவ ரியஞ்சடை யீர்பொற் கிரிமருகீர்
கீரப் புலவ ரியண்மயி லைக்கட் கிளைத்தொளிர்நன்
கீரப் புலவரி யன்பரைக் காத்த கிருபைநன்றே.

எ - து. கீரப்புலவர் இயம்பும் தருக்கம் கிரமம் வெல் சொக்கீர் - நக் கீரரென்னும் பாவலர் கூறும் விவாதத்தில் உண்டான (வாத சற்ப விதண்டை எது என்னும்) முறைமையை வென்ற சுந்தரரே, அப்பு உலவு அரி அம் சடையீர் - கங்கையினையும் ஊர்ந்துசெல்லும் பாம்பினையும் (அணிந்த) அழகிய சடாமகுடத்தரே, பொன் கிரி மருகீர் - பொன்னாகிய இமய பர்வதராசனுக்கு மருகரானவரே, கீரம் புலம் அரி - பாற்கடலில்

(அறிதுயில் கொள்ளும்) திருமால் (வீரகத்தி தீரும்படிக்கு), அண் மயிலைக் கண் கிளைத்து ஒளிர் நன்கீர் - வந்து பொருந்திய திருமயிலைப்பதியினிடத்துச் (சோதிலிங்க வடிவாய்த்) தோன்றி இலங்குகின்ற அழகுள்ளவரே, அ புலவு அரி அன்பரை காத்த கிருபை நன்றே - (பன்றியின்) ஊனை (நம்மைக்குறித்து) அரிந்த கண்ணப்பரை இரட்சித்த உமது கருணையே நன்று. எ - று.

கீரன் - நக்கீரன். சொக்கர் - சொக்கேசர். மருகீர் - மருகரானவரே. கீரம் - பால். புலம் - இடம். புலவு - ஊன். அரி - பன்றியுமாம்.

இது, * பழிப்பது போலப் புகழ் புலப்படுத்தல். கருணை: எழுவாய். நன்று: பயனிலை. (எக)

72. நன்றாக வெண்ணு தமியேற்குப் பாவனை நண்ணிடும
நன்றாக வெண்ணுறு பேறு மயிலை நதிச்சடையாய்
நன்றாக வெண்ணுணெய் போன்றுறை நாதா நமன்றனைக்க
னன்றாக வெண்ணுதை யாற்றீர்த்த பாத நளினத்தனே.

எ - து. தமியேற்கு - (வேறு துணையில்லாத) அடியேனுக்கு, நன்று (அறிவு, ஆராய்தல், கொடை, பண்பு, நண்பு, பழிபாவம்அஞ்சுதல் முதலிய) பெருமை, ஆக - உண்டாக, எண்ணு - (திருவுளத்திற்) சிந்திப்பாயாக, பாவனை நண்ணிடும் மனன் தா - உனது பாவனை பொருந்தத் தக்க மனத்தைத் தா, க எண்ணுறு பேறு ஆம் மயிலை - ஒன்றென்னும் எண்ணினைப் பொருந்தும் வீடுபேறு உண்டாதற்கு ஏதுவாகிய திருமயிலைப்பதியில் வாழும், நதிசடையாய் - கங்கையை யணிந்த சடாமகுடத்தை யுடையவனே, நன்று ஆக - புண்ணிய சொரூபனே. எண்ணுள் நெய்போன்று உறைநாதா - எள்ளின்கணுள்ள நெய்போல (உலகமெங்கும்) வியாபித்திருக்கும் கர்த்தனே, நமன்றனைக் கனன்று - யமனைக் கோபித்து, ஆகம் எண் உதையால் தீர்த்த பாத நளினத்தனே - அவனது மார்பில் மனவலியை உதைத்தற்கிரியையால் நீக்கிய பாத தாமரையையுடையவனே. எ - று.

அன்னுவயம்: நன்றாக வெண்ணு தமியேற்கு - தமியேற்கு நன்றாக வெண்ணு. கவெண்: குறிப்புமொழி. ஆகம்: ஆகுபெயர். நீ: தோன்றா எழுவாய். எண்ணு: பயனிலை. (எஉ)

73. நளிராவி மாசத்தி னன்முன் னிருளென நையச்செய்யு
நளிராவி மாசத்தி கங்கை மயிலையி னுரிபங்கா
நளிராவி மாசத்தி நேருமைக் கண்ணி நகைமதியால்
நளிராவி மாசத்தி யான்மெலி யாதருணற்கொன்றையே.

* தண்டி. சூ. 64.

எ - து. நளிர் ஆவி மாசு - (பெருமை பொருந்திய உடல்களிற்) செறிந்த உயிர்களின் பாசவிருளை, அத்து இனன்முன் இருளென நையச் செய்யும் - செங்கதிரோன் முன் இருள் (நீங்குமாறு) போல நீங்கும்படி செய்யும், நளிர் ஆவி மாசத்திகங்கை மயிலையில் - குளிர்ந்த தடாகமாகிய பெரிய சத்திகங்கை யென்னும் தீர்த்தத்தையுடைய திருமயிலைப் பதியில் வாழும், நாரிபங்கா - உமாதேவி வாம பாகனே, நளிர் ஆவி மா சத்தி நேருமை மை கண்ணி - பெரிய அதிசயத்தை விளக்கும் நின் கொன்றை மாலையை விரும்பும் வண்டினையும் வேலினையும் ஒக்கும் மையெழுதிய கண்ணையுடைய தலைவி, நகை மதியால் - ஒளிபொருந்திய சந்திரனாலும், நள் இரா - நடு இரவினாலும், விம் மாசு அத்தியால் - ஒலிக்கும் கரிய கடலினாலும், மெலியாது அருள் நற்கொன்றையே - வருந்தாமல் உனது நல்ல கொன்றை மாலையைக் கொடுப்பாயாக. எ - று.

நளிர் - பெருமை. அத்து - சிவப்பு. ஆ - அதிசயம். வீ - பூ; விகாரம். மா - வண்டு. நள் - நடு. விம் - ஒலி; விகுதிகுறை. மாசு - கருமை. அத்தி - கடல்.

நீ: தோன்றா எழுவாய்; அருள்: பயனிலை. (எந)

74. நற்குருத் தண்டா ளத்திரு வாய்மொழி நானினைந்துன்
னற்குருத் தண்ட நமன்கரு தாமைக்கு நாட்டருள்பு
னற்குருத் தண்டலை சூழும் வயலி னறுஞ்செந்நெல்கன்
னற்குருத் தண்ட மளக்கு மயிலை நகாயுதனே.

எ - து. நற்குரு தண் தாளம் திருவாய்மொழி நான் நினைந்து உன்னற்கு - ஞானதேசிகனது குளிர்ந்த முத்தம் போலும் முறுவலினையுடைய திருவாயால் (திருவுளம் பற்றிய) உபதேசத்தை நினைந்து உன்னைத் தியானம் செய்தற்கும், உருத்து அண்ட நமன் கருதாமைக்கு - வெகுண்டு யமன் என்னைப் பொருந்துதற்கு எண்ணாமல் இருத்தற்கும், அருள் நாட்டு - உனது திருவருளை (என்னிடத்தில்) நிலைபெறச் செய்வாயாக, புனல் குரு தண்டலை சூழும் வயலில்-நன்னீர் நிறைந்த பல நிறங்களையும் பொருந்திய சோலை சூழ்ந்த கழனிகளில் (உண்டாகா நின்ற), செந்நெல் கன்னல் குருத்து அண்டம் அளக்கும் மயிலை - செந்நெலின் குருத்தும் கன்னலின் குருத்தும் ஆகாயத்தை (இத்துணை உயர்ந்ததென்று) வரையறை செய்யும் திருமயிலைப் பதியில் வாழும், நக ஆயுதனே - (பிரமாவின் சிரத்தைக் கொய்தற்குத்) திருக்கை நகத்தினையும் (இராவணன் தோள்களை நெரித்தற்குத்) திருவடி நகத்தினையும் படைக்கலமாக வுடைய சிவனே. எ - று.

குரு - நிறம். நகமென்பதற்கு மலைச்சிலை யெனினும் அமையும்.

நீ: தோன்றா எழுவாய்; நாட்டு: பயனிலை. (எச)

75. உதகங் கணவன்னத் தாமச் சடில வுலவையைப்பொ
ருதகங் கணவன் றலமேத்து மீச வொளிர்மழுவா
யுதகங் கணவன்னச் செய்சூழ் மயிலையி னுத்தமவுன்
னுதகங் கணவன்பர் முன்செய் நடத்தை யுவந்தியற்றே.

எ - து. உதகம் கணம் வன்னம் தாமம் சடில - கங்கையினையும் வட்டமாகிய அழகிய மாலையினையும் (அணிந்த) சடைமுடியையுடையாய், உலவையைப் பொருத கங்கண - வாயுவுடனே போர்செய்த நாககங்கணத்தை யுடையவனே, வன் தலம் ஏத்தும் ஈச-வலிய பூமியிலுள்ளார் யாவரும் துதிக்கும் சிவனே, ஒளிர் மழு ஆயுத - விளங்குகின்ற மழுவாயுதத்தை யுடையவனே, கங்கு அணவு அன்னம் செய் சூழ் மயிலையின் உத்தம - வரம்பருகினைப் பொருந்திய அன்னப்பட்சிகளையுடைய கழனி சூழ்ந்த திருமயிலைப் பதியில் வாழும் உத்தமனே, உன்னுது ஆகம் - (அடியேன் உனது நடனத்தை) மனத்திற் கருதுவேன், கணம் அன்பர் முன் செய் நடத்தை உவந்து இயற்றே - கூட்டமாகிய நின் மெய்யன்பர்முன்பு செய்யும் திருநடனத்தைத் திருவுளமகிழ்ந்து செய்வாய். எ - று.

கணம் - வட்டம், (ஆகுபெயர்), கூட்டம். அணவுதல் - பொருந்தல். ஈ: தோன்றா எழுவாய்; இயற்று: பயனிலை. (எரு)

76. உவளக மையத் துயர்மா மயிலைய ரோங்கல்வெற்பா
உவளக மையத் துறுநீலத் தாலமை யூதொலியால்
உவளக மையத் துடல்வாடி வெந்துய ருற்றிருந்தாள்
உவளக மையத் துராவுக மான துலகிடத்தே.

எ - து. உவளகம் மை அத்து உயர் மா மயிலையர் ஓங்கல் வெற்பா - மதில்கள் மேகத்தைப் பொருந்தி உயர்ந்த பெருமையை யுடைய திருமயிலைப்பதியில் வாழும் சிவனாரது உயர்ந்த மலையிடத்தில் இருக்குந் தலைவனே, உவளகம் மையத்து உறு நீலத்தால் - தடாகத்தின் நடுவே நெருங்கிய நீலோற்பலங்களினாலும், அமை ஊது ஒலியால் - வேய்ங்குழலை ஊதும் ஒலியினாலும், உவள் - நின் தலைவி, அகம் ஐயத்து உடல் வாடி வெந்துயர் உற்றிருந்தாள் உவளகம் - மனத்தினிகழும் ஐயத்துடன் கூட உடலும் வாடி வெவ்விய துயரத்தையும் உற்றிருந்தாள் ஓரிடத்தின்கண்ணே (அக்காலத்து), மை அத்து ரா உகமானது உலகிடத்தே - இருண்ட அத்த ராப்பொழுது அவட்கு ஒரு யுகமாயிருந்தது இப்பூமியிடத்து. எ - று.

உவளகம் - மதில், குளம். அமை - மூங்கில். அத்து - அத்தம்; விகாரம். ரா - இராத்திரி. ஐயமாவது, தலைவர் வருந்துணையும் உயிர் நிற்கற்பாலதோ அலது நீங்கற்பாலதோ வென எண்ணுதல். அவள் இவ்

வாறு வருந்துதற்கு நீ இத்துணையும் வாராததென்னை யென்பது குறிப் பெச்சம்.

துறை: பாங்கி வந்தோன் றன்னொடு நொந்து வினாதல். (எசு)

77. உலகந் தராசன்பி னுன்பாட லின்பொரு ளோர்ந்தறிதற்
குலகந் தராசன்றி மேலான சொற்பொரு ளோர்குவரோ
உலகந் தராசன் றனைப்பெற் றவாகொன்றை யுற்றுயர்வா
குலகந் தராசன் மதிலார் மயிலை யுறுநம் பனே.

எ - து. அன்பின் உன் பாடலின் பொருள் ஓர்ந்து அறிதற்கு உலகம் தராசு - அன்பினாலே (அடியாரால் துதிக்கப்பட்ட) உனது பாட்டுக்களி லுள்ள மெய்ப் பொருள்களை அளவிட்டறிதற்கு உயர்ந்தோர் தராசாகுவர், (அவ்வாறன்றி), உலகு அந்தர் - உலகத்தன்னா (உள்ளக்) குருடராகிய (கீழ்மக்கள்), ஆசு அன்றி மேலான சொற்பொருள் ஓர்குவரோ - இவர் தம் முடைய பொருளையாய்வதன்றி (யாவர்க்கும்) மேலாகிய (உனது பாட்டின்) பொருளை ஆயமாட்டார்கள், உலம் கந்தராசன் றனைப் பெற்றவா - வலிமைய யுடைய கந்தனாகிய தேவராசனைப் பெற்றவனே, கொன்றை உற்று உயர் வாகு உல-கொன்றை மாலையைப் பொருந்தி உயர்ந்த கற்றிரள்போன்ற தோள்களையுடையவனே, கம் தரா - பிரம கபாலத்தைத் தரித்தவனே, சன் மதில் ஆர் மயிலை உறுநம்பனே - நல்ல மதில்கள் சூழ்ந்த திருமயிலைப்பதி யில் வாழும் சிவனே. எ - று.

அன்னுவயம்: உலகந்தராசன்பி னுன்பாடலின் பொருளோர்ந்தறி தற்கு: அன்பின் உன் பாடலின் பொருள் ஓர்ந்தறிதற் குலகந்தராசு. அந் தர் - குருடர். ஆசு - குற்றம். சொல்: ஆகுபெயர். உலம் - வலி, கல். தரா - தரித்தவனே. சன் - நல்ல. இத்துணையும் வீணாள் போக்கிய அடியேன் இனிமேலாயினும் நினது பாடலின் மெய்ப் பொருளை யாராயச் செய்யென்பது குறிப்பெச்சம். (எஎ)

78. நம்பந்த ராகத்தை நின்னடிக் கெய்தச்செய் நன்மைந்தர்சொன்
னம்பந்த ராகத்தை யுன்பொரு ளேயென்று நாநினைந்தேம்
நம்பந்த ராகத்தைச் சேர்பாத சுந்தரர் நாமன்னர்கா
னம்பந்த ராகத்தைக் கேட்கு மயிலையி னன்மருந்தே.

எ - து. நம் பந்தம் ராகத்தை நின் அடிக்கு எய்தச் செய் - எம் முடைய பாசத்தால் வரும் ஆசையை (அநித்தியப் பொருளிற்செல்லாமல் நித்தியப் பொருளாகிய) உனது பாதத்திற் செல்லும்படி செய்வாயாக, நன் மைந்தர் சொன்னம் பந்தர் ஆகத்தை உன்பொருளே என்று நாம் நினைந் தேம் - நல்ல புதல்வரும் செல்வமும் கிளைஞரும் எம் உடம்புகளுமாகிய

இப் பொருள்களை உன்னுடைய பொருளே யென்று நாங்கள் நினைந்தோம், நம்பு அந்தம் ராகத்தை சேர் பாத - (அடியாரிடத்து) விருப்பத்தையும் அழகினையும் சிவப்பினையும் பொருந்திய பாதத்தை உடையவனே, சுந்தரர் நாமன்னர் கானம்-வன்றொண்டர் திருநாவுக்கரையராகிய இருவர்பாடலின் பண்களையும், பந்தர் ராகத்தை - திருஞானசம்பந்தர் பாடலின் பண்களை யும், கேட்கும் மயிலையில் நன்மருந்தே - (திருச்செவியினாற்) கேட்டருளும் திருமயிலைப் பதியில் வாழும் (ஞானவாரிதி) யமுதமே. எ - று.

பந்தம் - பாசம், சுற்றம். ராகம் - சிவப்பு, இராகம். நாமன்னர் - அப்பர். பந்தர் - சம்பந்தர். நீ: தோன்றா எழுவாய்; செய்: பயனிலை. (எஅ)

79. மருந்தல மேதை யருந்தி யிரவிவண் வைகிதுவ
மருந்தல மேதைய நீகாண்செய் வார்குர வைகணந்த
மருந்தல மேதை யலர்கதிர் நேர்தட மாற்றலர
மருந்தல மேதையர் போற்று மயிலை மணிவரைக்கே.

எ - து. மருந்து அல - (இதன் சுவையைக் குறிக்குமிடத்துத்) தேவா மூதங்களல்ல, மேதை அருந்தி - இவ்விறைச்சியினை நுகர்ந்து, இரவு இவண் வைகு - இராப்பொழுது இவ்விடத்தில் தங்குவாயாக, இது அமரும் தலம் - யாங்கள் வாழும் ஊரும் (சேய்த்தன்று) இம்மலையிடத்தது, ஏது ஐயம் - (இவ்விடத்தில் தங்குதற்கு) ஐயம் ஏது, நம் தமரும் குரவை கள் செய்வார் நீ காண் - எம்முடைய குன்றவாணரும் (செவ்வேட்குக்) குரவைக் கூத்தாடல் செய்வார்கள் (அதனைத் தலைவனே) நீ காண்பாயாக, தலம் மேதை அலர் கதிர் நேர்தடம் - (தாமரை) இலைகள் புதனையும் அதன் மலர்கள் செங்கதிரோனையும் ஒக்கும் தடாகங்களைப் (பொருந்திய), மாற்றலர் அமர் உந்து அலம் மேதையர் - பகைஞராது போரைத் தொலைக் கும் அலாயுதத்தை யுடைய அறிவுடைய பலபத்திரர், போற்றும் மயிலை மணிவரைக்கே - துதிசெய்யும் திருமயிலைப்பதியில் வாழும் மாணிக்க வருணராகிய சிவனார் மலையிடத்து. எ - று.

அன்னுவயம்: நீகாண் செய் வார் குரவைகணந் தமரும் - நந்தமருங் குரவைகள் செய்வார் நீகாண். குரவை யென்பது, காமமும் வென்றியும் பொருளாகக் குரவைச் செய்யுள் பாட்டாக எழுவரேனும் எண்மரேனும் ஒன்பதின்மரேனும் கைபிணைத்தாடுவது; "குரவை யென்பது கூறுங் காலைச், செய்தோர் செய்த காமமும் விறலும், எய்தக் கூறு மியல்பிற் றன்றே" என்றார். மேதை - இறைச்சி, புதன், அறிவு. தலம் - இலை. உந்துதல் - செலுத்தல். அலம் - கலப்பை. துறை: விருந்து விலக்கல். வைகறை முடிவின் எழுந்து விடியற்கண் நின் ஊர் வயிற் செல்லென்பது குறிப்பெச்சம். மணி: ஆகு பெயர். (எகூ)

80. மணிவாயி லார்மன் னுளக்கோயி லார்தென் மயிலையெனும்
மணிவாயி லார்மன் பதைகட் கருணல்க வந்தசிந்தா
மணிவாயி லார்மன்னைப் பாடுவித் தோர்கத்தர் வாதஞ்செய்ய
மணிவாயி லார்மன்ன ரேபொரு ளென்றுசொன் மாதுங்கரே.

எ - து. மணிவாயிலார் மன் உளக்கோயிலார் - அழகிய வாயினுடைய ரது நிலைபெற்ற இதயகமலாலயத்தில இருப்பவர், தென்மயிலை எனும் மணிவாய்இல்லார் - வனப்பையுடைய திருமயிலைப்பதி யென்று சொல்லும் நல்ல இடமாகிய வீட்டையுடையவர், மன்பதைகட்கு அருள் நல்க வந்த சிந்தாமணி - இவ்வுலகத்தார்க்குத் திருவருளைக் கொடுக்கச் (சிவலிங்க ரூபமாக) எழுந்தருளின சிந்தாமணியென்றவர், வாயிலார் மன்னை பாடுவித்தோர் கத்தர் - உரையாடுசல் இலளாகிய ஏடியை மிகவும் பேசச் செய்வித்த மாணிக்க வாசகர்க்கு ஞானோபதேசிகர், வாதம் செய் அமண் - (சம்பந்தமூர்த்தியுடனே) வாது செய்த சமணர், இ ஆய் இலார் மன்னரே பொருள் என்று சொல் - (தேகத்துக்குக் காரணமாகிய) தாயிலாராகிய கர்த்தரே செகத்துக்குக் கர்த்தரென்று சொல்லப்படும், மாதுங்கரே - பெரிய பரமர். எ - று.

சிந்தா மணி: ஆகுபெயர். வாயிலார் - உரையாடுதல் இல்லாதவர்; வாய்: ஆகுபெயர்; வாயிலார்: ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவி. ஆய் - தாய். அவர்: எழுவாய்; துங்கர்: பயனிலை. (அ0)

81. மாதம்பத் துந்திக் கனன்றவன் முன்சென்ற மாலுன்பர
மாதம்பத் துந்திக்கப் பாற்செல் புயத்தினை வானிற்கங்கை
மாதம்பத் துந்திக் கபாலித் தடாக மயிலையசெய்
மாதம்பத் துந்திக் கருத்தீர நானுனை வந்திக்கவே.

எ - து. மா தம்பத்து உந்தி கனன்றவன் முன்சென்ற மால் - பெரிய தூணினின்றும் இகழ்ச்சி சொல்லிக் கோபித்த இரணியன்முன் (நரசிங்க ரூபனாகிப்) போகிய திருமால், உன் பரமா - தியானிக்கும் சிவனே, தம் பத்து - கவசத்தொடு பொருந்தி, உ திக்கு அப்பால் செல் புயத்தினை - அந்த எண்டிசையினுக்கும் அப்புறஞ் சென்ற தோள்களையுடையாய், வானில் மாது அம்பு கங்கை - ஆகாயத்திற் பொருந்தும் பெண்வடிவும் நீர் வடிவும் உடைய கங்கையினை யொத்த, உந்தி கபாலி தடாகம் அத்து மயிலைய-சுழிகளையுடைய கபாலிதீர்த்தத்தைப்பொருந்திய திருமயிலைப்பதியில் வாழும் சிவனே, செய் - செய்வாயாக, மாதம் பத்து உந்தி கரு தீர நான் உன்னை வந்திக்கவே - பத்து மாதம் (தாய்) வயிற்றிற் பொருந்தும் சனன

வேதனை தீரும்படி அடியேன் உன்னை (மனமொழி மெய்களால்) வணங்கும்படி எ - று.

உன்னுதல் - நினைத்தல். தம்பம் - கவசம். அத்து: சாரியை. உந்திக்கு: உத்திக்கு என்பதன் விகாரம். அன்னுவயம்: வானிற் கங்கை மாதம்பு - வானில் மாது அம்புகங்கை; அத்து: சாரியை. நீ: தோன்றா எழுவாய்; செய்: பயனிலை. (அக)

82. திக்கய மஞ்சும் பெருவலித் தோளன்பர் திண்மதிக்குத்
திக்கய மஞ்சும்பொற் பூணுமொப் பாந்தமிழ்த் தேசவழு
திக்கய மஞ்சு நடைநரி மேவச்செய் தேவருத
திக்கய மஞ்சும்பர் சேர்கா மயிலையர் சீர்வரைக்கே.

எ - து. திக்கயம் அஞ்சும் பெருவலி தோள் அன்பர் திண்மதிக்கு - திசையானைகள் (எட்டும்) வெருவுதற்கேதுவாகிய பெரிய ஆற்றல் பொருந்திய தோளினையுடைய நம் தலைவரது கலங்காத அறிவினுக்கு, திக்கு - இகழப்பட்ட, அயம் மஞ்சும் பொன் பூணும் ஒப்பாம் - இரும்பாற் செய்த பணிகளும் பொன்னாற் செய்த பணிகளும் சமமாம், தமிழ் தேசம் வழுதிக்கு - தமிழ் நாடாகிய (தென் பூமியைப் புரக்கும்) பாண்டியனுக்கு, அயம் மஞ்சு நடை நரிமேவ செய்தேவர் - குதிரைக்குள்ள அழகினையும் ஐங்கதியினையும் நரிபொருந்தச் செய்த சங்கரர், உததி கயம் மஞ்சு உம்பர் சேர் கா - கடலினைப் போன்ற தடாகங்களும் மேகங்களைப் பொருந்திய ஆகாயத்தினைச் சேர்ந்த சோலைகளும் (செறிந்த), மயிலையர் சீர்வரைக்கே - திருமயிலைப்பதியில் வாழும் சிவனாரது புகழ் பொருந்திய மலையிடத்து. எ - று.

ஐங்கதி - மல்லகதி, மயூரகதி, வியாக்கிரகதி, வானரகதி, விடபகதி என்பன ஆம். துறை: தலைவி பாங்கிக்கு வாயின் மறுத்தல். இரும்புப் பணி யென்றது பரத்தையரை; பொற்பணி யென்றது தன்னை. அவை: எழுவாய்; ஆம்: பயனிலை. (அஉ)

83. சீராத்தி யாகமஞ் சஞ்சேர் பவன்பணி தென்மயிலைச்
சீராத்தி யாகமஞ் சேர்சடை யாயுயர் சேணமரர்
சீராத்தி யாகமஞ் சேர்கந் தாதுதி செய்பவர்க்குச்
சீராத்தி யாகமஞ் சன்பாதஞ் சிந்திக்குஞ் சித்தகல்கே.

எ - து. சீர அத்தி ஆகம் மஞ்சம் சேர்பவன்பணி - பாற்கடலின் மார்பாகிய மஞ்சத்தில் அறிதுயிலமர்ந்த திருமால் வணங்கும், தென்மயிலை சீர் ஆத்தியா - அழகிய திருமயிலைப்பதியில் வாழும் சிறந்த ஆத்தி மாலையை அணிந்தவனே, கம் - வெண்டலையும், அம் - கங்கையும், சேர்சடையாய் -

பொருந்திய சடை முடியையுடையவனே, உயர் சேண் அமரர் - உயர்ந்த ஆகாயத்தில் வாழும் தேவர்களுடைய, சீர் ஆத்தி ஆக - அழகிய எலும்பு மாலைகளை அணிந்த தேகத்தையுடையவனே, மஞ்சு எர் கந்தர - (நீருண்ட) மேகம் போலும் கரிய திருமிடற்றை யுடையவனே, துதி செய்பவர்க்கு - நின்னைத் தோத்திரஞ் செய்வார்க்கு, சீர் ஆ தியாக - சீர்த்தி பொருந்திய காமதேனுவைத் தியாகமாகக் கொடுப்பவனே, மஞ்சு உன் பாதம் சிந்திக்கும் சித்தம் நல்கே - (யமனையும் உதைக்கும்) வலியையுடைய நினது பாதத்தைத் தியானம் பண்ணும் நெஞ்சினை (அடியேனுக்குக்) கொடுப்பாயாக. எ - று.

சீராத்தி - பாற்கடல்; தீர்க்கசந்தி. அத்தி யென்பது ஆத்தியென முதல் நீண்டது. சீர் ஆ - சிறந்த காமதேனு. மஞ்சு - வலி. நீ: தோன்றா எழுவாய்; நல்கு: பயனிலை. (அங)

84. சித்த சனங்க டமையாண் மயிலையர் சேணுய்யயோ
சித்த சனங்கட னஞ்சாக்கொள் சங்கரர் சீர்வெற்பின
சித்த சனங்கடன் மானீக்கு மோவன்றித் தீர்க்கிடுமோ
சித்த சனங்கடல் செய்கின்ற தால்வருஞ் செல்லலையே.

எ - து. சித்த சனங்கள் தமை ஆள் மயிலையர் - (அணிமா முதலிய எண்வகைச் சித்திகளையுடைய) சித்தர்களை ஆட்கொள்ளும் திருமயிலைப் பதியில் வாழும் சிவனார், சேண் உய்ய யோசித்து - ஆகாயத்தின் மேவும் தேவர்கள் உயிர் வாழும்படிக்குத் திருவுள்ளத்தில் எண்ணி, கடல் நஞ்சு அசனமாய்க் கொள் சங்கரர் - கடலிடத்துண்டான நஞ்சத்தை அமுதமாக வுண்ட சங்கரரது, சீர் வெற்பில் - புகழ் பொருந்திய மலையிடத்து, அசம் நசித்து நம் கடன் மால் நீக்குமோ - ஆடு தனது உயிர் நீங்கி முறைமையுடைய நம் தலைவி மயலினைத் தவிர்க்குமோ, அன்றி தீர்த்திடுமோ-அதுவுமன்றித் தீர்க்க மாட்டுமோ, சித்தசன் அங்கு அடல் செய்கின்றதால் வரும் செல்லலையே - மன்மதன் அவளிடத்துப் போர் செய்தலால் அவட்கு வருகின்ற துன்பத்தினை. எ - று.

அன்னுவயம்: அசனங் கடனஞ்சாக்கொள் சங்கரர் - கடனஞ்சு அசனமாக் கொள் சங்கரர்; அசனம் - உணவு. நசித்தனங் கடன்மா னீக்குமோ- அசநசித்து நங்கடன் மானீக்குமோ; அசம் - ஆடு; நசித்து - இறந்து. செல்லல் - துன்பம். ஒகாரங்க ளெதிர்மறை. துறை: பாங்கி வெறிவிலக்கல். (அச)

85. செல்லா தவர்செய்ய வித்தூமம் பேரி சிலைத்தன்று
செல்லா தவர்செய்ய கைக்கொண் டாணஞ் சிதைத்தவன்விஞ்

செல்லா தவர்செய் யவனுதன் போற்றுஞ் சிவன்மயிலைச்
செல்லா தவர்செய்ய லாழ்கயம் போனையல் சேயிழையே.

எ - து. செல்லா - (கருநிறத்ததாய்ச் செறிந்து தோன்றுகின்ற இது) மேகமா, (அன்று), தவர் செய் அவி தூமம்-முனிவர்செய்யும்வேள்விப்புகையேயாம், சிலைத்தது பேரி - (இவ்வொலி) பேரிகை ஒலித்த ஒலி, செல் அன்று-இடியேற்றின் ஒலி அன்று, ஆ - (நீ ஒன்றனை ஒன்றாக மயங்கிக் கூறியது) அதிசயமேயாம், தவர் செய்ய கைக்கொண்டு அரணம் சிதைத்தவன் - (மேருவாகிய) வில்லினைச் சிவந்த திருக்கரத்திற் பிடித்து முப்புரத்தினையும் பொடி செய்த சிவன், விஞ்சு எல் ஆதவர்-மிகுந்தவொளியையுடைய (பன்னிருவராகிய) ஆதித்தியரும், செய்யவள்நாதன் - திருமகள் கணவனாகிய திருமாலும், போற்றும் சிவன் மயிலை செல்லாதவர் - துதிக்கும் சங்கரன் வாழும் திருமயிலைப்பதியிடத்துப் (பத்தியுடனே தரிசிக்கப்) போகாதார் போலவும், செய்யல் ஆழ்கயம் போல் - சேற்றிற் கால்கள் அழுந்திய யானை போலவும், நையல் சேயிழையே - வருந்தா தொழியாயாக, சிவந்த ஆபரணத்தை யுடைய தலைவியே. எ - று.

சிலைத்தல் - ஒலித்தல். தவர் - முனிவர், வில். போலென்பதைச் செல்லாதவரென்பதனோடும் கூட்டுக. செய்யல் - சேறு. ஆகார வினைக் குறிப்பான் அன்மை விளக்கி நின்றது. நீ: தோன்றா எழுவாய்; நையல்: பயனிலை. துறை: இருளைவம்பென்றல். (அரு)

86\. சேயம்மை காவலர்ப் பூம்பணை மேவுந் திருமயிலைச்
சேயம்மை காவல னான்மறை வேதன் சிரகரத்தான்
சேயம்மை காவல வாவெனு மீசன் சிறந்தகிளைச்
சேயம்மை காவலர் மெய்யில தாய்ச்செய் சிவசம்புவே.

எ - து. சேய்அ மை - விசும்பிடத்துளவாகிய அந்த மேகங்கள், கா அலர் பூ பணை மேவும் திருமயிலை - சோலையில் உண்டாகிய மலர்களையுடைய பொலிவு பொருந்திய கிளைகளில் தவழும் திருமயிலைப்பதியில் வாழும், சேய் அம்மை காவலன் - செவ்வாய்க்குத் தாயாகிய பூமியைக் காக்கும் சவுந்தர பாண்டியனானவன், நான்மறை வேதன் சிரம் கரத்தான் - நான்கு வேதத்தினையுடைய பிரமாவினது சிரதலைத் திருக்கரத்தில் தரித்தவன், சேய் - வேலாயுதக் கடவுள், அம்மை - அழகிய, வலவா கா எனும் ஈசன் - எல்லாம் வல்ல சித்தனே! ரட்சியென்று துதிக்கும் பரமசிவன், சிறந்த கிளை சேய் - சிறப்பினையுடைய வேய் ஈன்ற முத்தன், அம்மை-இனிமேல் வரும் பிறப்புக்களுள், கா - எடுக்கும், அலர் மெய் இல தாய் செய் - இகழ்ச்சி பொருந்திய உடலம் அடியேனுக்கு வாராமற் செய்கின்ற, சிவசம்புவே - மங்களத்தோடு பொருந்திய சிவனே. எ - று.

சேய் - தூரம், செவ்வாய். பணை - கிளை. அம்மை - தாய், அழகு, வரும் பிறப்பு. அன்னுவயம்: காவலவாவெனுமீசன்: வலவா காவெனு மீசன். கிளை - மூங்கில். சம்பு: வடமொழி; முற்று கரவீறு. (அசு)

87\. சம்பிர தக்கணப் பையர வார்க்கிடந் தண்மயிலை
சம்பிர தக்கணம் பாக னறுங்குல்லைத் தாமன்றுவ
சம்பிர தக்கணஞ் செய்யுங் கதிர்வையந் தங்கியகால்
சம்பிர தக்கண நாதர்கள் வெற்றித் தளகர்த்தரே.

எ - து. சம்பு இரதம் கணம் பை அரவார்க்கு - சம்புவாகிய அரை ஞாணை ஆயிரம் படங்களைப் பொருந்திய பாம்பினை அணிந்த சிவனுக்கு, இடம் தண்மயிலை - வாழும் இடம் குளிர்ந்த திருமயிலைப்பதியாம், சம்பு இரதக்கண் அம் பாகன் - பிரமா தேரின்கண் இருக்கும் அழகிய பாகனும், நறுங்குல்லை தாமன் துவசம் - மணம் பொருந்திய துளசிமாலையை யணிந்த திருமால் இடபக்கொடி, பிரதக்கணம் செய்யும் கதிர் வையம் தங்கிய கால் - (மேருவினை) வலஞ்செய்யும் சந்திரனும் சூரியனும் தேரிற்குப் பொருந்திய கால்களாம், சம்பிரதம் கணநாதர்கள் வெற்றி தளகர்த்தரே - அதிசயம் பொருந்திய பூதகணநாதர்கள் வெற்றியையுடைய படைத்தலைவ ராவர். எ - று.

இரதம் - அரைநாண், தேர். ச பிரமா. கதிர் - சூரிய சந்திரர். அவாய் நிலையான்வந்த ஆமென்பதனைத் தனித்தனி கூட்டுக; ஆவ ரென்பது வருவித்துரைக்கப்பட்டது. (அஎ)

88\. தளத்தாரு காசுரன் றன்னைவெஞ் சூரனைத் தாக்கியம்பொற்
றளத்தாரு காசுர வானவர்க் கீந்தவர் தந்தை பண்ணிந்
தளத்தாரு காசுர ரீசர் மயிலையர் தம்வரைக்காந்
தளத்தாரு காசுரஞ் சென்றவர் வார்த்தை சரதமன்றே.

எ - து. தளம் தாருகாசுரன் தன்னை வெஞ்சூரனை தாக்கி - படை களையுடைய தாருகாசுரனையும் கோபம் பொருந்திய சூரனையும் பொருது அம் பொன் தளம் தாரு காசு உர வானவர்க்கு ஈந்தவர் தந்தை - அழகிய பொன்மயமாகிய மலர்களையுடைய ஐந்தருவையும் சிந்தாமணியையும் மன வலியையுடைய தேவர்கட்குக் கொடுத்த வேலாயுதக் கடவுளுக்குப் பிதா, பண் இந்தளத்தார் - இந்தள மென்னும் பண்ணினையுடையார், உகம் ஆசு உரர் - பாம்பினைக் கவசமாக அணிந்த மார்பினையுடையவர், ஈசர் மயிலை யர்தம் வரை - திருமயிலைப்பதியில் வாழும் சிவனாரது மலைக்கண், காந்தள் அ தார் உகா - காந்தளின் (அலர்ந்த) அழகிய மலர்கள் கெடுதலுடையன

வல்ல (மேன்மேலும் மலரா நின்றன), சுரம் சென்றவர் வார்த்தை சரதம் அன்றே - (பொருளை விரும்பிக்) காட்டினைக் கடந்து சென்ற நம் தலைவர் (விரைந்து வருவமெனக் கூறிய) சொல் வாய்மையன்றாம். எ - று.

தளம் - சேனை; மலர்; ஆகுபெயர். உகம்: உரகமென்பது இடைக் குறைந்து நின்றது. துறை: கார்ப்பருவங் கண்ட தலைவி வருந்திக் கூறியது. (அஅ)

89. சரமண் டலத்தி னிசையென் செவிக்கட் டனஞ்சயன்கைச்
சரமண் டலத்திசை யிற்பொருட் கேகினர் தாமறியார்
சரமண் டலத்தி னசரம் வளர்ப்பவர் சங்கரர்கே
சரமண் டலத்தினைப்-போர்க்கு மயிலையர் தார்வரைக்கே.

எ - து. சரமண் டலத்தின் இசை-சுரமண்டலமென்னும் வாத்தியத் தின் ஒலி, என் செவிக்கண் தனஞ்சயன் கை சரம் மண்டல் - எனது செவியினுள் அருச்சுனனது கையில் எய்த அம்புகள் நுழைந்து நெருங்கு தல் போன்றதை, அ திசையில் பொருட்கு ஏகினர்தாம் அறியார் - வட திசைக்கண் பொருளைத் தேடுதற்குச் சென்ற என் தலைவர் அறிந்திலர், சரம் - இயங்குதிணைப் பொருளையும், மண் தலத்தின் அசரம் - பூமியின் கண் உள்ள நிலைத்திணைப் பொருளையும், வளர்ப்பவர் - (நாடோறும்) உண்டாக்குகின்றவர், சங்கரர் - (அவ்வுயிர்களுக்குச்) சுகத்தைச் செய்கின்ற வர், கேசரம் மண்டு அலத்தினை போர்க்கும் மயிலையர் - (சோலைமலர்களி னின்று உதிர்ந்த) பூந்தாதுக்கள் (வயல்களிற்) பொருந்திய கலப்பைகளைத் தெரியாமல் மறைக்கும் (வளப்பம் பொருந்திய) திருமயிலைப்பதியில் வாழும் சிவனாது, தார்வரைக்கே - ஒழுங்கு பொருந்திய மலையிடத்து. எ - று.

சரமண்டலம் - சுரமண்டலம்; பாகதச் சிதைவு; * "சீவகசாமி" என்றாற் போல. மண்டுதல் - நெருங்கல். துறை: தன் துயர் தலைவற்கு உரைத்தல் வேண்டல். மேல்தனஞ்சயனென வந்தமையின் அத்திசை யென் றது வடக்காயிற்று. இயங்குதிணைப் பொருளாவன:— தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீருறைவன என இவை. நிலைத்திணைப் பொருளாவன:— மலை மரமென இவை. அலம் - கலப்பை. ஏகினர்: எழுவாய்; அறியார்: பயனிலை. (அகூ)

90. தாரக மேயு மணம்போலென் னுருயிர் தன்னின்மன் னும்
தாரக மேயு மணமாந்தர் வாழ்நெய்தற் றங்குநிலத்

* சீவக. 6.

தாரக மேயு மணஞ்செய் மயிலைத் தடம்பதிவித்
தாரக மேயு மணம்புயல் போற்றந் தருளின்பமே.

எ - து. தார் அகம் எயும் மணம் போல் - பூவிடத்துப் பொருந்திய மணத்தைப் போல, என் ஆருயிர் தன்னில் மன்னும் தாரகமே - எனது அரிய உயிரில் நிலைபெற்றிருக்கும் தாரக மந்திரப் பொருளானவனே, உமண மாந்தர் வாழ் நெய்தல் தங்கும் நிலத்தார் அகம் - அளவர் வாழ்கின்ற நெய்தன் மலர்களைப் பொருந்திய நெய்தல் நிலத்தில் வாழும் பரவர் வீட்டின்கண், மேயும் மணம்செய் - விரும்பிய மணத்தைச் செய்தற்கிடமாகிய, மயிலைத்தடம்பதி வித்தார - திருமயிலை யென்னும் பெரியபதியாகிய இடத்தையுடையவனே, கம் மேயும் - (கடல்) நீரைப் பருகும், அண் - (மலையைப்) பொருந்திய, அம் புயல்போல் தந்தருள் இன்பமே - அழகிய மேகம் (கைம்மாறுவேண்டாது பெய்யுமுறை)போல(அடியேற்குப்) பேரின்பத்தைக் கொடுத்தருளுவாய். எ - று.

தாரகம் - பிரணவம். உமண்மாந்தர்-அளவர். கம் - நீர். நீ: தோன்றா எழுவாய்; தந்தருள்: பயனிலை. (கூ0)

91. இன்பந் தரக்கவி னெய்தச் சுதன்பணி யேகர்வெண்முத்
தின்பந் தரக்கவிச் சம்பந்தர்க் கீந்தவ ரேய்ந்தசெம்பொ
னின்பந் தரக்கவிழ் பூத்தன வாயுமை யீசர்பத்தி
யின்பந் தரக்கவிர் மேனி மயிலைக் கிறையவரே.

எ - து. இன்பம் தர - பேரின்பத்தைக் கொடுக்கும்பொருட்டு, கவின் எய்து அச்சுதன் பணி ஏகர் - அழகு பொருந்திய திருமால் வணங்கும் ஒப்பிலாத சிவனார், வெண் முத்து இன் பந்தர் அ கவிச் சம்பந்தர்க்கு ஈந்தவர் - வெள்ளிய முத்தினால் (தெய்வத் தன்மையுடனே செய்த) இனிய பந்தரைத் தமிழ் வேதமாகிய திருப்பதிகங்களை ஓதிய திருஞானசம்பந்தர்க்குக் கொடுத்தவர், ஏய்ந்த செம்பொனின் பந்து-(ஒளி) பொருந்திய சிவந்த பொன்னாற் செய்த பந்தினையும், அரக்கு அவிழ் பூ தனம் வாய் உமை ஈசர் - சிவப்புடனே அலர்ந்த ஆம்பற்பூவினைப் போன்ற கொங்கையினையும் அதரத்தினையும் உடைய உமாதேவியை (வாமபாகத்திலுள்ள) சங்கரர், பத்தியின் * பந்தர் - பத்தியாகிய வலையில் அகப்பட்டவர், அக்கு அவிர் மேனி மயிலைக்கு இறையவரே - சங்குமணி விளங்காநின்ற திருமேனியையுடைய திருமயிலைப்பதிக்குக் கர்த்தர். எ - று.

அவர்: எழுவாய்; இறையவர்: பயனிலை. (கூக)

* பந்தம் - வலை. "பத்திவலையிற் படுவோன் காண்க" திருவா.

92. வள்வார்க் கனகக் குடத்தனத் தாலிடை வாடிமெய்து
வள்வார்க் கனகநின் மாலைநல் காய்மக ரக்குழையார்
வள்வார்க் கனகஞ்சத் தாள்போற்று வார்க்கு வரமுதவும்
வள்வார்க் கனகர தென்மயி லைப்பதி வானவனே.

எ - து. வள் வார் கனகம் குடம் தனத்தால் - செறிந்த கச்சையணிந்த பொற்குடத்தை யொத்த முலைகளால், இடைவாடி மெய் துவள்வார்க்கு - இடை மெலிந்து உடலம் வருந்தும் மகளிர்க்கு, அனக நின் மாலை நல்காய் - அமலனே! நினது கொன்றைமாலையை அருளுவாயாக, மகரக்குழை ஆர் வள்வார் கன - மகரகுண்டலம் பொருந்திய நேரிதாய நீண்ட திருச்செவியை யுடையோனே, கஞ்சம் தாள் போற்றுவார்க்கு - நினது தாமரை மலர் போன்ற பாதத்தைத் துதிப்பார்க்கு, வரம் உதவும் வள் வார் கனம் கர-(வேண்டிய) வரங்களைக் கொடுக்கும் வலியினையுடைய நீருண்ட மேகம் போன்ற திருக் கரத்தையுடையவனே, தென்மயிலைப்பதி வானவனே - அழகிய திருமயிலைப்பதியின் வாழும் தேவதேவனே. எ - று.

கனம் - கன்னம்; விகாரம். கனம் - மேகம். துறை: பவனி கண்டு வருந்திய மகளிர் விடுத்த தூதியர் கூற்று.

நீ: தோன்று எழுவாய்; நல்காய்: பயனிலை. (கூஉ)

93. வானர வாலி தடக்கரை மேவு மயிலைநம்பா
வானர வாலி தடக்கயி லாய மனைவிகொள்க
வானர வாலி தடக்கய மாமுகன் வாழ்த்துஞ்செக்கர்
வானர வாலி தடக்கமென் றெண்ண வரமுதவே.

எ - து. வானரம் வாலி தடம் கரை மேவும் மயிலைநம்பா - வானர வடிவினையுடைய வாலிசெய்த தடாகத்தின் கரைக்கண் திருக்கோயில் கொண்டருளிய திருமயிலைப்பதியில் வாழும் சிவனே, வான் அரவு ஆலி - உயர்ச்சியை யுடைய வாசுகியிடத்தினின்றும்வந்த நஞ்சினையுண்டவனே, தட கயிலாய - விசாலம் பொருந்திய கயிலைமலையை யுடையவனே, மனைவி கொள் க வானர் - (இந்திராணியாகிய) மனையாளைப் பொருந்தும் குறங்கினையுடைய தேவேந்திரரும், அ ஆலி - வடவாலிலையிற் பள்ளிகொண்ட திருமாலும், தடம் கயம் மாமுகன் - மலையினை யொத்த ஆனைமுகத்தினையுடைய விநாயகனும், வாழ்த்தும் செக்கர் வான் அர - தோத்திரம் செய்யும் செக்கர் வானம் போலும் சிவந்த திருமேனியையுடைய சங்கரனே, வாலிது அடக்கம் என்று எண்ண வரம் உதவே - (மனமொழி மெய்கள்) அடங்கியிருக்கும் அடக்கமுடைமை செவ்விதென்று கருதும் வரத்தினைக் கொடுப்பாயாக. எ - று.

தடம் - குளம். வானரவாலி: வான் அரவு ஆலி எனப்பிரிக்க. கலான் - தொடை. அவ்வாலி - அவாலி; விகாரம். தடக்கய மா முகன் - பெருமை பொருந்திய யானைமுகனுமாம். வால் - சுத்தம். நீ: தோன்றா எழுவாய்; அருள்: பயனிலை. (கூரு)

94. வரதரம் போதி குடங்கையுட் கொண்டவர் வாழ்த்துமன
வரதரம் போதிப் பகவன் சமயம்வெல் வாசகர்தே
வரதரம் போதிணை யாமுமை பாகர் மலந்தவிர்தீ
வரதரம் போதிக்கு ஞானர் மயிலை மணிகண்டரே.

எ - து. வரதர் - (அடியார்க்கு வேண்டிய) வரத்தைக் கொடுப்பவர், அம்போதி குடங்கையுட் கொண்டவர் வாழ்த்தும் அனவரதர் - கடலினை (ஆசமனமாக) உள்ளங் கையிற் கொண்ட அகத்தியர் தோத்திரம் செய்யும் நித்தியர், அம் போதி பகவன் சமயம் வெல் - அழகிய அரச நிழலில் இருக்கும் புத்தனது சமயத்தை வெல்லும், * வாசகர் தேவர் - உத்தரத்தையுடைய சம்பந்த சரணலயருக்குக் கர்த்தர், அதரம் போது இணை ஆம் உமை பாகர் - இதழ் செவ்வாம்பற் பூவினையொத்த உமாதேவியை வாம பாகத்தில் உடையவர், மலம் தவிர் தீவரதரம் போதிக்கும் ஞானர்-ஆணவ மலம் தீர்தற்கு ஏதுவாகிய தீவரதர சத்திநிபாதத்தைப் (பொருந்திய காலத்தில் உயிர்களுக்கு) அனுக்கிரகம் செய்யும் ஞான உபதேசகர், மயிலை மணிகண்டரே - திருமயிலைப்பதியில் வாழும் நீலகண்டர். எ - று.

அம்போதி - கடல். போதி - அரசமரம். பகவன் - புத்தன். போது - இங்கே ஆம்பல். தீவரதரம் - அதிபக்குவம். அவர்: எழுவாய்; நீலகண்டர்: பயனிலை. (கூச)

95. கண்டிக்குப் பாலன சொற்கற் பகவல்லி கார்நிறச்சி
கண்டிக்குப் பாலருள் வோர்வேத நாதர்கங் காதரனார்
கண்டிக்குப் பாலன மென்றயின் றான்மலர்க் கஞ்சத்தினான்
கண்டிக்குப் பாலர் புகழு மயிலைக் கபாலத்தரே.

எ - து. கண்டு இக்கு பால் அன்ன சொல் கற்பகவல்லி - சற்கண்டினையும் கரும்பினையும் பாலினையும் ஒத்த மொழியையுடைய கற்பகவல்லியாகிய, கார் நிறம் சிகண்டிக்கு-நீல நிறத்தையுடைய மயிலுக்கு, பால் அருள்வோர் - வாமபாகத்தைக்கொடுத்தோர், வேதநாதர் - வேதத்தைத்திருவுளம் பற்றிய கர்த்தர், கங்காதரனார் - கங்கையைத் தரித்தவர், இகு பால் அன்னம் என்று கண்டு அயின்றான் - இந்தப் பூமியாகிய பகுதியை அன்ன

* வாசகர் - மாணிக்கவாசகரெனக் கொள்ளுதலும் பொருந்தும்.

மென்று கருதி யுண்ட திருமாலும், மலர் கஞ்சத்தினன் - தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமாவும், கண் திக்கு பாலர் - (உயிர்களிடத்து) இரக்கத்தைப்பொருந்திய அட்டதிக்குப் பாலர்களும், புகழும் மயிலை கபாலத்தரே - துதிக்கும் திருமயிலைப்பதியில் வாழும் கபாலீசுரர். எ - று.

சிகண்டி - மயில். பால் - பாகம். அன்னுவயம்: கண்டிக்குப் பாலன மென்றயின்றான் - இக்குப்பாலன மென்று கண்டயின்றான். கண் - உயிர்களிடத்து நோக்கம்.

அவர்: எழுவாய்; கபாலத்தர்: பயனிலை. (கூரு)

96. கபாலந் தரித்த கரத்தார் நகைக்கவுங் கானத்தின்மிக்
கபாலந் தரித்த கரத்தார்க் குழலியர் காதல்கொண்டென்
கபாலந் தரித்த கரத்தார் மயிலைக் கருத்தர்மெய்தக்
கபாலந் தரித்த கரத்தார்மெய்ஞ் ஞானக் கனிவரைந்தே.

எ - து. கபஆலம் - சிலேத்தும நோயாகிய விஷத்தை, தரித்து - சுமந்துகொண்டு, அகரத்தார் நகைக்கவும் - ஊரின் உள்ளார் இகழவும், கானத்தின் மிக்க பால் - இசைகளான் மிகுந்த (பாடற்) பகுதியினையுடைய, அந்த அரி - அந்த வண்டுகளையுடைய, தகரம் தார் குழலியர் - தகரமென்னும் சாந்தினையும் மாலையினையும் அணிந்த கூந்தலையுடைய மகளிரிடத்து, காதல்கொண்டு என்-ஆசையைவைத்ததனற் (பயன்) யாது? கபாலம்தரித்த கரத்தார் மயிலை கருத்தர் - பிரம கபாலந்தரித்த திருக் கரத்தையுடையவர் திருமயிலைப்பதியில் வாழும் சிவனார், மெய் - தமது திருமேனிக்கண்ணே, தக்க பால் - அழகிய வாமபாகத்திடத்து, அந்தரிதகரத்தார்-உமாதேவியையுடைய சூக்குமக்கியான சொரூபர், மெய்ஞ்ஞானம் கனிவரைந்தே -அவரது மெய்ஞ்ஞானமாகிய கனியினை நீக்கி. எ - று.

கபாலம் - கபம் ஆலம் எனவும், அந்தரி - அந்த அரியெனவும் பிரிக்க. தக்க - தகுந்த தகரம் - சாந்து, நுட்பம். சற்குருவினிடத்து வழிபட்டு ஞானோபதேசத்தைக் கேட்கவேண்டு மென்பது குறிப்பெச்சம். பயன்: தோன்றா எழுவாய்; என்: பயனிலை. (கூசா)

97. ககக்கேகைக் காகிக்கக் கைகக் ககிக்குகு கக்கைக்குகக்
ககக்கேகைக் காகிக்கக் காகிக்குக் கைக்கக்கொக் காக்கைகக்கூக்
ககக்கேகைக் காகிக்கக் குக்கீ குகக்கக்குக் கோக்கைக்கைக்கோ
ககக்கேகைக் காகிக்கக் கக்கேகைக் கூகுகை காக்குகைக்கே.

எ - து. ககக்கு - அம்பாகிய திருமாலுக்கும். [ககமென்பது அம்பு.]

ஏகைக்கு - (தொழிலாற் பல பேதமாயினும்) ஒன்றாந்தன்மையை யுடைய சத்திக்கும்.

[ஏகம், ஏகைக் கெனப் பெண்பாலாயிற்று.]

ஆகு - (தனது சந்நிதியில் திருச் சுடரைத் தூண்டிய) எலியாகிய மாவலிக்கும்.

இக்கு - இவ்விடமாகிய பூமிக்கும்.

[இங்கு, இக்கென விகாரம்.]

அக்கை - நீர் போல (நெகிழ்ச்சியையுடைய) விடத்தினை.

[கை - வெறுக்கும்படியாகிய விடம். அம்மென்னும் சொல்லீறு கெட்டு வல்லெழுத்துப் பெற்றது; விகாரமெனினும் அமையும்.]

கக்கு - (பல்லாகிய) வரம்பருகிலுள்ள.

[கங்கு, கக்கென விகாரம்.]

அகிக்கு - பாம்பாகிய பதஞ்சலிக்கும்.

உகு கக்கைக்கு - (ஆகாயத்தினின்று) ஒழுகும் கங்கைக்கும்.

[கங்கை, கக்கையென விகாரம்.]

உக - உயரச் செய்யும்.

ககக்கு - ஆகாயமாகிய (முத்திவீட்டிற்கும்.)

[ககத்துக்கென்பது ககக்கென வந்தது; அத்துச் சாரியை இடைக் குறை.]

ஏகு ஐக்கு - (வயிராக்கியத்தாற்) போன அழகினையுடைய.

[ஐயை யெனற்பாலது ஐக்கென்றாயது உருபுமயக்கம்]

ஆகிக்கு - உடலைப்பொருந்திய காரைக்காலம்மைக்கும்.

அக் காகிக்கு - அழகிய காக வாகனத்தையுடைய சனிபகவானுக்கும்.

[அங்காகி, அக்காகி யென விகாரம்.]

கைக்க - (தேவர்களை) வெறுத்தலால்.

கொக்கு ஆக்கை - மாமர வடிவாய் நின்ற சூரனது உடலம்.

[கொக்கு - மாமரம். ஆக்கை - உடல்.]

கக்கு ஊ - கக்குகின்ற இறைச்சியை.

[ஊ - இறைச்சி.]

ககக்கு - பருந்துகளுக்கு.

ஏ கைக்கு - சூரனாலேவப்பட்ட படையணிகளுக்கு.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

ஆகு - உண்டாகா நின்ற.

இக்கு - (மிகுந்த) கள்ளினைப் போல.

அக்குக்கி - அப்பேய்களின், கழுகுகளின் வயிற்றினுக்கு.

ஈ - கொடுக்கும்.

[ஈயென்பது ககக்கென்பதனோடும் இயையும்.]

குக்கீ - குக்கி ஈ; விகாரம்.

குக - வேலாயுதக்கடவுளுக்கும்.

கக்குக் கோக்கு - கழுகு (பூசித்த) மலையாகிய திருக்கழுக்குன்றத்திற்கும்.

[கக்கு, கக்கென விகாரம். கோ - மலை.]

ஐக்கை - வியப்புடைய ஒழுக்கத்திற்கும்.

கோ - கர்த்தனாகிய பரமசிவனது.

கம்கக்கே - அன்னவாகனத்தையுடைய பிரமாவிற்கும்.

[ககம்கே, ககக்கேயென விகாரமெனினும் அமையும்.]

கைக்காகு - (பிரமன்) கைவசமாகிய சரசுவதிக்கும்.

இக்கு - இத்தலமானது.

[கரும்பினையும் எனவும் பொருந்தும்.]

அக்கம் - (சிறந்த) கண்களை ஒக்கும்.

கேகை - கேகய புரியாகிய திருமயிலைப்பதியை.

[கேகயபுரியைக் கேகை யென்றது மரூஉ.]

கூ - (நெஞ்சமே, யாவரும் கேட்கக்) கூவித் துதிப்பாயாக.

கு - மலாந்தகாரமாகிய,

கை - சிறுமை (நின்னைப் பொருந்தாமல்)

காக்குகைக்கே - இரட்சிக்கும் பொருட்டு. எ - று.

பொழிப்பு:— திருமாலுக்கும், உமாதேவிக்கும், மாவலிச் சக்கரவர்த்திக்கும், பூமிக்கும், பதஞ்சலி பகவானுக்கும், கங்காதேவிக்கும், மோட்ச வீட்டிற்கும், காரைக்காலம்மைக்கும், சனிபகவானுக்கும், வேலாயுதக் கடவுளுக்கும், திருக்கழுக்குன்றத்திற்கும், உயிர்கள் செய்யும் நல்லொழுக்கத்திற்கும் கர்த்தனாகிய பரமசிவன் எழுந்தருளியிருக்குந் திருமயிலைப்பதியை நெஞ்சமே, தோத்திரஞ் செய்வாயாக, பஞ்ச பாசங்களும் உன்னைப் பொருந்தாமல் அவன் காக்கும் பொருட்டெனப் போந்தவாறறிக.

நீ: தோன்ற எழுவாய்; கூ: பயனிலை. (கஎ)

98. காவள் ளுவர்பத்த னேலேல சிங்கனுன் காலேவணங்
காவள் ளுவர்பத்த மாசு தவிர்த்த கலிங்கமொத்தான்
காவள் ளுவர்பத் தவதார மாயர் கருத்தறியார்
காவள் ளுவர்பத்தர் போற்று மயிலையிற் கண்ணுதலே.

எ - து. கா - (பூலோக) கற்பகதருவாகிய, வள்ளுவர் - திருவள்ளுவருடைய, பத்தன் - பத்தனாகிய, ஏலேல சிங்கன் உன் காலை வணங்கா - ஏலேல சிங்கன் நினது திருவடியை வணங்கி, வள் - காரமாகிய, உவர் - உவர் மண்ணினால், பத்தம்-(பத்தி) மறைந்துகொண்டிருந்த, மாசுதவிர்த்த- அழுக்கு நீங்கிய, கலிங்கம் ஒத்தான் - (வெள்ளாவியில் வெளுத்த) சீலை போல (ஆணவம் நீங்கி ஞானத்தைப்) பொருந்தினான், கா அள்ளுவர் - (இம்முறைமையை அறியாது உலகத்தார்) பாசக்காவாகிய சுமையை எடுத்துக்கொள்ளுவார்கள் (அதுவுமன்றி), பத்து அவதாரம் மாயர் - (மச்சம் கூர்மம் முதலிய) பத்து அவதாரத்தினையுடைய மாயனாரும், கருத்து அறியார் - இந்த உள்ளீட்டினை அறிந்திலர் போலும், கா வள்ளுவர் - சரசுவதியைப் பொருந்திய வலிய பிரமரும், பத்தர்-சம்பந்த மூர்த்தியும், போற்றும் மயிலையில் கண்ணுதலே - தோத்திரஞ் செய்யும் திருமயிலைப்பதியில் வாழும் நெற்றிக்கண்ணையுடைய சிவனே. எ - று.

கா - தரு, காவுதல், சரசுவதி. வள் - காரம். கலிங்கம் - வஸ்திரம். கா அள்ளுவர் - காவை எடுப்பர்; காவப்படுதலிற் சுமை காவாயிற்று. வள்ளுவர் - வலிய பிரமன். கண்ணுதலென்பது முன்பின்னாகத் தொக்க வேற்றுமைத் தொகை நிலைக்களத்துப்பிறந்த அன்மொழித் தொகை. (கூஅ)

99. நுதற்றா னவனிக ராகும் பிறைந்தைமெய் நோக்கியன்புன்
னுதற்றா னவனிகல் வென்றோன் மயிலையி னுண்ணறிவோன்
நுதற்றா னவனிகர்ப் பன்னக கங்கண னோன்மையைப்பன்
னுதற்றா னவனி கசனங் தருந்கரு தூற்றிருவே.

எ - து. நுதல் தானவன் நிகர் ஆகும் பிறைந்தை - நெற்றி பிறையினையொத்த பிறைந்தையினது, மெய் நோக்கி - உடலினது அழகைப் பார்த்து, அன்பு உன்னுதல் தானவன் - அவளிடத்து அன்பினை இடைவிடாமல் நினைத்துக்கொண்டிருக்கின்ற சலந்தராசுரனது, இகல் வென்றோன் - வலியைவென்ற சிவன்; மயிலையில் நுண் அறிவோன் - திருமயிலைப்பதியில் வாழும் ஞான சொரூபன், நுதல் தானம் - (யாவராலும்) கருதப்படும் பாதாள லோகத்திருக்கும், வல் நிகர் பன்னகம் கங்கணன் - பலத்தினையும் ஒளியினையும் உடைய பாம்பினைக் கடகமாகவுடையவனது, நோன்மையை பன்னுதல்தான் - (அறுபத்துநாலு) பராக்கிரமத்தையும் எடுத்துத் துதிக்

கின்ற செயல்தான், அவனி ககனம் தரும் - பூலோக அரசாட்சியினையும் சொர்க்காதிகாரத்தினையும் கொடுக்கும், தரும் நூல்திருவே - கல்விச்செல் வத்தையும் கொடுக்கும். எ - று.

தானவன் - சந்திரன், சலந்தரன். வனிசர்: வல் - பலம், நிகர் - ஒளி. நூற்றிருவென்றது அறுபத்து நாலு கலைஞானத்தை.

பன்னுதல்: எழுவாய்; தரும்: பயனிலை. (௯௯)

100. திருத்தனந் தந்தமென் வண்டார் மலர்ப்பந்து திங்களின்க
திருத்தனந் தந்த நகைமட வார்துனி தீரவுள்ளம்
திருத்தனந் தந்தமர் நீங்கா மயிலைய செங்கமலத்
திருத்தனந் தந்தருட் செல்வமுந் தந்தருள் சீர்பெறவே.

எ - து. திரு தனந்தந்தம் என் வண்டு ஆர் மலர் பந்து - சிறப் புடனே தனந்தந்தமென இசைகளைப் பாடாநின்ற வண்டுகள் வந்து தங் கும் (மகரந்தங்களையும் தேன்களையுமுடைய) பூச்செண்டுகளையும், திங்க ளின்கதிர்-(கலைகள் நிறைந்த) சந்திரனது நிலவினையும் ஒக்கும், உ தனம் தந்தம் நகை மடவார் - கச்சினை யணிந்த தனங்களையும் முறுவலினது ஒளியையும் பொருந்திய பருவமங்கையர்களது, துனிதீர - ஊடல்களைத் தவிர்க்கும் பொருட்டு (அவர் மாட்டுச் சென்று), உள்ளம் திருத்து அனம் - (இனிய மொழிகளைக் கூறி) மனங்களைச் செவ்விதாகச் செய்யும் அரச வன்னங்கள், தம்தமர் நீங்கா மயிலைய-தமது சுற்றங்களுடனே கூட (எக்காலத் தும் சிறந்திருக்கும் மலர் வாவிகள் சூழ்ந்த) திருமயிலைப்பதியில் வாழும் கபாலீசுரனே, செங்கமலம் திரு - (அடியேற்குச்) செந்தாமரைப் பூவினில் வீற்றிருக்கும் திருமகளினையும், தனம் தந்து - (எப்பொழுதும் நீங்காத) நிதிச் செல்வத்தினையும் கொடுத்து, அருள் செல்வமும் தந்து - (பேரின்பத் தினை உதவும்) ஞானச் செல்வத்தினையும் கொடுத்து, அருள் சீர்பெறவே - கீர்த்தியுண்டாகும் வண்ணம் நின் கருணை செய்வாயாக. எ - று.

தனந்தந்தம்: இசைத்தாளம். துனி - ஊடல். நீ: தோன்றா எழு வாய்; அருள்: பயனிலை. (௧௦௦)

திருமயிலை யமக வந்தாதி
மூலமும் உரையும் முற்றுப்பெற்றன.

வாழ்த்து.

பார்வா ழியவந் தணர்வேத வாகமம் பார்த்திபர்நற்
கார்வாழி சைவ தவப்பாலர் வாழி கவின்வசியர்
ஏர்வாழி மேழிக் கொடிவேந்தர் வாழியெம் மீசர்பொற்றாட்
சீர்வாழி வாழி மயிலையந் தாதிச் செழுந்தமிழே.

அரங்கேற்றியவர்.

தண்பார் துதிக்கு மயிலையந் தாதி சயிலநல்கும்
பெண்பாகந் தந்தருள் சிங்கார வேலவர் பிள்ளைத்தமிழ்
வெண்பாவிம் மூன்று மறங்கேறச் செய்தனன் மேன்மைபெற்றான்.
பண்பா வலர்புகழ் பூம்பாவை வேலன்மெய்ப் பாக்கியனே.

இயற்றியவர்.

நற்படி மேற்சந்தி ராதித்தர் நிற்கின்ற நாளுமகிழ்ந்
தற்படி யேங்கற்க நிற்க மயிலையந் தாதிதனைப்
பொற்படி வத்திருப் பூம்பாவை வேலன் புகலெனுங்கா
தற்படி யோதினன் றாண்டவ ராய தமிச்சிங்கமே.

MAHAMAHOPADHYAYA DR. V SWAMINATHA AIYAR LIBRARY ADYAR MA...

'சிவநேசன்'

பலவான்குடி.

ஸ்ரீ மகாமகோபாத்தியாய

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்

பதிப்பித்த நூல்கள்.

	ரூ.	அ.
சீவக சிந்தாமணி, நச்சினார்க்கினியருரை ...	10	0
சிலப்பதிகாரம் மூலமும் உரைகளும் ...	6	4
மணிமேகலை மூலமும் உரையும் ...	5	0
பெருங்கதை-பலவகைக் குறிப்புக்களுடன் ...	7	0
பெருங்கதை மூலம் ...	3	0
பெருங்கதை - இலாவாண காண்டம் ...	1	8
உதயண குமாரகாவியம் ...	0	6
பத்துப்பாட்டு - நச்சினார்க்கினியருரை ...	5	0
பத்துப்பாட்டு மூலம் ...	1	0
ஐங்குறுநூறு - பழைய உரை ...	2	0
பதிற்றுப்பத்து - பழைய உரை ...	1	14
பரிபாடல் - பரிமேலழகருரை ...	2	0
புறநானூறு - பழைய உரை ...	5	0
புறநானூறு மூலம் ...	1	8
புறப்பொருள் வெண்பாமாலை - பழைய உரை ...	1	9
நன்னூல் - மயிலைநாதருரை ...	3	2
நன்னூல் - சங்கரநமச்சிவாயருரை ...	3	0
தக்கயாகப் பரணி - பழய உரை ...	4	0
பாசவதைப் பரணி ...	12	0
திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம் ...	0	4
திருக்காளத்தி நாதருலா ...	0	5
திருப்பூவணநாதருலா ...	0	5
தேவையுலா ...	0	4
சொக்கநாதருலா ...	0	6
கடம்பர் கோயில் உலா ...	0	6

சங்கரலிங்க உலா	...	0	6
திரு இலஞ்சி முருகன் உலா	...	0	5
மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடுதூது	...	0	5
கச்சி ஆனந்த ருத்திரேசர் வண்டுவிடு தூது	...	0	8
பத்மகிரிநாதர் தென்றல் விடுதூது	...	0	4
மான்விடுதூது	...	0	6
திருவாவடுதுறைக்கோவை	..	0	10
கலைசைக்கோவை	...	0	12
பழமலைக்கோவை	...	0	10
மதுரைச் சொக்கநாதர் மும்மணிக்கோவை	...	0	5
வலிவல மும்மணிக்கோவை	...	0	5
திருமயிலைத் திரிபந்தாதி	...	0	5
சங்கரநயினார் கோயிலந்தாதி	...	0	6
பழனிப் பிள்ளைத் தமிழ்	...	0	3
திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா	...	0	4
கொட்டையூர் ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள்		2	8
ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட்டு		5	10
திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்	...	2	8
விளத்தொட்டிப் புராணம்	...	0	6
ஆற்றூர்ப் புராணம்	...	0	10
திருவாரூர்த் தியாகராசலீலை	...	0	12

வசனம்.

புத்த சரித்திரம், பௌத்த தருமம், பௌத்த சங்கம்	...	0	12
மணிமேகலைக் கதைச் சுருக்கம்	...	0	10
உதயணன் சரித்திரச் சுருக்கம்	...	1	
ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் முதற்பாகம்		2	
ஷை இரண்டாம் பாகம்	...	2	
நான் கண்டதும் கேட்டதும்	...	0	

IYER LIBRARY
NAGAR, MADRAS-600 090.